Registered as a News Paper in Sri lanka

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 24 ஞாயிற்றுக்கிழமை (09.08.2015) பக்கங்கள் 20 ஓசை – 312

# ஜனாதிபதியின் பாதுகாப்பு சிறப்பு அதிரடிப்படை வசம்

## முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு பிரிவும் மாற்றம்

(கொழும்பு)

**முன்னைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற படுகொலைகளுடன் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தொடர்புபட்டுள்ளதாக கிடைத்துள்ள அறிக்கைகளை அடுத்து மிக முக்கிய பிரமுகர்களுக் கான பாதுகாப்புப் பிரிவை உடனடியாக மாற்றிய மைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.**

இதையடுத்து. உடனடியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு பாதுகாப்பு வழங்கி வந்த பொலிஸாரின் பாதுகாப்புப் பிரிவு விலக்கப்பட்டு, அவர்க ளுக்குப் பதிலாக சிறப்பு அதி ரடிப்படையினர் நியமிக்கப்பட் டுள்ளனர்.

ஏற்கனவே மைத்திரிபால சிறிசேனவுக்கு சிறப்பு அதிர டிப்படையினரின் சிறிய அணி யொன்று உள்வட்டப் பாதுகாப் புப் பணியில் ஈடுபட்டுள்ள நிலையில், தற்போது முழுப்பாது காப்பும் அதனிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு முற்றிலுமாக நீக்கப்பட்டு, சிறப்பு அதிரடிப்படையினர் நியமிக் கப்படவுள்ளதாக, பெயரை வெளியிட விரும்பாத அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.

இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், இது 48 மணிநேரத்தில் நிறைவடையும் என்றும் அந்த அதிகாரி கூறியுள் ளார்.



பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீனை ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த மூவரே படு கொலை செய்திருப்பதாக, அமைச் சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன அறிவித்திருந்த நிலையில், இந்த மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவையும், அதிபர் பாதுகாப்புப் பிரிவினரே தாக்கியிருந்தனர்.

இதுபற்றிய காணொளிப் பதிவுகளில் தாக்கியவர்கள் தெளிவாக அடையாளம் காணப்பட்ட போதும், முன்னைய அரசாங்கம் அதனை மறைத்து விட்டது.

மகிந்த ராஜபக்சவின் பாது காப்பில் ஈடுபட்ட ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவை எந்த மாற்ற மும் இன்றி தொடர்ந்தும் தனது பாதுகாப்புக்கு வைத்துக் கொண் டது குறித்து மைத்திரிபால சிறி சேனவிடம் ஏற்கனவே முறைப் பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைவரான எஸ்.எம்.விக்கிர மசிங்க கூட மாற்றப்படவில்லை.

கடந்த ஏப்ரல் மாதம் அங்குன கொலபெலஸ்ஸவில் ஜனாதிபதி யின் பாதுகாப்பு வளையம்

19 ஆம் பக்கம் பார்க்க

# மைத்திரி ஜனநாயகவாதி புகழ்கிறார் சம்பந்தன்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஒரு ஜனநாயக வாதியெனவும், அவர் நாட்டி லுள்ள பிரச்சினைகளுக்கு தீர் வினைக் காண்பதற்காக அர்ப்ப ணிப்புடன் செயற்ப்பட்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின தலைவர் இரா.சம்பந்தன் குறிப் பிட்டுள்ளார்.

அம்பாறை காரைதீவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரி வித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த பிரசாரக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர், மகாத்மா காந்தி, மார்டின் ஜோசப கிங், நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்கள் தங்கள் நாட்டு மக்களின் சுதந்திரத்திற்காகவும், உரிமைக்காகவும் போராடி யவர்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால

19 ஆம் பக்கம் பார்க்க

# உள்ளக விசாரணையில் வடமாகாண சபை இணைப்பு அறிக்கை வந்த பின்பே முடிவு

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள உள்ளக விசாரணை செயற்பாட்டில் வடக்கு மாகாண சபையை இணைத் துக் கொள்வதா, இல்லையா என்பது குறித்து ஐ.நா. அறிக்கை வெளிவந்த பின்னரே தீர்மானிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச இதனைத் தெரிவித்துள்ளார்.


ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணை அறிக்கை

19 ஆம் பக்கம் பார்க்க




# இரண்டரைக் கோடி ரூபா கஞ்சா தொண்டைமானாறில் சிக்கியது

## ஏழாலையைச் சேர்ந்த நால்வர் கைது



(யாழ்ப்பாணம்)

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மிகவும் சாதுரியமான முறையில் அவர்கள் மேற்கொண்ட நடவ டிக்கையினால் தொண்டைம னாறு பகுதியில் இரண்டு கோடி பெறுமதியான கஞ்சா மீட்கப் பட்டுள்ளதுடன் இதனுடன் தொடர் புடைய நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் இதற்கு பயன்படுத்தப்பட்ட வடிரக வாகனமும் கைப்பற்றப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவ தாவது,

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜப்பார் வல்வெட்டித் துறை பொலிஸ் பொறுப்பதிகாரி ரி.எஸ்.மீடின் ஆகியோருக்கு கிடைத்த இரகசிய் தகவலை அடுத்து தொண் டைமானாறு காட்டுக்குழி எனுமிடத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க


### அலைபேசியால் வந்த வினை


# இரண்டு மாணவர்களுக்கு பரீட்சை எழுதத்தடை

(கொழும்பு)

கல்விப்பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை நடைபெற்றுக்கொண்டி ருக்கின்ற பரீட்சை மத்தியநிலையத் துக்குள் அலைபேசியை எடுத்துச் சென்ற மாணவர்கள் இருவருக்கு பரீட்சை தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டப்ளியு. எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித் துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க




வரலாற்றுப் புகழ் மிக்க சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியின் மாவை ஆதீனப் பேரரசு மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவில் வருடாந்த ஆடிக் கார்த்திகை பெருவிழாவையிட்டு நேற்றுக் காலை முதல் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெற்றன. விசேடமாக கார்த்திகை உற்சவத்தை முன்னிட்டு அடியவர்கள் முருகனுக்கு சாமை, தினை கொண்டு மா விளக்கிட்டதுடன் அடியவர்களினால் காவடிகளும் எடுத்துவரப்பட்டன. (01)

# தேர்தலில் மக்கள் வெற்றியடைந்தால் மக்களின் தேவை நிறைவேற்றப்படும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்




(வட்டக்கச்சி)

தேர்தல்களில் மக்களே வெற்றியடையும் பண்பாடு உருவாக்கப்பட வேண்டும். அப்படியான ஒரு பண்பாடு உருவாக வேண்டும் என்றால், மக்களோடு ஒன்றாக நின்று மக்களுக்காக உழைக்கின்றவர்களை மக்கள் ஆதரிக்க வேண்டும். பொய்யான வாக்குறுதிகளை வழங்கிக் காலத்துக்குக் காலம் மக்களை ஏமாற்றும் கூட்டத்தினரை மக்கள் இனங்கண்டு ஒதுக்கி, ஓரங்கட்ட வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் வெற்றியடையும் வரலாறு உருவாகும். அதுதான் உண்மையான மாற்றமாகும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை வட்டக்கச்சியில் நடைபெற்ற மக்கள் ஆதரவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் அங்கு தெரிவிக்கையில்,

தேர்தல் காலத்தில் மட்டும் மக்களைத் தேடி வருகின்ற அரசியல்வாதிகளை மக்கள் இனங்காணக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இதுவாகும். இதுவரையும் எங்கே இருந்தார்கள் என்று தெரியாமல் எங்கெங்கோ இருந்தவர்கள் எல்லாம் தேர்தல் என்றவுடன் ஓடோடி வந்திருக்கிறார்கள்.

மக்களின் மீது திடீரென இவர்களுக்குப் பாசம் பொங்கியிருக்கிறது. ஏராளம் வாக்குறுதிகளை அள்ளி அள்ளி வழங்குகிறார்கள்.

தாங்கள் சொல்கின்ற சமஷ்டி என்பதை எப்படி பெறுவோம் என்று இவர்கள் விளக்கவில்லை. அதற்கான உத்தரவாதத்தைப் பற்றிச் சொல்லவில்லை. அல்லது தாங்கள் வழங்குகின்ற வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றுவது, அதை எவ்வளவு காலப் பகுதிக்குள் நிறைவேற்றுவது என்பதைப்பற்றியெல்லாம் வாய் திறக்காமல் மக்களை ஏமாற்ற நினைக்கிறார்கள்.

தமிழுணர்வின் பெயரால் தமிழ் மக்களை தமிழ்த் தரப்புகள் இப்படித்தான் காலாகாலமாக ஏமாற்றி வருகின்றன. மக்கள் பல சந்தர்ப்பங்களை இந்தத் தமிழ்த்தலைமைகளுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

அதனைத் தமிழ்த்தலைமைகள் உரிய முறையில் பயன்படுத்தி, தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிக்கவில்லை. மக்களுக்குத் தேவையான அடிப்படைகளைக் கூட உருவாக்கவில்லை. ஆகவேதான இதுவரையான உங்கள் நாடாளுமன்ற அரசியல் வரலாற்றில் நீங்கள் எதனைச் சாதித்தீர்கள்?

இந்த இனத்துக்காக எத்தகைய தியாகங்களைச் செய்தீர்கள்? இந்த மக்களுக்காக எதையெல்லாம் இழந்தீர்கள்? என்று நாம் கேட்க வேண்டியுள்ளது.

மக்கள் இன்று எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதை மக்களுடன் ஒன்றாக இருந்து பார்க்கும் போதுதான் புரியும். மீள் குடியேறிய மக்களுக்கு இன்னும் பல தேவைகள் உள்ளன.

அநேகமான மக்கள் இன்னும் கடனாளிகளாகவே உள்ளனர். போர் எல்லோருடைய சேமிப்பையும் அழித்ததால் மக்கள் மீள எழுச்சியடைவதற்கு இன்னும் பல உதவிகள் தேவையாக உள்ளன. இதைப் புரிந்து கொண்டு யார் எமது மக்களுக்காக உழைத்திருக்கிறார்கள்? அப்படி உழைத்திருந்தால் இன்று எமது மக்கள் கடனாளிகளாகவும் கவலைப்படுவோராகவும் இருக்க மாட்டார்கள்.

இன்று மக்களை ஏமாற்றுவதற்கு பலரும் பல தந்திரங்களைச் செய்கிறார்கள். மக்கள் பின்தங்கிய நிலையில் இருந்தால், பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தால் அதை வைத்தே தமது அரசியல் வியாபாரத்தைச் செய்யலாம் என்று நம்புகிறார்கள்.

அப்படி ஒரு காலம் இருந்தது உண்மை. ஆனால், இனி அதற்கெல்லாம் இடமில்லை. இனி வரும் காலம் மக்களின் காலமாகும். எங்களுடைய மக்கள் எவராலும் ஏமாற்றப்பட்ட மக்களாக தொடர்ந்தும் இருக்கக் கூடாது. இதையே நான் விரும்புகிறேன்.

நீண்டகாலமாக மக்கள் சொல்லொணாத் துயரங்களைச் சுமந்தவர்களாக உள்ளனர். இந்த நிலை இனியும் தொடரக் கூடாது. ஆகவே, நாங்கள் எங்கள் அவலங்களுக்கெல்லாம் முடிவைக் கட்டுவோம். அதற்கான முதலாவது படிக்கல்லாக இந்தத் தேர்தலைப் பயன்படுத்திக் கொள்வோம். மக்களே வரலாற்றைப் படைக்கும் மகத்தான சக்திகள் என்ற வரலாற்று உண்மையை மீண்டும் நிலைநாட்டிக் காட்டுவோம் என்றார்.

# குழு மோதல் அறுவர் காயம்

(யாழ்ப்பாணம்)

துன்னாலை தெற்கு கரவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இளைஞர் குழுக்களுக்கிடையிலான மோதலில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

துன்னாலை தெற்குப் பகுதியினைச் சேர்ந்த இரு இளைஞர் குழுக்களுக்கிடையே காணப்பட்ட தனிப்பட்ட பகை காரணமாக இக்குழு மோதல் இடம் பெற்றுள்ளது.

இம்மோதல் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வி.வினோத் (வயது - 20), ப.வினோதன் (வயது - 40), கு.கிருபலசிங்கம் (வயது - 47), சு.சுகிதன் (வயது - 23), க.தமிழ்ச்செல்வன் (வயது - 20), ச.சகுந்தன் (வயது - 20) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, இத்தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் முனனெடுத்து வருகின்றனர். (18)

# பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

உடுவில் பிரதேச செயலர் பிரவில் உள்ள சில பாடசாலைகளினது தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்காக (வாழ்வின் எழுச்சி) திவிநெகும 2015 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிக்கு பத்து இலட்சம் ரூபாவும், உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு எட்டு இலட்சம் ரூபாவும், ஏழாலை சன்மார்க்க முன்பள்ளிக்கு பத்து இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியினைக் கொண்டு பாடசாலையினது அத்தியாவசிய வேலைகளைச் செய்து முடிப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# "நாட்டிற்கு சிறந்த தலைவரை தெரிவு செய்வது எப்படி"

## கிளிநொச்சியில் செயலமர்வு



மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில், நாட்டிற்கு சிறந்த 'தலைவரை தெரிவு செய்வது எப்படி' என்ற தொனிப் பொருளிலான செயலமர்வு கிளிநொச்சியில் நடைபெற்றது.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் கனகபுரம் விளையாட்டரங்கில் ஆரம்பமான இந்த நிகழ்வில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் இருந்து வரவழைக்கப்பட்ட 2 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர்.

நாடாளுமன்றத் தேர்தலில் சிறந்த தலைவர்களைத் தெரிவு செய்வது எவ்வாறு என்பது தொடர்பில் விளக்கங்கள் வழங்கப்பட்டு வருவதுடன், நாடகங்கள், பொம்மலாட்டுக்கள், கலை நிகழ்வுகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றியுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தேர்தல் தொடர்பில் விளக்கமளிக்கப்படும் அதே வேளை, அவர்கள் தத்தமது கிராமங்களிற்கு சென்று வாக்களித்தல் தொடர்பிலான விழிப்புணர்வை கிராம மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்பதே ஏற்பாட்டாளர்களின் எதிர்பார்ப்பாகும்.

# பக்தநந்தனார் நாடக ஆற்றுகை


(யாழ்ப்பாணம்)

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் பி.ப. 5.00 மணியளவில் இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையினரின் "பக்த நந்தனார் - இசை நாடகம்" ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு மன்றத் தலைவர் சு.சுந்தரசிவம் தலைமை தாங்குகின்றார்.

அனுமதி இலவசம் என்பதுடன், அனைவரையும் இவ் ஆற்றுகையைக் கண்டு களிக்குமாறு மறுமலர்ச்சி மன்ற நிர்வாகம் கேட்டுள்ளது.





ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



மௌனமாய் இரு ஆழமாய் யோசி
வலியதாய் நம்பு உலகம் உன்கையில்.
அன்புவழியூர் கவிராயர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## புதிய முடிவை எடுப்போம்!

2016–ல் தீர்வு நிச்சயம் என்று திரும்பத் திரும்ப முழங்கிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மறுபக்கம் இப்போதுதான் மைத்திரி, ரணில், மகிந்த ஆகியோரிடம் நீதி நியாயம் பற்றிய கேள்வியைக் கேட்டு விடையை எதிர்பார்க்கிறார்.

அவர்கள் சொல்வதைத்தான் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே.... பிறகு எதற்காக திருவிளையாடல் தருமி போல இவர் கேள்விகளை மட்டும் கேட்டுக் கொண்டிருக்கிறார்?

தேர்தல் முடிந்தவுடன் "சிங்கள அரசாங்கங்கள் ஒருபோதும் தமிழர்க்கான தீர்வைத் தரப்போவதில்லை" என்பார். அவ்வளவுதான். அவர் வாயிலிருந்து மீண்டும் தீர்வு கிடைக்கப்போகும் திகதியை அறிய அடுத்த தேர்தல் வரை காத்திருக்க வேண்டும்.

தீர்வு வந்துவிடக் கூடாது என்றே இவர்கள் பேசியும் செயற்பட்டும வருவதைப் பல ஆண்டுகளாகப் பார்க்கிறோம். மக்களுக்கு நல்லது எதுவும் நடக்கவில்லை; நடக்கவும் மாட்டாது என்பதையே திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

நடக்க முடியாத விஷயங்கள் பற்றி மட்டுமே அவர்கள் பேசுவார்கள். அதையே பிரலாபித்துத் தேர்தல்களுக்கு வந்து கொண்டிருப்பார்கள். இவர்களைப் புரிந்துகொள்ள ஒரு குட்டிக்கதையைப் பார்க்கலாம்:

"ஒரு வெள்ளைத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் நடுவே ஒரு கோடு வரையுங்கள். வலதுபுறம் பெரிதாய் + குறியிட்டு உங்களுக்கு கிடைத்திருக்கும் நல்ல விஷயங்களை எழுதுங்கள். இடது புறம் – குறியிட்டு உங்களுக்கு இருக்கும் பிரச்சினைகளையும், தீமைகளையும் எழுதுங்கள். நீங்கள் எந்த அளவு அதிர்ஷ்டக்காரர் என்பதை அதிலிருந்து உங்களால் உணர முடியும்" என்று ஒரு சொற்பொழிவில் சொல்லி அப்போதே எழுதிப் பார்க்கச் சொன்னார் அந்த அறிஞர்.

எழுதியவர்களில் பெரும்பாலானோருக்கு – குறியில் தான் எழுத நிறைய இருந்தது. – குறியில் பெரிய பட்டியல் இட்டிருந்த முத்து என்பவரைத் தன்னிடம் அழைத்தார். + குறியில் எழுத ஒன்றுமே இல்லை என்று எதுவுமே எழுதாமல் விட்டிருந்தார் முத்து.

அறிஞர் முத்துவிடம் கேட்டார். "உங்கள் மனைவி உங்களைப் பிரிந்து எவ்வளவு காலம் ஆகிறது?"

முத்துவிற்குக் கோபம் வந்து விட்டது. "என் மனைவி என்னை விட்டுப் பிரிந்து விட்டதாக யார் சொன்னது? என்னுடன் தான் இருக்கிறாள். நாங்கள் அன்பாகத் தான் இருக்கிறோம்"

அறிஞர் + பகுதியில் கொட்டை எழுத்தில் எழுதினார். "அன்பான மனைவி உடன் இருக்கிறாள்"

பின் முத்துவிடம் கேட்டார். "உங்கள் குழந்தைகள் எந்த ஜெயிலில் இருக்கிறார்கள்?"

அறிஞராக இருந்து கொண்டு இப்படி ஏடாகூடமாகக் கேட்கிறாரே என்று கோபத்துடன் முத்து சொன்னார். "என் பிள்ளைகள் நல்லவர்கள். ஜெயிலுக்குப் போகிற அளவில் மோசமாய் இல்லை"

அறிஞர் + பகுதியில் அடுத்ததாக எழுதினார். "நல்ல பிள்ளைகள் இருக்கிறார்கள்"

பின் அறிஞர் கேட்டார். "உங்கள் வியாதிக்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா?"

முத்து பொறுமையை இழந்தார். "மருந்து கண்டுபிடிக்காத வியாதி எல்லாம் எனக்கு இல்லை.."

அறிஞர் + பகுதியில் எழுதினார். "கொடிய வியாதி இல்லை"

இப்படியே முத்து சிறிதும் எதிர்பார்த்திருக்காத கேள்விகள் சிலவற்றைக் கேட்டு + பகுதியில் எழுதிக்கொண்டு போன அறிஞர் ஒரு கட்டத்தில் நிறுத்தி விட்டுச் சொன்னார். "இவை எல்லாம் சாதாரண நன்மைகள் அல்ல. இவற்றில் ஒன்று இல்லா விட்டாலும் நரக வாழ்க்கை அனுபவிக்க நேர்வது நிச்சயம். அப்படிப்பட்ட நல்ல விஷயங்கள் எல்லாம் உங்கள் வாழ்க்கையில் உங்களுக்குத் தெரியாமலேயே இன்னும் நிறைய இருக்கின்றன...."

முத்து அங்கிருந்து போன போது புதிய மனிதராகப் போனார்.

நடைபெற்ற நல்லவைகளை நினைத்தால், இதற்கு மேலும் நல்லவைகள் நடக்க என்ன முடிவை எடுக்க வேண்டும் என்பது நமது மக்களுக்குத் தெரிந்துவிடும்.

\- ஆசிரியர்

# அரசு மீது சந்தேகம் எழுப்புகிறார் மகிந்த

சிரேஷ்ட ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்கம மற்றும் பிரகீத் எக்னலிகொட ஆகியோர் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கம் விசாரணை செய்யாமை சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவர்கள் தொடர்பிலான விடயங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தொடர்புள்ளதா? என்று தனக்கு சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் கடந்த ஜனவரியில் ஆட்சிக்கு வந்து இதுவரை 7 மாதங்கள் கடந்துள்ள போதிலும் கடத்தப்பட்ட மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் ஏன் விசாரணை நடத்தவில்லை என்று மகிந்த ராஜபக்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை பொதுத்தேர்தலின் பின்னர் பிரதமர் பதவி தொடர்பில் கேள்வி எழுப்பியதற்கு பதிலளித்த மகிந்த ராஜபக்ச, அந்த நேரத்தில் அதனைப் பார்த்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

# டிமிக்கி விடும் கசிப்புக்காரன்

## மீண்டும் கைது

சுழிபுரம் குடாக்கனை பகுதியில் கசிப்பு காய்ச்சுதல் மற்றும் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டதாக 10 ஆவது தடவையாகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான், கறுப்பையா ஜீவராணி நேற்று முன்தினம் உத்தரவிட்டார். கசிப்பு காய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இவரை, கடந்த வியாழக்கிழமை வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். சந்தேக நபரிடமிருந்து 5 போத்தல் கசிப்பு, கசிப்பு காய்ச்சும் 4 பெரல்கள் மீட்கப் பட்டதாக பொலிஸார் கூறினர். கசிப்பு காய்சும் நடவடிக்கையில் இவர் ஈடு பட் டிருந்த நிலையில் இதற்கு முன்னர் 9 தடவைகள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்ப டுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட வர் என பொலிஸார் கூறினர். இந்நிலைய்யில் 10 ஆவது தடவையாக தற்போது கைது செய்யப்பட்டார்

# முன்னாள் புலிகள் இருவருக்கு விளக்கமறியல்

(வவுனியா)

வவுனியாவில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் இருவரையும் ஒரு மாத காலம் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்த சீ.ஐ.டீ.யினருக்கு ஹோமாகம நீதவான் அனுமதியளித்துள்ளார். மூத்த பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010 ஆம் ஆண்டு காணாமற்போனமை தொடர்பில், விசாரணைக்குட்படுத்தவே நீதவான் அனுமதியளித்துள்ளார். வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்ட இருவரும், சத்யா மாஸ்டர் என்றழைக்கப்படும் கணபதிப்பிள்ளை சுரேஷ் மற்றும் நகுலன் என்றழைக்கப்படும் சுமதிபாலன் சுரேஷ் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரையும் ஹோமாகம நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது ஒருமாத காலம் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்த நீதவான் உத்தரவிட்டார்.

# கிழக்கில் பொன்சேகா பிரசாரம் தடல்புடல்

இந் நாட்டில் வாழ்கின்ற மக்களின் இன மத பேதங்களையும் மக்களையும் வேறுபடுத்தி பார்க்கின்ற கட்சிகளுக்கு நீங்கள் வாக்களிக்கவேண்டாம் அவர்களை உங்களோடு இணைத்துக் கொள்ளவும் வேண்டாமென ஜனநாயக கட்சியின் தலைவர் சரத்பொன்சேக தெரிவித்தார்.

ஜனநாயக கட்சியின் தேர்தல் பிரசார கூட்டம் மட்டக்களப்பு கிரான் ரெஜி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில், வடகிழக்கிலே ஊழல் மிக்க ஆட்சியை நடாத்திய ராஜபக்சவை தோற்கடித்தார்கள். எதிர்காலத்திலே வடகிழக்கிலே இன மத பேதங்களை பிளவுபடுத்தி வேறுபடுத்தி பார்ப்பார்கள் ஆனால் அவர்களையும் நாங்கள் நிச்சயம் தோற்கடிக்க வேண்டும்.

எனவே இந் நாட்டில் இருக்க கூடிய இருநூறு லட்சம் மக்களையும் சிறந்தமுறையில் வாழ்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் மேலும் தெரிவித்தார்.

நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் அக்கட்சி சார்பாக மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சை சேர்ந்த இரு அதிகாரிகளை பொது நிர்வாக அமைச்சுக்கு தேர்தல்கள் செயலகம் இடம்மாற்றியுள்ளது. இந்த இரண்டு அதிகாரிகளும் பொதுத் தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னர் பதவியுயர்வுகள், நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் என்பவற்றை வழங்கியுள்ளனர். இதனாலேயே இவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

# அதிகபட்ச அதிகாரத்தை கையில் எடுப்பேன்

தேவையான சந்தர்ப்பத்தில் தேவையான அதிகபட்ச அதிகாரத்தை தேர்தல்கள் திணைக்களம் பயன்படுத்தும் எனவும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பொலிஸாருக்கு விடுக்கப்பட்ட எந்தவொரு உத்தரவையும் தாம் வாபஸ் வாங்கப் போவதில்லையெனவும் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தான் புதிதாக சட்டம் இயற்றவில்லை. நாடாளுமன்றத்தினால் இயற்றி வழங்கப்பட்டுள்ள சட்டத்தையே அமுல்படுத்துகின்றேன். வாக்குச் சாவடியில் வாக்குப் பெட்டியை மாற்றுவதற்கு யாரும் முற்பட்டால் பொலிஸாருக்கு வழங்கப் பட்டுள்ள அதிகபட்ச அதிகாரத்தை அவர்கள் பிரயோகிப்பார்கள்.

உங்களுக்கு நினைத்தவாறு சட்டம் இயற்ற முடியுமா? என ஒருவர் என்னிடம் வினவினார். நான் கூறினேன். இவை இதுவும் நான் இயற்றியவையல்ல. நாடாளுமன்றத்தினால உருவாக்கப்பட்டவை.

சட்டத்தை உருவாக்கும் இடத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில் சட்டத்தை மீற யாராலும் முற்பட்டால், அதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. இதற்காக அதிகபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்துவோம். இதனைத் தவிர இதற்கு வேறு பரிகாரம் இல்லை. கட்சி பேதம் வேறு எந்தப் பேதங்களும் இன்றி இதனை உரிய முறையில் நடைமுறைப் படுத்துவேன் எனவும் ஆணையாளர் மேலும் கூறியுள்ளார்.

வடமேல் மாகாணத்திற்கான பொலிஸ் அதிகாரிகளுக்கு நடாத்தப்பட்ட செயலமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் ஆணையாளர் நேற்றுமுன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் ஒரு முறை எல்.ரீ.ரீ.ஈ. தேர்தலில் வெற்றி அல்லது தோல்வி அடையுமா?

**பாராளுமன்றத்தில் ஒரு மூன்றில் இரண்டு பெரும்பான்மை எண்ணிக்கையான ஆசனங்கள், அதைத் தொடர்ந்து ஒரு தேசிய சர்வசன வாக்கெடுப்பில் வெற்றி, என்பன ஒவ்வொரு சிங்கள அரசியல் நகர்வையும் இனவாதம் என்று சொல்வதை நிறுத்திவிட்டு ரி.என்.ஏ மற்றும் சர்வதேச பின்துணையாளர்கள் தங்களிடமே கேட்கவேண்டிய கேள்விகள். அதேபோல ரி.என்.ஏ யின் சமஷ்டி கோரிக்கையையும் சிங்கள அரசியல்வாதிகள் இப்போது இனவாதம் என்று சொல்லி வருகிறார்கள்.**

■ என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து


ரி. என்.ஏ யின் தேர்தல் விஞ்ஞாபனம் கிட்டத்தட்ட முற்றாக தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளைப் பற்றியதாக உள்ளதே தவிர எல்.ரீ.ரீ.ஈ.யின் மீள்வரவைப் பற்றி அதிகம் கவலைப்படும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு பரிந்துரை எதையும் செய்யவில்லை.

அத்துடன் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனின் ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அமெரிக்கா என்பனவற்றிற்கான விஜயம் மற்றும் அங்கு அவர் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உரையாற்றியது மற்றும் அங்குள்ள தமிழ் ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்கியது பற்றி யு-ரியூப்பில் காணப்படும் காட்சிகள் பற்றியும் அதில் எதுவும் குறிப்படப்படவில்லை.

எல்.ரீ.ரீ.ஈ பற்றிய அச்சம் அல்லது அவர்களைப் பற்றிய எச்சரிக்கை போதுமான அளவுக்கு இல்லை என்பதைப் போலவே ரி.என்.ஏ தனது விஞ்ஞாபனத்தின் ஒரு பகுதியாக இனப் பிரச்சினைக்கான உடனடித் தீர்வாக சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி மீண்டும் ஒருமுறை கொடி உயர்த்தி உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் அது இறுதி வெற்றியாளரான மைத்திரிபால சிறிசேனவுக்கு பின்துணை நல்கியிருந்தது, அதன் ஆதரவுக்கு வேண்டி கட்சி வெளிப்படையாக எந்த முன் நிபந்தனைகளையோ மற்றும் நியாயமான காரணங்களையோ முன்வைக்கவில்லை.

ரி.என்.ஏ உட்பட ராஜபக்ஷவை எதிர்த்தவர்கள் அவருக்கு மாற்றீடாக உள்ள நல்லாட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆதரிப்பதற்கு காரணங்கள் இருந்தன. ரி.என்.ஏ அரசியல் பேச்சு வார்த்தைகளை அரசாங்கத்துடன் ஆரம்பித்த நாளிலேயே, அதற்கு முன்பே புத்துயிர் பெற்றிருந்த முள்ளிவாய்க்கால் ஆவிகளுடன் கட்சியானது உடனடியாகவே மோதவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் யுத்தக் குற்றங்கள், மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்கள், ஐ.நா. மனித உரிமைகள் சபை பிரேரணை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போன்றவற்றை பற்றிப் பேசாதவர்கள் யாரும் இருக்கவில்லை.

அதன்படி அப்போது மீந்திருந்த கேள்வி, அரசாங்கத்துடன் ரி.என்.ஏ நடத்தும் அரசியல் பேச்சு வார்த்தைகள் காரணமாக அதிகாரப் பகிர்வு பற்றிய அவர்களது நீண்ட கால கோரிக்கைக்கு தீர்வு காணப்பட்டால் ரி.என்.ஏ என்ன செய்யும் என்பதாக இருந்தது? பொறுப்புக் கூறல் விடயத்திற்கு சாதகமாகவும் அவர்கள் அதே மாதிரி திரும்பவும் செல்வார்களா, ரி.என். ஏயை பொறுத்தமட்டில் அது பின்பு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக இருந்தது, ஆனால் மேற்கத்தைய நிகழ்ச்சி நிரலில் அது முதலாவதாக இருந்தது?



அது கோழியா அல்லது முட்டையா என்கிறதைப் போன்ற ஒரு கேள்வி, சர்வதேச சமூகம் மற்றும் தமிழ் புலம் பெயர்ந்தவர்கள் இவர்களுக்கு இடையே யுத்தம் முடிவடைவதற்கு முன்பும் அதேபோல அதன்பின்பும் நடந்தவற்றுக்கான பொறுப்புக் கூறல் தொடர்பான விடயத்தை யார் முன்னிலைப்படுத்துவது? தேர்தலுக்குப் பிந்தைய ஒரு அரசாங்கம் அரசியல் பிரச்சினைக்குத் திருப்தியான தீர்வுடன் அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்பதைப் பற்றி ரி.என்.ஏ என்ன சொல்கிறது, ஆனால் பொறுப்புக் கூறல் விடயம் மற்றும் அதே போன்ற விடயங்களில் குறை உள்ளது?

சமஷ்டித் தீர்வு என்கிற ரி.என்.ஏயின் தேர்தலுக்கு முன்னான கோரிக்கை அதிகாரப் பகிர்வுக்கு இன்னமும் ஒரு கேள்வியாகவே உள்ளது. ராஜபக்ஷவின் ஸ்ரீ.ல.சு.க - ஐ.ம.சு.மு அதன் போட்டியாளரான ஐக்கிய தேசிய நல்லாட்சி முன்னணியை ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது போலத் தெரிகிறது. இதன்படி ஐ.தே.க. தொடர்ந்தும் நல்லாட்சி விடயத்தில் ஒட்டிக்கொண்டிருந்து ராஜபக்ஸவை மீண்டும் ஒருமுறை தனிமைப்படுத்த எடுத்த முயற்சிகள் அம்பலமாகியுள்ளன.

ராஜபக்ஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒரு அரசாங்கத்தை அமைக்க வேண்டியிருந்தால் பாராளுமன்றத்தில் ரி.என்.ஏயின் ஆதரவை பெறுவதில் நம்பிக்கை கொண்டிருக்காது. ஐ.தே.க. - ஐக்கிய தேசிய நல்லாட்சி முன்னணி தலைமையும் கூட அழுத்தத்துக்கு ஆளாக நேரிடும், இரண்டுமே ஒரு அரசாங்கத்தை அமைக்க ரி.என்.ஏயின் ஆதரவைப் பெறவேண்டுமாயின், தமதும் மற்றும் ரி.என்.ஏயிடமிருந்தும் அவற்றின் நிலைப்பாட்டை குறிப்பாக சமஷ்டி விடயம் தொடர்பாக தெளிவுபடுத்த வேண்டும்.

நல்லதோ அல்லது மோசமானதோ இன்னமும் இந்தியா, அல்லது அமெரிக்கா, அல்லது ஐ.நா. அல்லது வேறு யாராக இருப்பினும் தமிழர்களிடமிருந்து பல்வேறுபட்ட காலத்தில் அவர்கள் எதிர்பார்ப்பது வித்தியாசமான தாகவும் மற்றும் மாறுபட்டதாகவுமே இருக்கிறது. இதன்படி இந்தியாவின் அனுசரணையுடன் வழங்கப்பட்ட 13-ஏ யினைப் பற்றிய ரி.என்.ஏயின் புதுப்பித்துள்ள நிலையை இந்தியா தொடர்ந்தும் கவனித்து வருகிறது. 13-ஏ போதுமான ஒன்றல்ல என்று கோரும் தனது நிலைப்பாட்டை ரி.என்.ஏ வெகு காலமாக மாற்றிக் கொள்ளவேயில்லை.

ராஜபக்ஷ அரசாங்கம் தான் என்ன கருதுகிறோம் என்று வெளிப்படுத்தாமல் 13இற்கு அப்பால் என்று வாக்களித்த காலங்களில் இந்தியா, எடுத்துக் காட்டாக எந்த உள்ளூர் நடவடிக்கைகளிலும் மற்றும் இலங்கையில் உள்ள ஒவ்வொரு பங்காளரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்விலும் தலையீடு செய்ய விரும்பவில்லை. இன்று இரண்டு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளுமே தங்கள் சொந்த உடனடி தேர்தல் அக்கறைகளை கருத்தில் கொண்டு வழக்கம் போல அதிகாரப் பகிர்வு விடயத்தில் தெளிவற்ற நிலைப்பாட்டிலேயே உள்ளன. இங்குதான் தேர்தலுக்கு பின்னால் என்கிற கேள்வி எழுகிறது, வெறுமே அனைத்து இலங்கை மக்கள் மட்டுமன்றி தமிழர்களும் சேர்ந்து தங்களையும் மற்ற ஒவ்வொருவரையும் கேட்க வேண்டிய கேள்வி இது.

பாராளுமன்றத் தேர்தல்களில் யார் வென்றாலும் அல்லது தோற்றாலும் மற்றும் அதன்பின் யார் அரசாங்கம் அமைத்தாலும், இனப் பிரச்சினை, அரசியல் தீர்வு மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பொறுப்புக்கூறல் தொடர்பான தேர்தலுக்குப் பின்னான அரசியலில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மையத்தில் இருப்பார். நல்லாட்சிக்கு அப்பால் செல்லும் விடயங்களில் அவருக்கு ஒரு காரணமும் மற்றும் நியாயமும் இருக்கும், அந்த நிலை ஏற்பட்டால் அவருடைய சொந்த தேர்தல் ஆணை மற்றும் பிரதம மந்திரியை நியமிப்பதில் ராஜபக்ஷவுக்கு சாதகமோ அல்லது பின்துணையோ வழங்குவதில்லை என்கிற நிலைப்பாடும் முக்கிய காரணிகளாக அமையும்.

கொள்கையளவில், ஜனாதிபதி சிறிசேனவின் தேர்தலுக்குப் பின்னான நிலைப்பாடு, பாராளுமன்றத்தில் ராஜபக்ஷவுக்கு பெரும்பான்மை கிடைத்தாலும் கூட அவரை பிரதமராக்குவதில்லை என்பதே, ராஜபக்ஷ அரசாங்கம் தவிர்க்க முடியாதபடி தமிழர்களை தனிமைப் படுத்துவதைத் தூண்டிவிடக் கூடும் என்பதும் தேர்தலுக்கு பின்பு அவருக்கு கவலை தரும் விடயங்களாக இருக்கலாம். உண்மையில் சிறிசேன அல்லது ரி.என்.ஏ அப்படியான ஒரு காட்சியைப் பற்றிப் பேசவில்லை, ஆனால் அப்படியான ஒரு சாத்தியம் ஏற்படுவதை அலட்சியப் படுத்திவிட முடியாது.

யார் அரசாங்கம் அமைக்கப் போகிறார்கள் அல்லது யார் பிரதமராவார் என்பதல்ல விடயம். இலங்கை இன்னும் கொண்டிருக்கும் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் கீழ் அவை அனைத்தும் ஒரு பொது வாக்கெடுப்பின் கீழேயே திருத்த முடியும், இலங்கையின் பின்னணியில் ஜனாதிபதி சிறிசேன இந்தக் கருவின் இறைமை மற்றும் அதன் தொடர்ச்சியான நிலைமை என்பதை பாதுகாக்க கடமைப்பட்டுள்ளார்.

இரண்டு பெரும்பான்மை சிங்களக் கட்சிகளில் ஏதாவது ஒன்றுக்கு மிகப்பெரும் பெரும்பான்மை கிடைத்தாலே ஒழிய தேர்தலுக்கு பிந்தைய நிலைப்பாட்டைப் பற்றி கருத்து தெரிவிக்க முடியாது. அதற்கான அடுத்த அசாத்தியம் என்னவெனில் தற்போதுள்ள விகிதாசாரத் திட்டத்தின் கீழ் மற்றும் தற்போது உள்ள வாக்களிப்பு மாதிரியின் கீழ் தேர்தல் நடைபெறுவதுதான். யுத்தத்துக்குப் பின்னான 2010இல் மகிந்த மந்திரம் தேர்தல் கூட்டணியை விட சக்தியானதாகவும் மற்றும் அது யுத்த வெற்றி மற்றும் தலைமைத்துவ கவர்ச்சி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருந்தது. இந்த வகையான தேர்தல் அமைப்பின் கீழ் அது அடிக்கடி வருவதற்கு வாய்ப்பில்லை.

குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரட்டைப் பொதி எதிர்காலத்துக்கான திறவுகோலை வைத்திருப்பதற்கான இரண்டாவது காரணி. பாராளுமன்றத்தில் ஒரு மூன்றில் இரண்டு பெரும்பான்மை எண்ணிக்கையான ஆசனங்கள், அதைத் தொடர்ந்து ஒரு தேசிய சர்வசன வாக்கெடுப்பில் வெற்றி, என்பன ஒவ்வாரு சிங்கள அரசியல் நகர்வையும் இனவாதம் என்று சொல்வதை நிறுத்திவிட்டு ரி.என்.ஏ மற்றும் சர்வதேச பின்துணையாளர்கள் தங்களிடமே கேட்கவேண்டிய கேள்விகள். அதேபோல ரி.என்.ஏ யின் சமஷ்டி கோரிக்கையையும் சிங்கள அரசியல்வாதிகள் இப்போது இனவாதம் என்று சொல்லி வருகிறார்கள்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# அந்த அறிக்கை மைத்திரி வசம் விரைவில் வரும்



(கொழும்பு)

இறுதியுத்தத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றம், மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அடுத்தவாரம் கையளிக்கப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 20ஆம் திகதி இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவிருப்பதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரகசிய எழுத்துமூல ஆவணமாக இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

குறித்த விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் சர்வதேச தரத்திற்கேற்ப உள்ளக பொறிமுறையை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து எதிர்வரும் அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முழுமையான விசாரணை அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பரில் கூடவிருக்கும் ஜெனீவா மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல்கள் செயலகத்துக்கு தலையிடி தரும் வலைத்தளங்கள்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் காலஎல்லை முடிவுக்கு வந்த பின்னரும், இணையத்தின் வழியாக- சமூக ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பரப்புரைகளைத் தடுக்க வழியின்றி தேர்தல்கள் திணைக்களம் நெருக்கடியில் சிக்கியுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான பரப்புரைகள் யாவும், எதிர்வரும் 14ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுபெற வேண்டும்.

ஆனாலும், சமூக ஊடகங்கள் வழியான பரப்புரைகளைத் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, டுவிட்டர், முகநூல் வழியான பரப்புரைகள், எதிர்வரும் 14ஆம் திகதிக்குப் பின்னரும் தொடர்வதை தடுக்க முடியாதிருக்கும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேர்தல் சட்டங்கள் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கேற்றவாறு அமைக்கப்படவில்லை.

இந்த நிலையில், பரப்புரைக் காலம் முடிந்த பின்னரும், இணையவழிப் பரப்புரைகள் தொடரும் நிலை ஏற்பட்டுள்ளது.

இணையவழிப் பரப்புரைகள் வெற்றியைத் தீர்மானிக்கும் திறன்கொண்டதாக இருக்கும் என்று நம்பவில்லை என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ள நிலையில், இத்தகைய சமூக ஊடகங்களே, போலியான பரப்புரைகள் மற்றும் கீழ்த்தரமான பரப்புரைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# மைத்திரியின் உரை நாட்டு மக்களுக்கு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஒரு முறை நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்ற தயாராகி வருவதாக அவருக்கு நெருக்கமான தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் நெருங்கும் தருவாயில், இனவாதத்தை அடிப்படையாக கொண்டு தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி திட்டமிட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களை அடுத்தே ஜனாதிபதி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவியை வழங்கப் போவதில்லை என்று ஜனாதிபதி ஏற்கனவே ஆற்றிய சர்ச்சைக்குரிய உரை விட மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்த உரையின் மூலம் பாரிய தாக்குதலை தொடுக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகிறது.

ஜனாதிபதியின் இந்த உரையுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்கு வீதம் பாரியசரிவை சந்திக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தான் மைத்திரி - மகிந்த அரசை உருவாக்கப் போவதாக மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்து வருகிறார்.

இனவாதிகளுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்கப் போவதில்லை எனவும் மகிந்த கூறி வருகிறார். இந்த நிலையில், தான் இனவாதி ஒருவருடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால அறிவிக்க உள்ளதாக பேசப்படுகிறது.

ஜனாதிபதி என்ற வகையில், இன ஐக்கியம் தொடர்பில் தனக்குள்ள பொறுப்பு குறித்து கவனம் செலுத்தி ஜனாதிபதி இந்த உரையை ஆற்ற உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# காட்டிக்கொடுக்கும் படலம் ஆரம்பம்

## ஐ.தே.க. மீது சுசில் பாய்ச்சல்



வெள்ளைக்கொடி விவகாரத்தில் படையினரைக் காட்டிக் கொடுக்க ஐக்கிய தேசி யக் கட்சி முயற்சிப்பதாக குற்றம் சாட்டியுள்ளார், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

வெள்ளைக்கொடி விவகாரத்தில் இலங்கை இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக புதிய அரசாங்கம் பொறுப்பில்லாமல் செயற்படுகிறது.

இந்த விவகாரத்தில் இராணுவத்தை காப்பாற்றாமல், அனைத்துலக விசாரணையில் சிக்க வைக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது.

கசிந்துள்ள, ஐ.நா. அறிக்கையின் இரகசியங்களிலும், சிறிலங்கா இராணுவத்தின் மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளமை வெளிப்பட்டுள்ளது.

போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தொடர்ச்சியாக பல கோரிக்கைகள் முன்வைக்கப்படுகினறன.

சனல்-4 ஊடகவியலாளர் கெலும் மக்ரே தொடர்ச்சியாக ஆவணங்களை உருவாக்கி ஐ.நா. ஆணைக்குழுவிடம் வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

ஆனால் இவர்கள் முன்வைக்கும் ஆவணங்கள் அனைத்தும் பொய்யானதே. நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த திட்டமிட்டு இவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் ஒளிப்படங்களும் உண்மைக்கு முரணானதாகும்.

இவர்கள் அனைவரும் பக்கச்சார்பான வகையில் தான் செயற்படுகின்றனர். ஐ.தே.க.வுக்கும், அவர்களுடன் புதிதாக கூட்டு சேர்ந்திருக்கும் நபர்களுக்கும் நாட்டையும், நாட்டை காப்பாற்றிய இராணுவத்தின்ரையும் காப்பாற்றும் நோக்கம் இல்லை.

மாறாக நாட்டையும், இராணுவத்தையும் காட்டிக்கொடுக்கவே முயற்சிக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார்.



# மகிந்தவுக்கு இந்த நிலை

விசேட செய்தி

## குடும்ப வாக்குகளை இழக்கும் அவலம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தபால் மூல வாக்களிப்பிற்கான மாவட்டத்தை மாற்றும் கோரிக்கை தேர்தல்கள் செயலகத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியும், குருநாகல் மாவட்ட வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிப்பிற்கான உரிமை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் தாம் போட்டியிடுவதால் வாக்களிப்பிற்கான உரிமையை குருநாகல் மாவட்டத்திற்கு மாற்றும்படி தேர்தல்கள் செயலகத்திடம் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் இதனை மாற்ற முடியாதென தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வழமைபோல அம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே அவர் வாக்களிக்கவுள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் வன்னி)



அன்ரனி அருள்ராஜசேகர்
(சாந்தன்)
மாவட்ட இணைப்பாளர் வவுனியா



# இனிதே நடைபெற்ற இந்து ஆராய்ச்சி மாநாடு

## — ஒரு கண்ணோட்டம் —

இந்து மதத்தின் சிறப்புக்களையும் தத்துவார்த்தமான நல்ல கருத்துக்களையும் ஆராய்ந்து, மக்களிடையே நல்ல எண்ணக் கருக்களையும் தத்துவ விளக்கங்களையும் உருவாக்கி நற்பயன தரக் கூடிய வகையில் இனிதே நடைபெற்றது இந்து ஆராய்ச்சி மாநாடு. கடந்த வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களிலும் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இந்து மாமன்றம் நடாத்திய இந்து ஆராய்ச்சி மாநாடு எமது ஈழவள நாட்டின் பல்வேறு துறைசார்ந்த பேராசிரியர்களையும் அறிஞர் பெருமக்களையும் ஒன்று சேர்த்து நிகழ்த்தப்பெற்ற ஒரு நல்ல பயனுள்ள நிகழ்வாகும். மாநாட்டின் ஒவ்வொரு நிகழ்வும் மிகச்சிறப்பான முறையிலேயே தகைமை நிறைந்த அறிஞர் பெருமக்களால் திறம்பட நிகழ்ததப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இனிதே சிறப்புற நிறைவெய்திய இந்த இந்து ஆராய்ச்சி மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்சசிகள் வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் நல்லை ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் இந்தியாவிலிருந்து வந்த தருமபுர ஆதீன குருமுதல்வர் ஸ்ரீ மத் மௌன குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் சின்மயா மிஷன் ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமிகள் ஆகியோரை மங்கள வாத்திய இசையுடன் அழைத்து வந்து இந்து மாமன்றத்தினர் மங்கல விளக்கேற்றல் நிகழ்வுடன் கோலாகலமாக ஆரம்பித்து வைத்தனர்.

இந்து மன்றத்தின் அருமை பெருமைகளை ஆராய்வதற்கான இந்த மாநாட்டில் ஆரம்ப நிகழ்வாக மதத் தலைவர்களின் ஆசியுரைகள் வரிசையில் இந்திய தருமபுர ஆதீன குருமுதல்வர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நல்லூர் சின்மய மிஷன் வதிவிட ஆச்சாரியர் பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமிகள், இணுவில் தர்ம சாஸ்தா குருகுல சிவஸ்ரீ. தானு. மகாதேவக் குருக்கள், சைவக் குருமார் ஒன்றிய முதல்வர் சிவஸ்ரீ சதா. மகாலிங்க சிவக் குருக்கள் ஆகியோர் சிறப்பாக உரையாற்றி ஆசிகள் நல்கிச் சிறப்பித்தனர். இது ஒரு . தெய்வீக நிகழ்வாக அமைந்து அனைவரது உள்ளங்களையும் பக்தி நிலையில் பரவசப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் ஒரு தனி விசேடம் என்னவென்றால் இந்து சமயத்தின் தத்துவார்த்தமான விடயங்களை இந்த மாநாடு ஆய்வு செய்யப் போகின்றது என்பதை ஆசியுரைகளே எமுத்தியம்பியமை தான். இவர்கள் வழங்கிய கருத்துக்கள் மாநாட்டுக்கு வந்திருந்தவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தமை சிறப்பம்சமே.

மேலும் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த தருமபுரம் ஆதீனம் ஸ்ரீமத் மௌன குமார சுவாமித்தம்பிரான் சுவாமிகள் இந்துசமயத்தின் உயர்வையும் மேன்மையையும் தகுந்த மேற்கோள்களின் மூலம் விளக்கம் தந்து தமக்கே உரித்தான பாணியில் மூன்று நாட்களும் வெவ்வேறு தலைப்புக்களில் சிறப்புச் சொற்பொழிவு செய்தமை ஒரு கிடைக்கப்பெறாத அற்புத நிகழ்வாகும்.

"இறை பணி நிற்க" என்ற பொருளில் குறுகிய நேரத்திலே பெரிய பெரிய தத்துவங்களை இலேசாகவும் தெளிவாகவும் பாமரர்களுக்கும் விளங்கக் கூடிய வகையில் அள்ளிச் செறிந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்திய பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி ஆறு. திருமுருகன், பேராசிரியர் நா.சணமுகலிங்கன், பேராசிரியர் மா. வேதநான், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் கனகசபாவதி நாகேஸ்வரன், கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன், கலாநிதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரன், கலாநிதி கு. சோமசுந்தரம், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பேராசிரியர் ப.புஷ்பரத்தினம் மற்றும் பேராசிரியர் நா. ஞானகுமாரன், பேராசிரியர் சிவலிங்கராசா, சொலவாதிரி ச.லல்சன், திருமதி நாச்சியார் செல்வநாயகம், பேராசிரியர் கோபல கிருஷ்ணஜயர், கு.பாலஷண்முகன் போன்ற இன்னும் பல அறிஞர் பெருமக்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இத்தகைய ஒரு பெரிய பிரமாண்டமான அளவிலே சகலவித துறைசார்ந்த அறிவுசால் விற்பன்னர்களை ஒன்றுதிரட்டி இந்த இந்து ஆராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்திலே நடாத்த வேண்டும் என்று முற்று முழுதாகப்பாடுபட்ட இந்து மாமன்றத்தின் அரிய பணி சொல்லிமாளாது. மூன்று நாள் நிகழ்வுகளும் சிறப்பான நிகழ்வுகள்.

இதில் இன்னுமொரு விசேடம் என்னவென்றால் ஒவ்வொரு ஆய்வுக்கும் வெவ்வேறு அரங்குகள் அமைத்து சமகாலத்தில் வேறுவேறு இடங்களில் ஆய்வுக கட்டுரைகள் சமர்ப்பித்து கருத்துக்களை முறையாக அலசி ஆராய்ந்து செயற்பட்டமையாகும். கலந்து கொண்ட பேச்சாளர்களுககும் கேட்கவந்த ஆர்வலர்களுக்கும் இடையே ஒரு கலந்துரையாடலையும் வைத்து விடயங்களைத் தெளிவுபடுத்திய பாங்கு மிகுந்த நல்ல பயன்தரக்கூடிய நிகழ்வாகும்.

நல்லதொரு பணிசெய்த இந்து மாமன்றம் அறுபதாண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இந்த ஆராய்ச்சி மாநாட்டின் மூலம் யாழ் மக்கள் பெரும்பயன் அடைந்துளளார்கள்.

இத்தனைக்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்தது கிளிநொச்சி மகாதேவாச்சிரம முதல்வர் ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகளையும் இணுவில் தர்ம சாஸ்தா குருமுதல்வர் சிவஸ்ரீ தானு மகாதேவக் குருக்களையும் கௌரவமளித்து விருது வழங்கிச் சிறப்பித்தமையே. அத்துடன் "இந்து ஒளி" சஞ்சிகையும் "மஹோற்சவ விளக்கம்" புததகமும் "ஈழத்து ஆலயங்கள்" என்ற புத்தக வெளியீடும் இடம் பெற்றிருந்தது.

இம்மாநாட்டில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட இந்திய உயர்ஸ்தானிகர் ஆ.நடராஜன், பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் (உபவேந்தர், யாழ்.பல்கலை), யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன், பேராசிரியர் சி.பதமநாதன், ஆகியோர் தமக்கே உரிததான சிறப்புப் பாணியில் ஆற்றிய உரைகள் இன்னும் சொல்லப் போனால் இம்மானாட்டில் பேசிய அனைத்து அறிஞர்களையும் கூறின பெயர்ப்பட்டியல் நீண்டு கொண்டேபோகும்.

இந்த மாநாட்டில் ஈழத்து இந்து மதத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்கு என்ற தொனிப் பொருளில் பல்வேறு விடயங்கள் புராணங்கள், திருமுறைகள், எதிர் காலத்திட்டங்கள், இந்து மத வரலாறும் தொல்லியலும், ஈழத்துத் திருக்கோவில்களும், மரபுகளும் இந்து நிறுவனங்களின் பணிகள் ஈழத்துச் சித்தர் பாரம்பரியம், ஈழதது்ச் சமய தரபில் கல்வி முதலாய தலைப்புக்களில் ஆய்வுக்கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டமை ஒரு தனியான விசேட அம்சமாகும்.

இது ஒரு புறமிருக்க மூன்று நாள் நிகழ்வுகளிலும் சேர். பொன். இராமநாதன், வே.பால சுப்பிரமணியம், சேர்.பொன். அருணாசலம், சேர். கந்தையா வைத்தியநாதன், கலாநிதி க.வேலாயுத பிள்ளை, இந்து போட் இராசரத்தினம், சதாவதானி கதிரவேற்பிள்ளை, செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், ஜீவானந்த மகராஜ் சுவாமிகள், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பெயரில் அரங்குகள் அமைக்கப்பட்டு ஒரு பெரிய தமிழ்ப்பணிக்கான சாதனையை இந்துமாமன்றம் படைத்துள்ளது என்று கூறின அது சாலப்பொருந்தும்.

கொழும்பு, மன்னார், மட்டக்களப்பு, ஆகிய இடங்களிலிருந்தும் பல ஆர்வலர்கள் இங்கு வந்து மாநாட்டில் பங்கேற்றியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இந்த இந்து ஆராய்ச்சி மாநாடு இத்தனை சிறப்பாக அமைய தம்மையே முற்றாக அர்ப்பணித்துப் பாடுபட்ட கந்மையா நீலகண்டனின் பணி பொன்னெழுத்துக்களால் பொறிக் கப்பட வேண்டியதே.

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

# போதைக் கலாசாரத்தை அழிக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும்

## யாழ்.பொலிஸ் பொறுப்பதிகாரி வூட்லர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் கலாசாரம் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க அனைத்து இளைஞர் யுவதிகளும் பொலிஸாருடன் இணைந்து செயற்பட வேண்டும் என யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எவ்.வூட்லர் தெரிவித்தார்.

நேற்று தனியார் கல்வி நிறுவனத்தில் கற்று வெளியேறும் ஹோட்டல் மற்றும் சுற்றுலா முகாமைத்துவ மாணவர்களுடனான கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இன்றும் எமது இளைய சமூகத்தினர் போதைக்கு அடிமையாகின்றனர். இதனால் சமூக விரோத செயல்கள் அதிகரிக்கின்றன. இதனை தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதற்காக அனைவரும் இணைந்து செயற்படவேண்டும். போதைப் பொருட்கள் விற்கப்படும் இடங்கள் இனங்காணப்படவேண்டும். அவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு நீதி முன் நிறுத்தப்படவேண்டும் இதற்கு உங்களைப் போன்று சமூகத்தோடு இணைந்து பணிசெய்யும் யுவதிகள் முன்வரும் பட்சத்தில் சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியும். இதனால் களவு, கொலை, வலைப்பினனலூடான கலாசார சீரழிவுகள், போன்ற பல குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த முடியும். இதற்கு பெற்றோர்களும், மாணவர்களும் இணைந்து செயற்பட்டால் மட்டும் போதாது. சமூகப் பொறுப்புள்ள அனைவரும் இணையவேண்டும். இதன்மூலம் எதிர்காலத்தில் குற்றச்செயல்களோ, சட்டவிரோத செயற்பாடுகள் ஏற்படாவண்ணம் தடுக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களை விடவும் பொலிஸார் மிகக் குறைவு. இதனால் எல்லா செயற்பாடுகளையும் ஒரேமுறையில் செய்யமுடியாதுள்ளது.

எனவே குற்றச் செயல்கள் ஏற்படாத வகையில் சமூகத்தை காப்பாற்ற வேண்டியது எமது கடமையாகும். உங்களுக்குக் கிடைக்கும் தகவல்களை பொலிஸாரிடம் தெரிவிக்கையில் அதற்கான சகல தீர்வுகளும் கிட்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(இ,25)

# உசனில் WiFi



(உசன்)

கனடா உசன ஐக்கிய மக்கள் ஒன்றியத்தால் உசன் கிராமத்தில் நடாத்தப்பட்டு வரும் பொது நூலகத்தை நவீன முறையில் தரமுயர்த்தும் நோக்கில் அண்மையில் உசன் கிராம நூலகத்திற்கு இலவச Internet WiFi சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலகுவாக புத்தகங்களை வாசிக்கக் கூடியதாக "I book" சலுகை வழங்கும் முகமாகவும் சிறுவர்களுக்கு ஆங்கில அறிவை வளர்க்கக் கூடிய வகையில், Ipad /Tablet சேவையும் அண்மையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வசதியை பொதுநூலக அங்கத்தவர்கள் இலவசமாக பயன்படுத்த முடியும். ஒரு கிராம மக்களின் முழு ஒத் துழைப்புடன் இவ்வாறான சேவை முதன் முதலில் உசன் மக்களால் தொடங் கப்பட்டுள்ளது.

இச்சேவை கிராமத்து சிறுவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிபர் இடைநிறுத்தம்

வவுனியா நெலுக்குளம் குகன்நகர் பகுதியில் பொதுக்கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட விபுலானந்தாக் கல்லூரியில் கல்வி கற்ற குணசேகரம் திவ்வியா என்ற மாணவியின் மரணம் தொடர்பான விசாரணைகள் முடியும் வரை பண்டாரிக்குளம் விபுலானந்தா வித்தியாலய அதிபரை பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள்ளார்


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



அந்தோனிமுத்து அனஸ்ரின்



X 3

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

# கங்குலி, லாரா என் முன்னோடி



(டாக்கா)

கங்குலி, லாரா ஆகியோரே எனது கிரிக்கெட் முன்னோடிகள் என பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சவுமியா சர்க்கார் தெரிவித்துள்ளார்.

எனது தந்தை முன்னாள் வங்கமொழி ஆசிரியர். நான் கிரிக்கெட் வீரராக உருவெடுக்காமல் இருந்திருந்தால், ஆசிரியர் வேலையை விரும்பியிருப்பேன். ஆனால் கிரிக்கெட் விளையாடுவது மிகவும் மகிழ்ச்சியாகவும், திருப்தியாகவும் உள்ளது. நாட்டிற்காக விளையாடுகிறேன் என்பதால் பெருமிதம் அடைகிறேன். கிரிக்கெட் விளையாட ஆரம்பித்த போது, வலது கை துடுப்பாட்ட வீரராக இருந்தேன். ஆனால் கங்குலி, லாரா, யுவராஜ் சிங் ஆகியோரின் ஆட்டத்தை பார்த்த பின், இடது கையால் ஆடினேன்.

2015 உலக கோப்பை தொடர் ஆரம்பமாவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பாக, நான் அறிமுக வீரராக களமிறங்கினேன். சிம்பாப்வேக்கு எதிரான முதல் போட்டியில், 20 ஓட்டங்கள் எடுத்தேன். அதன்பின் உலக கோப்பைக்கான அணியில் இடம் பெறுவேனா என்பதில் எனக்கு சந்தேகம் இருந்தது. ஆனால் உலக கோப்பை அணிக்கான வீரர்கள் பட்டியலில் எனது பெயர் இருந்தது கண்டு ஆச்சரியமடைந்தேன். உலக கோப்பை காலிறுதியில் இந்தியாவுடன் தோல்வியடைந்தது வேதனையளித்தது. ஆரம்ப வீரராக களமிறங்குவது எனக்கு புதிதல்ல. ஆரம்ப வீரராக களமிறங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். என்னுடன் களமிறங்கும் மற்றொரு ஆரம்ப வீரர் தமீம் இக்பால், என்னுடைய நெருக்கடியை குறைக்கிறார். இதனால் என்னுடைய பாணியில் விளையாட முடிகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# நெருக்கடியில் ஜொலிக்க இந்தியாவுடன் ஆடுங்கள்

(லாகூர்)

நெருக்கடியான சூழலில் சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்துவது எப்படி என்பதைக் கற்றுக் கொள்ள இந்தியாவுக்கு எதிராக அடிக்கடி விளையாட வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு அந்த அணியின் முன்னாள் கப்டன் இன்ஸமாம் உல் ஹக் அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று விளையாடும் போது, நாங்கள் திணறினோம். அதேசமயம், நெருக்கடியைச் சமாளிப்பது எப்படி என்பதையும் அதன் மூலம் கற்றுக் கொண்டோம். பாகிஸ்தான் வீரர்கள் நெருக்கடியான சூழலிலும் சிறப்பாக விளையாடுவதைக் கற்றுக் கொள்வதற்கு, இந்தியாவுடன் அடிக்கடி விளையாடுவதைத் தவிர வேறு சிறப்பான வழியில்லை.

எதிர்வரும் டிசம்பர் மாதம் இந்தியா - பாகிஸ்தான் இடையே புதிய கிரிக்கெட் அத்தியாயம் தொடங்குவதை மிக ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். எங்கு விளையாடுகிறோம் என்பதை விட, இந்தியாவுக்கு எதிராக அடிக்கடி விளையாட வேண்டும்.



பெரிய அணிகளுக்கு எதிரான சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடாததால் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நாங்கள் பின்தங்கியிருக்கிறோம். எனவே, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் அதிக சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடுவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

உலகில் மிக அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் பாகிஸ்தான் வீரர்கள் பெயரைபார்க்க முடியவில்லை. நானோ, முகமது யூசுப்போ டெஸ்ட் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களை எடுக்க முடியவில்லை. யூனிஸ்கான் அதனைச் சாதிப்பார் என நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ராவிட்டிடம் கடமைப்பட்டிருக்கிறேன்

## யூனிஸ்கான்

தரம் வாய்ந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரராக நான் உருவானதற்கு, ராகுல் ராவிட் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளார். அவருக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன் என பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் யூனிஸ்கான் தெரிவித்துள்ளார்.

ஆட்டத்தின் தொடக்க காலங்களில் ராகுல் ராவிட்டிடம் இருந்து எனக்குக் கிடைத்த ஆலோசனைகளும், உத்திகளும் எனது கிரிக்கெட் வாழ்க்கை மேம்படுவதற்கு மிகவும் உதவியாக இருந்தன. 3ஆவது வரிசையில் களமிறங்கும் தரம் வாய்ந்த துடுப்பாட்ட வீரராக என்னை நிலைநிறுத்திக் கொள்ள அவரின் ஆலோசனைகளே காரணம். ராவிட், சமகால கிரிக்கெட்டில் மிகவும் தரம் வாய்ந்த, தொழில்முறையிலான ஆட்டக்காரர். அவரிடமிருந்தே நான் இதனை கற்றுக் கொண்டேன். 2009ஆம் ஆண்டில் டெஸ்ட் கப்டன் பதவியை நான் துறந்தது தவறான முடிவு. நாட்டின் அணியை வழிநடத்துவதற்கான கௌரவத்தை இழந்ததை இப்போது உணர்கிறேன். மீண்டும் வாய்ப்பு கிடைத்தால் கப்டனாக பொறுப்பேற்பேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# றெய்லர் விலகல்

(ஹராரே)

நியூசிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ரோஸ் றெய்லர் காயம் காரணமாக தென்னாபிரிக்க அணிக்கெதிரான கிரிக்கெட் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

சிம்பாப்வே அணிக்கெதிரான ஒரு நாள் தொர்டரின்போது இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அந்த அணிக்கெதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் றெய்லர் ஆடவில்லை.

றெய்லருக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டுள்ளது. இதற்காக அவர் சிறிய அறுவை சிகிச்சை செய்து கொண்டதால் தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 தொடரில் இருந்து விலகியுள்ளார்.

றெய்லருக்குப் பதிலாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை மாற்று வீரர் பெயரை அறிவிக்கவில்லை. ஏற்கனவே, 16 வீரர்கள் கொண்ட பட்டியலில் உள்ள நீசம், றெய்லர் இடத்தில் களம் இறங்குவார் என்று நியூசிலாந்து தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்க அணிக்கெதிரான கிரிக்கெட் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். அதிர்ஷ்டமின்மை காரணமாக இத்தொடரிலிருந்து விலகுவது ஏமாற்றம் அளிக்கிறது என றெய்லர் தெரிவித்துள்ளார்.

# தொடரை வென்றது நியூசிலாந்து

சிம்பாப்வே அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை நியூசிலாந்து அணி கைப்பற்றிக்கொண்டது. இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் ஹராரேயில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வில்லியம்ஸன் 90 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 274 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி 47.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் வில்லியம்ஸ் 63 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை நியூசிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

# விற்பனை அமோகம்



(ரியோ டி ஜெனிரோ)

பிரேசில் ரியோ டி ஜெனிரோவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான நுழைவுச் சீட்டுக்கள் இதுவரை 20 இலட்சம் விற்றுத் தீர்ந்தன.

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த ஆண்டு ஆகஸ்ட், 5இல் ஒலிம்பிக் போட்டி ஆரம்பமாகவுள்ளது. 17 நாட்கள் நடைபெறவுள்ள இப்போட்டியில் 206 நாடுகளைச் சேர்ந்த 10,500 விளையாட்டு நட்சத்திரங்கள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

போட்டி ஆரம்பமாக இன்னும் ஒரு ஆண்டுக்கும் குறைவான நாட்களே உள்ளன. இதற்காக மொத்தம் 75 இலட்சம் நுழைவுச் சீட்டுக்கள் அச்சடிக்கப்பட்டன.

இதில் பிரேசில் மக்களுக்காக 40 இலட்சம் நுழைவுச் சீட்டுக்கள் ஒதுக்கப்பட்டன. இணையதளம் வழியாக நடந்த முதல் சுற்று விற்பனையில் 20 இலட்சம் நுழைவு சீட்டுக்கள் விற்றுத் தீர்ந்தன. அடுத்த சுற்று விற்பனை இம்மாதத்தின் பின் பகுதியில் இருக்கும் என்த் தெரிகிறது.

வெளிநாட்டு இரசிகர்கள், விளம்பர நிறுவனங்கள், பல்வேறு நாடுகளின் ஒலிம்பிக் சபை மற்றும் அதன் நிர்வாகிகளுக்காக 10 இலட்சம் நுழைவுச் சீட்டுக்கள் வரை கொடுக்கப்படவுள்ளது.

ஆரம்ப விழாவுக்குரிய நுழைவுச் சீட்டின் விலை ரூ. 733 முதல் 84 ஆயிரம் வரை விற்கப்படுகின்றன. பெரும்பாலான நுழைவுச் சீட்டுக்கள் ரூ. 1,281 மற்றும் இதற்கும் கீழ் தான் விற்கப்பட்டன. கடந்த லண்டன் ஒலிம்பிக்கை விட (ரூ. 2000) இது குறைவு தான்.

# நான் மெஸ்சியல்ல தொடர்ந்து ஆடுவதற்கு

## ஆர்ஜென்ரீனா கால்பந்து பயிற்றுநர்

நான் மெஸ்சியாக இருந்திருந்தால் ஆர்ஜென்ரீனா அணியிலிருந்து விலகியிருப்பேன் என அதன் பயிற்றுநர் போக்ஸ் ஸ்போர்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

உலக அளவில் பிரபலமானவர் கால்பந்தாட்ட வீரர் லயனல் மெஸ்சி. 4 முறை உலகின் சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான விருதை பெற்றுள்ள மெஸ்சி சமீபகாலமாக தோல்வியை தழுவி வருவது இரசிகர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

குறிப்பாக, கடந்த மாதம் நடந்து முடிந்த கோபா அமெரிக்க கால்பந்து இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனா தோல்வி அடைந்ததை அடுத்து இரசிகர்களின் மத்தியிலும், ஊடகங்களிலும் மெஸ்சி குறித்த அதிருப்தியான விமர்சனங்களே வெளிவந்தன. இதற்கு ஆர்ஜென்ரீனா அணியின் பயிற்சியாளர் கெரார்டோ மார்டினோ கடும் எதிர்ப்பைத்தெரிவித்துள்ளார். இதுகுறித்து போக்ஸ் ஸ்போர்ட்ஸ் செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்த பேட்டி பின்வருமாறு:

நான் மெஸ்சியாக இருந்திருந்தால் நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே ஆர்ஜென்ரீனா அணியில் இருந்து விலகியிருப்பேன். பார்சிலோனாவுக்காகவே தொடர்ந்து விளையாடியிருப்பேன். மெஸ்சியின் மீது பல விமர்சனங்கள் வைக்கப்பட்டாலும், வரும் செப்ரெம்பர் மாதம் மெக்ஸிக்கோவில் நடைபெற உள்ள நட்பு ரீதியிலான போட்டிகளில் பங்கேற்க அவரை நான் நிச்சயமாக அழைப்பேன். ஆனால், மெஸ்சி என் அழைப்பை ஏற்று பங்குபெறுவாரா என எனக்குத் தெரியாது. ஒரு வேளை அவர் அப்படி வரவில்லை என்றால் அது எனக்கு மிகப்பெரிய சங்கடமாகவே இருக்கும். மெஸ்சி பங்கேற்க மாட்டார் என யாரும் சொல்லவில்லை. இது என்னுடைய கருத்து. ஆர்ஜென்ரீனா கால்பந்து சம்மேளனத்தின் அபிப்பிராயம். அவ்வளவுதான் என அவர் மேலம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் - வன்னி)



குலசிங்கம் திலீபன்

முதன்மை வேட்பாளர்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

விளையாட்டுச் செய்திகள்

### மதுஷன், இயலரசன் பொறுப்பான செயற்பாடு

# வென்றது யாழ். மத்திய கல்லூரி

(யாழ்ப்பாணம்)

மதுஷன், இயலரசன் ஆகியோ-ரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 43 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான மூன்றாவது சுற்றுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.


இதில் நேற்று முன்தினம் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி ஜெயதர்சன், நிதுஷன் நிலோஜன், மதுஷன், டிலோசியன் ஆகியோரின் பொறுப்பான துடுப்பாட்டத்தின் மூலம் சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயதர்சன் 35, நிதுஷன் 24, மதுஷன், டிலோசியன் ஆகியோர் தலா 28, நிலோஜன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றொசான் 51 ஓட்டங்களைக்கொடுத்து மூன்று, சௌமியன் 25 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு, கஜதீபன் 28 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 194 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்கு அபிநாத் பொறுப்பு ஆடி ஓட்டங்களைக் குவித்தபோதிலும் ஏனைய வீரர்கள் யாழ். மத்திய கல்லூரி அணியின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விக்கெட்டுக்களை மளமளவென பறிகொடுத்தனர். இறுதி வரை போராடிய அபிநாத்தின் முயற்சிக்கு சக வீரர்கள் ஒத்துழைப்பு வழங்காமை காரணமாக அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல அவரால் முடியவில்லை. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 38.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் அபிநாத் 88 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 65, செந்தூரன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுஷன் 25 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, இயலரசன் 23 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு, கலைக்ஷன் 24 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பந்து வீச்சு, துடுப்பாட்டத்தில் ஜொலித்த மதுஷன் களத் தடுப்பில் சில பிடிகளைக் கோட்டைவிட்டமை எதிரணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ள வழிவகுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது சுற்றில் யாழ். மத்திய கல்லூரி இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது. மூன்றாவது சுற்றின் முதல் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றதுடன் மூன்றாவது போட்டியில் எதிர்வரும் 13ஆம் திகதி களமிறங்கவுள்ளது. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து குருநாகல் கல்கமுக மத்திய மகாவித்தியாலய அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## மத்தியஸ்தர்களுக்கான ஆயத்த வகுப்பு


(யாழ்ப்பாணம்)

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படவுள்ள கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான செயன்முறைப் பரீட்சைக்கான ஆய்த்த வகுப்பு இன்று முற்பகல் 10.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 22,23ஆம் திகதிகளில் யாழ். மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான ஆயத்த வகுப்புகள் இன்று முற்பகல் 10.00 மணிக்கு பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் மனோகரனின் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த சகல மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் செயலாளர் அறிவித்துள்ளார்.



## பாடசாலை மட்ட தேசிய கராத்தே போட்டி

# நாகர்கோவில் ம.வி. வீரர்கள் தகுதி

பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கராத்தேப் போட்டியின் குழுக் காட்டாப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று நாகர்கோவில் மகாவித்தியாலய வீரர்கள் மூவர் தேசிய மட்டப்போட்டிக்கு தகுதி பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழா அண்மையில் நிறைவடைந்தது. இதில் குழுக்காட்டாப் போட்டியில் நாகர்கோவில் மகாவித்தியாலய வீரர்கள் மூவர் வெண்கலப் பதக்கம் வென்றனர். இதில் செ. ஜெயநீதன், சி. கஜீபன், ச. கயந்தன் ஆகியோரே வெண்கலப் பதக்கம் வென்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

மாகாண மட்டப் போட்டியில் பதக்கம் வென்று தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள எமது வீரர்கள் பாடசாலையின் புகழை தேசிய மட்டத்திற்கு கொண்டு சென்றமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் என பாடசாலை அதிபர் வாழ்த்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மகிழ்ச்சியுடன் வழியனுப்புங்கள்

இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி சங்கக்காரவுக்கு சிறந்த பிரியாவிடை அளிக்க வீரர்கள் அர்ப்பணிப்புடன் தங்கள் பணியைச் செய்ய வேண்டும் என இலங்கை அணியின் முன்னாள் கப்டன் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். இந்திய அணி வலுவான துடுப்பாட்ட வரிசையைக் கொண்டுள்ளது. அதனை சிறந்த முறையில் எதிர்கொண்டு இறுதித் தொடரில் ஆடும் சங்காவை மகிழ்ச்சியுடன் வழியனுப்பவேண்டும் என்றார்.

## புதுமுக வீர,வீராங்கனைகளுக்கான தடகளம்

# முகாமைத்துவ கற்கைகள் பீடம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கான தடகளப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முகாமைத்துவப் பீடம், பெண்கள் பிரிவில் கலைப்பீடம் என்பன முதலாமிடத்தைப் பிடித்துக்கொண்டன.

யாழ். பல்கலைக்கழக புதுமுக மாணவர்களுக்கான நடப்பு ஆண்டுக்கான தடகளப் போட்டி கடந்த 25, 26ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கலை, விஞ்ஞானம், மருத்துவம், விவசாயம், முகாமைத்துவம், வியாபாரக் கற்கைகள், இணை மருத்துவ விஞ்ஞான துறைகளைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் பங்குகொண்டனர்.

இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை முகாமைத்துவப் பீடமும், இரண்டாமிடத்தை கலைப்பீடமும், மூன்றாமிடத்தை விஞ்ஞான பீடமும் பிடித்துக் கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை கலைப்பீடம், இரண்டாமிடத்தை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், மூன்றாமிடத்தை விஞ்ஞான பீடம் என்பன பிடித்துக்கொண்டன.

ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் முதலாமிடத்தையும், கலைப்பீடம் இரண்டாமிடத்தையும், விஞ்ஞான பீடம் மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் சிறந்த தட வீரராக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த கே. அனுஜன், சிறந்த கள வீரராக முகாமைத்து கற்கைள் வணிக பீடத்தைச் சேர்ந்த டி.எல்.ஜே.என். லியனகே ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பெண்கள் பிரிவில் சிறந்த தட வீராங்கனையாக முகாமைத்துவ கற்கை வணிக பீடத்தைச் சேர்ந்த சேத்தான சமோதனி, சிறந்த கள வீராங்கனையாக கலைப்பீடத்தைச் சேர்ந்த ஆர். ஜோபிதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி நிகழ்வில் பலர் கலந்துகொண்டு வீர,வீராங்கனைகளை உற்சாகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## அனுபவம் புதுமை

தென்னாபிரிக்க அணிக்கெதிரான கிரிக்கெட் தொடரின் மூலம் எங்கள் அணி சிறந்த அனுபவங்களைப் பெற்றுள்ளது. இதன் மூலம் அடுத்து வரும் தொடர்களில் எங்களால் இன்னும் பிரகாசிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என பங்களாதேஷின் டெஸ்ட் அணிக் கப்டன் எம். றஹீம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கெதிரான ஒரு நாள் தொடரை நாம் கைப்பற்றியது வரலாற்றுச் சாதனை. தென்னாபிரிக்க அணியுடனான இரு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரையும் நாங்கள் சமன் செய்திருந்தோம். மழை ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியபோதிலும் எங்கள் வீரர்களும் சிறப்பாகச் செயற்பட்டதை கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் – வன்னி)



பொ. குணபாலா



X 5

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



# மொழியும் நாங்களும்

- நடேசன்

இரண்டு வருடங்கள் முன்பாக ஸ்பானிய வகுப்பில் சேர்ந்து ஸ்பானிய மொழியைப் படித்தேன். கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் படித்தபின் ஸ்பானிஸ் மொழி தெரிந்துவிட்டது என்ற எண்ணத்தில் வகுப்பை நிறுத்தினேன். அதற்கு வீண் செலவு என்ற கருத்து வீட்டில் இருந்ததும் ஒரு காரணம். ஆனால் இந்த அறிவை வைத்து ஸ்பானிய படங்களைப் பார்த்துக் கொள்ள முடியும் என்ற முடிவுடன் வகுப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தேன். தற்போது இரண்டு வருடங்களில் ஸ்பானிஸ் மொழி எதுவும் என்னிடம் மிஞ்சியிருப்பதாக தெரியவில்லை.?

இலங்கையில் இருந்த காலத்தில் இலங்கையின் தென்பகுதி மக்களிடையே வேலை செய்ததால் சிங்கள மொழியை எழுத முடியாவிடினும் பேசவும் புரிந்து கொள்ளவும் முடிந்தது. ஆனால் கால் நூற்றாண்டு கால அவுஸ்திரேலியா வாசத்தால் அரைவாசிக்கு மேல் மறந்து விட்டது என்பதை மீண்டும் இலங்கை சென்றபோது உணர்ந்துகொண்டேன்.

பயன்பாடு இல்லாத மொழி அழிந்து விடும் என்பதற்கு நானே ஒரு சாட்சி.

மொழி முக்கியமானதா? அழியாமல் பாதுகாக்க வேண்டியதா?

தற்காலத்தில் ஆங்கில மயப்படுத்தப்பட்ட கணினியுகத்தில் கேட்கப்படவேண்டிய கேள்வி.

மிருகவிஞ்ஞானம், உயிரியல் என்பவற்றில் சிறிது பழக்கமுள்ளதால் தற்காலத்தில் இருந்து சற்று முன்னோக்கி பார்க்கிறேன். அதாவது சில மில்லியன் வருடங்கள் முன்பாக வானரங்கள் மற்றும் மனிதக்குரங்குகளில் இருந்து இரண்டு கால்களால் நடக்கத் தொடங்கியதாலும், மூளை விருத்தியடைந்ததாலும் மனிதன் அவற்றில் இருந்து வேறுபடுகிறான். இதைவிட முக்கியமான ஒருவிடயமாக ஆதி மனிதர்களிடம் மொழி தோன்றுகிறது.

மொழி எமது சிந்தனையை எண்ணத்தை மற்றவர்களிடம் பரிமாற உதவுகிறது. அதேபோல் கவலை காதல் வெறுப்பை மற்றவர்களிடம் வெளிப்படுத்தவும் உதவுகிறது.

மிருகங்களுக்கும் சத்தமிடமுடியும் என நீங்கள் கூறமுடியும். ஆனால் ஆராய்ச்சியின்படி 12 விதமான ஒலியையே அவைகளால் வெளிப்படுத்த முடியும். ஆனால் மனிதர்களாகிய நாம் 50 விதமான ஒலியை வெளிப்படுத்துகிறோம். அந்த 50 விதமான ஒலியை வைத்து ஒரு இலட்சம் வார்த்தைகளை உருவாக்க முடியும்.

மொழியில் இலக்கணம் உருவாகிறது. குழந்தைகள் ஆரம்பத்தில் பேசும்போது மழலை மொழியிலே முதல் இலக்கணம் உருவாகிறது. இதில் மொழியின் வளர்ச்சியை தொடர்ந்து பேணுவதற்காக நமது மூளை பெரிதாகிறது.

வோகல் கோட்(vocal cord) எனப்படும் குரல்நாண் மற்றைய மிருகங்களுக்கு வாய்க்கு சமீபத்திலும் மனிதர்களில் வாயீக்கு தூரத்திலும் உள்ளது. இப்படி கீழ் இறங்கியது நாங்கள் பேசுவதற்கு ஏற்றதாகிறது.

இதேபோல் குழந்தைகளுக்கு மற்றய மிருகங்கள் போல் ஆரம்பத்தில் மேலே இருந்து கீழ் இறங்குவதுடன் இந்த பதினாலு வயதில் குரல்நாண் தடிப்பாகிறது என்பதை எந்தத் தாய் தந்தையராலும் தெரிந்து கொள்ளமுடியும். எமது சிறுவயதில் பேசிய மொழியே எமது மூளையின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

இது மட்டுமா?

தற்கால மனிதன் தோன்றி ஒரு இலட்சம் வருடங்களில் ஐயாயிரம் மொழிகளுக்கு மேல் உருவாகியது.

ஒவ்வொரு மொழியும் தன்னைச் சுற்றி 5000 மேற்பட்ட கலாச்சாரமுள்ள சமூகங்களை உருவாக்கி இருக்கிறது.

தற்பொழுது நாம் நாமாக இருப்பதற்கு உதவுவது எந்த மொழி? நாம் மழலையில் பேசிய மொழியாகும்.

மீண்டும் நான் தொடங்கிய இடத்திற்கு வருகின்றேன்.

தேவபாஷை எனப்பட்ட லத்தீனில் இருந்த விவிலியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க அக்காலத்தில் போப்பாண்டவரும் மற்றும் கத்தோலிக்க உயர்பீடத்தினரும் எதிர்த்தனர். ஆனாலும் இங்கிலாந்தில் மன்னர் ஜேம்ஸ் அவர்களால் நியமிக்கப்பட்ட குழுவால் விவிலியம் மொழிபெயர்க்கப்பட்டது. அதனாலே இப்பொழுதும் கிங்ஜேம்ஸ் பைபிள் என்பார்கள். அப்படிப்பட்ட லத்தீன்மொழி தற்பொழுது இறந்த பாஷையாகிவிட்டது. ஆனாலும் ஆரம்பத்தில் மாக், மத்தியே, ஜோன், லூக் ஆகியோர் ஆரம்பத்தில் விவிலியத்தை எழுதினார்கள் ஆனால் சாதாரண மக்களால் பேசப்பட்ட கிரேக்க மொழி இன்னமும் இருக்கிறது.

இதேபோல் தேவபாஷையான சமஸ்கிருதம் மிகவும் செழிப்பான இலக்கியங்களையும் வேதங்களையும் மற்றும் சாத்திரம் முதலானவற்றையும் எழுதிய மொழி. ஆனால் தற்பொழுது பிராமணர்கள் சுலோகம் சொல்வதற்கு மாத்திரம் பாவிக்கப்படுகிறது.

இதைச் சொல்வதன் காரணம் நமது தமிழுக்கு இப்படியான நிலைமை வரக்கூடாது என்ற ஆதங்கமே. தமிழ்நாட்டில் கொஞ்சம் ஆங்கிலம் படித்தவர்கள் ஆங்கிலத்திலே பேசுகிறார்கள். அதாவது படித்தவர்களின் மொழியாகிறது. தமிழ் பாமரர் மட்டும் பேசும் நிலைக்கு தள்ளப்படுகிறது. அப்படி பேசுபவர்களை நாம் குற்றம் சொல்ல முடியாது. தமிழில் அறிவியல் கணிதம் பொருளாதாரம் முதலான விடயங்கள் எழுதப்படுவதில்லை. இலக்கியம் தமிழில் படைக்கப்பட்டாலும் அது எத்தனை பேருக்குத் தேவைப்படும்?

ஆங்கிலம் படித்தவர்கள் ஆங்கிலத்திலே வாசித்துவிடுவார்கள். அப்படியானால் தமிழ் இலக்கியம் ஒரு சதவீதமானவர்களால் வாசிக்கப்படுமா?

நாம் வாழும் சமூகத்தில் எந்த விடயத்தையும் பொருளாதாரம் கட்டுப்படுத்துகிறது. பொருளாதாரத்திற்கு தேவையான விடயங்களும் இல்லாதபோது யாருக்கு மொழி தேவைப்படும்?

என்னைப் பொறுத்தவரை சதாரணமான தமிழ் குடிமக்களுக்கு தமிழ் சினிமாப்பாட்டுக் கேட்பதற்கும் சீரியல் பார்ப்பதற்குமே தற்பொழுது தமிழ் தேவையாக இருக்கிறது.

ஈழத்தைப் பொறுத்தவரை நாங்கள் மணவர்களாக இருந்த காலம் தமிழுக்கு சிறந்தகாலம். தமிழ் மாணவர்கள் தமிழிலே உயர்தர வகுப்புவரையும். படிப்பது மட்டுமல்ல மருத்துவ, மிருகமருத்துவ மாணவர்களும் முதல் இரண்டு வருடமும் தமிழிலே. படித்து பரீட்சை எழுதமுடியும். பொருளாதாரம், அரசியல் போன்ற பாடங்கள் எடுத்து பட்டதாரியாக முடியும். இப்படியான தேவைகளுக்காக பல புத்தகங்கள் மொழி பெயர்க்கப்பட்டிருந்தன. இன்னமும் இந்த நிலைமை தொடர்கிறது.

ஆனால் இலங்கைத் தமிழர்கள் மிகவும் சிறிய தொகையினர்.

சங்கம் வளர்த்த தமிழ் நாட்டினர் பழைய பெருமைகளைப் பேசுவதைக் குறைத்து எதிர்காலத்தில் தமிழ் மொழி தொடர்ந்தும் பேச்சு, எழுத்து மொழியாக இருப்பதற்கான அதன் எதிர்காலத்துக்கான வழிகளைத் திறக்க முயன்றாலே தமிழ் புழக்கத்தில் இருக்கும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் வளர்ப்பது நல்ல விடயம். அது கேக்கின் மேல் வைக்கும் ஐசிங் மாதிரி. ஆனால் கேக்கை நமது நாடுகளில்தான் உருவாக்கவேண்டும் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்

தமிழில் நல்ல. மாற்றம் ஏற்பட்டதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் எல்லோரையும்விட முகநூல் ஸ்தாபகர் Mark Zuckerberg முக்கியமானவர். காரணம் அவரால் தமிழை பலர் எழுதுகிறார்கள்.

நல்ல விடயத்தை எழுதுகிறார்களோ இல்லையோ, எழுதுகிறார்கள்.

தமிழை வளர்க்க வீரமாமுனிவர் என்ற இத்தாலியர் போல் Mark Zuckerberg என்ற அமெரிக்கருக்கு நான் தலை வணங்குகிறேன். அதுவும் தமிழுக்காக.

# வாழ்க்கையில் வெற்றி பெற....

உங்கள் இலட்சிய புருஷர்களைப் பற்றிய நூல்களைப் படித்து, அவர்களின் வரலாறுகளை அறிந்து கொள்ளுங்கள். அவர்கள், எந்த நல்லியல்புகளால் வாழ்க்கைப் போரில் வெற்றி கண்டனர் என்பதை உணர்ந்து, அவற்றை; உங்கள் வாழ்க்கையிலும் கடைப்பிடியுங்கள். உங்களுடைய இலட்சிய புருஷர்கள் பற்றிய நூல்கள், உங்களுக்கு உணர்ச்சியூட்டி, ஊக்கத்தை அளிக்கும் என்பது. திண்ணம். அவையே உங்களைப் பண்படுத்தி, உங்களுக்கு வெற்றி மாலை சூட்டும்; இது உலகறிந்த உண்மை.



பைபிளையும், டால்ஸ்டாயின் நூல்களையும் படித்ததால் தான், காந்தி மகாத்மாவானார். நெப்போலியனின் இராணுவ வரலாறல்லவோ முஸ்தபா கமாலை, "அட்டாதுர்க்" ஆக்கியது. எதிர்பாரா வண்ண்ம், தாம் பார்த்த ஹனிபாலின் வரலாறு தான், ஐசன்ஹோவரின் வாழ்க்கையையே மாற்றியமைத்து, அவரைப் பெரும் தளபதியாக்கியது.

கால் மார்க்சின் மூலதனமே, சமதர்ம ரஷ்யாவை உருவாக்க லெனினுக்குக் காரணமாக இருந்தது. "வெள்ளை மாளிகையின் சுவர்களில் மாட்டப்பட்டிருக்கும் ஆபிரகாம் லிங்கனின் உருவப்படம் தான், நான் சோர்வுற்ற சமயங்களில் எனக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஊட்டியது..." என்று தியோடர் ரூஸ்வெல்ட் அடிக்கடி வியந்து கூறுவார்.

ஆகவே, நீங்களும் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமாயின், உங்களுடைய இலட்சிய புருஷர்கள் காட்டிச் சென்ற வழியில் பின்தொடர்ந்து செல்லுங்கள். அவர்களுடைய நல்லியல்புகளை, உங்களுடைய நல்லியல்புகளாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

('வாழ்க்கையில் வெற்றி' நூலிலிருந்து)



# இது ஒரு விடுகதை!

பந்திக்கு முந்து, படைக்குப் பிந்து என்ற பழமொழி எல்லோருக்கும் தெரியும். அதற்கு விளக்கமாக, முதல் பந்தியிலேயே சாப்பிட உட்கார்ந்து விடு; முதல் பந்தியில் சாப்பிடுவோருக்குப் படைப்பதற்குப் (பரிமாறுவதற்கு) பிந்து. ஏனென்றால், சோறு, கறியைப் பரிமாறுவதில் ஈடுபட்டுவிட்டால், பின், நீ உட்கார்ந்து சாப்பிட மனம் கொள்ளாது..." என்று சிலர் விளக்கம் கூறி இருக்கின்றனர்.

இது அத்தனை பொருத்தமாகப் படவில்லை. காலஞ்சென்ற பெருஞ்சொல் விளக்கனார் அ.மு.சரவண முதலியாரிடம் (அ.ச.ஞானசம்பந்தத்தின் தந்தையார்) இந்த ஐயத்தைக் கூறி அவரிடம் சிலர் விளக்கம் கேட்டிருக்கின்றனர்.

அவர் கூறிய கருத்து: பந்திக்கு முந்து; படைக்குப் பிந்து என்பது பழமொழியே அல்ல; அது ஒரு விடுகதை. பந்திக்கு முந்தும்; படைக்குப் பிந்தும்; அது என்ன? என்று கேட்பது அக்காலத்தில் வழக்கம்.

அந்த விடுகதைக்கு விடை: வலது கை என்பதாகும். பந்தியில் சாப்பிட உட்காரும்போது, நம் வலது கைதான் முந்தி உணவை எடுக்கும். வில்லேந்திப் போருக்குச் செல்லும்போது, அதே வலது கை, எவ்வளவுக்கெவ்வளவு பின் செல்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு, அம்பானது வேகமாகச் செல்லும்.

இந்த விடுகதையே நாளடைவில் சிதைந்து, தமிழர்களை இழிவுபடுத்தும் பழமொழியாக உருவெடுத்து விட்டது எனக் கூறி உள்ளார்.

நடித்திருந்தார்.

ஸ்டேட்டஸ் போடு சாட் பண்ணு." தற்போது அதிகமாகப் பகிரப்பட்டு வரும் ஃபேஸ்புக்

ஆனால் கால் நூற்றாண்டு கால அவுஸ்திரேலியா வாசத்தால் ... உள்ளது. இப்படி கீழ் இறங்கியது நாங்கள் பேசுவதற்கு ஏற்றதாகிறது. ... ஆங்கிலத்திலேயே பேசுகிறார்கள். அதாவது படித்தவர்களின் மொழியா- ... நான் தலை வணங்குகிறேன். அதுவும் தமிழுக்காக. ... இந்த விடுதலையே நாளடைவில் சிதைந்து, தமிழர்களை இழிவுபடுத்தும் பழமொழியாக உருவெடுத்து விட்டது எனக் கூறி உள்ளார்.

# பீட்ரூட் ஜூஸ் மகிமை!

அப்பிள் ஜூஸ், ஒரேஞ் ஜூஸ், மாதுளம் ஜூஸ் அருந்தியிருப்பீர்கள். பீட்ரூட் ஜூஸ்?

தொடர்ந்து பீட்ரூட் ஜூஸ் அருந்தி வந்தால், இதயத்துக்கு மிகவும் நல்லதாம். அதாவது, பீட்ரூட் ஜூஸில் நைதரேற் உப்பு இருக்கிறது. அது இரத்தக்குழாய்களை விரிவுபடுத்திவிடுவதால், இரத்தம் எளிதாக உடலில் பாய்கிறது. அதனால், இதயம் மிகவும் கஷ்டப்பட்டு இரத்தத்தைப் பம்ப் செய்ய வேண்டியதில்லை. இரத்தத்தைத் தூய்மைப்படுத்த அதிக ஒட்சிசனும் தேவையில்லை.



கடினமான உடல் உழைப்பின்போது - உடற்பயிற்சி செய்யும்போது - மூச்சு வாங்காது. நீண்ட நேரம் உடற்பயிற்சி செய்ய முடியும்.

மிகை இரத்த அழுத்தம் உள்ளவர்கள் தொடர்ந்து 14 நாட்கள் பீட்ரூட் ஜூஸ் அருந்தி வந்தால், 7 சதவீதம் மிகை இரத்த அழுத்தம் குறைந்துவிடும்.

இவற்றையெல்லாம் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள், Queen Mary University of London - ஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள்.

மனிதனின் பயணத்துக்கு "கார்" அத்தியாவசியமாகி விட்டது. பெருநகரங்களில் கார்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டதால், அவை போக்குவரத்து நெருக்கடியை ஏற்படுத்தி விடுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு சில நகரங்களில் கார்களின் போக்குவரத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த நகரங்கள்:

வெனிஸ் - இத்தாலி: இத்தாலியின் வெனிஸ் நகரில் போக்குவரத்தே படகு மற்றும் நீர் டாக்சிகள் மூலம்தான். காரின் தேவைகளைப் புறக்கணித்து வாழும் ஐரோப்பா கண்டத்தின் மிகப்பெரிய நகரப் பகுதி இதுதான்.

இல்கா கிராண்டே - பிரேசில்: வெப்பமண்டலத் தீவு. கடும் வெயிலைப் போலவே கடுங்குளிரும் இங்கு நிலவும். உலகில் அழிந்து வரும் உயிரினங்கள் பட்டியலில் பெரும்பாலானவை இங்கு உண்டு. அடிப்படை வசதிகள் குறைவு. மக்கள் தொகை இரண்டாயிரம்தான். கார்கள், பிற சத்தம் எழுப்பும் வாகனங்களுக்கு இங்கு தடை உண்டு.

டைம்ஸ் ஸ்குயர் - நியூயோர்க் சிற்றி: இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் காலாற நடந்து சென்று அனைத்தையும் இரசிக்கும் வகையில் கார்கள் தடை செய்யப்பட்டுள்ளன. தினமும் சுமார் 2,50,000 சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர், கார்களுக்குத் தடை என்பதால் சுற்றுச் சூழல் மாசுபடுதல் குறைவாகவே உள்ளது.

ஃபெஸ் எல் ஃபாலி: மொராக்கோ நகரை ஒட்டியுள்ள மிகப் பழைய நகரம், ஃபெஸ் எல் ஃபாலி. உலகிலேயே கார் பயன்படுத்த தடையுள்ள மிகப்பெரிய பகுதியும் இதுதான். அடுத்தடுத்து வீடுகள் உள்ள தெருக்கள் அதிகம். இதனால் கார்களில் பயணிக்கவே இயலாது என்ற உண்மையும் இதில் அடக்கம்!

மாகிநாக் தீவு - மிச்சிகன்: அமெரிக்காவில் ஏராளமான ஹைவே பாதைகள் உள்ளன. அவற்றில் இந்தப் பகுதிக்குச் செல்லும் பாதையில் மட்டும் கார்கள் செல்ல அனுமதியில்லை. இது ஹரோன் ஏரியை ஒட்டி அமைந்திருப்பதால் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து வரும் பார்வையாளர்களும் சைக்கிள் மற்றும் குதிரை வண்டிகளில் மட்டுமே செல்ல இயலும்.

# கார்களுக்கு இங்கே தடை!



# சினிமா சினிமா

❖ வில்லனாக நடித்தவர்கள் பிற்காலத்தில் ஹீரோவாகி முன்னணி இடத்தைப் பிடிப்பது ரஜினி, சத்யராஜ், சரத்குமார் தொடங்கி தற்போதைய பாபி சிம்ஹா வரை தொடர்கிறது. இவர்கள் யாவருமே ஹீரோவான பின்பு வில்லனாக நடிக்கவில்லை. ஷங்கரின் இயக்கத்தில் ரஜினி நடித்த "சிவாஜி" படத்தில் வில்லனாக நடிக்க சத்யராஜிடம் பேசப்பட்டது. ஆனால் அதை சத்யராஜ் ஏற்கவில்லை. அதே போல் ராஜ்கிரணைக் கேட்ட போது அவரும் அந்த வாய்ப்பை மறுத்து விட்டார். ஆனால் தற்போது சத்யராஜ் மீண்டும் வில்லனாக நடிக்கும் சூழல் உருவாகியுள்ளது. சிவகார்த்திகேயனின் "வருத்தப்படாத வாலிபர் சங்கம்" படத்தில் எதிர்மறையான கதாபாத்திரத்தில் நடித்தார் சத்யராஜ். "நண்பன்" படத்தில் குணச்சித்திர வேடம் ஏற்றார். "ராஜா ராணி" படத்தை இயக்கிய அட்லி தற்போது விஜய் நடிக்கும் படத்தை இயக்குகிறார். சமந்தா, எமி ஜாக்சன் இருவரும் ஹீரோயின்களாக நடிக்கின்றனர். இதில் வில்லனாக நடிக்க சத்யராஜை அணுகி உள்ளாராம் அட்லி.

❖ ரஜினி இரசிகர்களின் மனதில் எப்போதும் நீங்கா இடம் பெற்றுள்ள படம் "பாட்ஷா." சமீபத்தில் அஜித்தை சந்தித்த சுரேஷ் கிருஷ்ணா, அவரிடம் "பாட்ஷா 2" படத்துக்கான கதையைச் சொல்லியிருக்கிறார். ஏற்கனவே ரஜினி நடித்த "பில்லா" படத்தின் ரீமேக்கில் நடித்தவர் அஜித். "பில்லா 2" படத்திலும் நடித்தார். தற்போது "பாட்ஷா" இரண்டாம் பாகத்தில் நடிக்கும் அதிகாரபூர்வ அறிவிப்பை அஜித் விரைவில் வெளியிடலாம் என்கிறார்கள்.

❖ மேடை நாடகங்களிலிருந்து வந்ததாகச் சொல்லிக் கொண்டாலும், சினிமாவின் புகழ் வெளிச்சத்துக்குப் பின் மீண்டும் நாடகங்களில் நடிப்பதை பெரும்பாலான நட்சத்திரங்கள் விரும்புவதில்லை. நீது சந்திரா நாடக நடிகையாக இருந்து சினிமாவுக்கு வந்தவர். தமிழில் தற்போது வைகை எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட ஒரு சில படங்கள் மட்டுமே கையில் இருப்பு. இந்த இடைவெளியில் நாடகத்தில் நடித்துள்ளார். உருது மொழி நாவலான "உம்ரா ஜானை" தழுவி உருவாகியுள்ள அந்த நாடகத்தில் தனது கதக் நடனத் திறமையை வெளிப்படுத்தும் விதமாக அவருக்கு கதாபாத்திரம் கிடைத்துள்ளது. இந்த நாவல் ஹிந்தியில் படமான போது அந்த பாத்திரத்தில் ஐஸ்வர்யாராய் நடித்திருந்தார்.

❖ ஹீரோவுக்கு நிகரான சம்பளம் பெறுவதுதான் இப்போதைய காமெடி நடிகர்களின் வழக்கமாக உள்ளது. 20 நாள்கள் ஒருங்கிணைந்த கால்ஷீட்டுக்கு சந்தானம் கேட்கும் தொகை சில கோடிகளைத் தாண்டுகிறது. வடிவேலு தின சம்பளமாக சில இலட்சங்களைக் கேட்கிறார். கோலிவுட் காமெடி நடிகர்களைப் பார்த்து டோலிவுட் காமெடி நடிகர் பிரமானந்தமும் தன் சம்பளத்தை உயர்த்தி விட்டார். என்.டி.பாலகிருஷ்ணாவின் 99ஆவது படமாக உருவாகும் "டிக்டேட்டர்" படத்தில் நடிப்பதற்காக 30 நாள்கள் கால்ஷீட்டுக்கு சந்தானம் பாணியில் சில கோடிகளை கேட்டு தயாரிப்பு தரப்பை அதிர்ச்சி அடையச் செய்துள்ளார் பிரமானந்தம்.

❖ அமரர் கல்கியின் "பொன்னியின் செல்வன்" இன்னும் திரை வடிவம் பெறாத நாவல். தற்போது முழு நீள அனிமேஷன் படமாக உருவாகி வருகிறது. பி.சரவணராஜா தயாரித்து இயக்குகிறார். 2017 ஆம் ஆண்டு மத்தியில் இப்படம் பல இந்திய மொழிகளில் வெளியாகவுள்ளது. எம்.கார்த்திகேயன் அனிமேஷன் இயக்குநராக பணியாற்ற, பி.லெனின் எடிட் செய்கிறார். நாவலின் உண்மைத் தன்மையை மீறாமல் காட்சிகள் இருக்கும் என்கிறார் இயக்குநர் சரவணராஜா.

❖ துல்கர் சல்மான், கார்த்தி இருவரும் ஹீரோக்களாக நடிக்க மணிரத்னம் இயக்கும் புதிய படத்தில் ஐஸ்வர்யா ராய் நடிப்பதாக இருந்தது. ஐஸ்வர்யா ராய் ஹிந்தியில் ரீ என்ட்ரி ஆகும் படத்தில் பிஸியாக இருப்பதால் கால்ஷீட் கொடுக்க முடியாமல் இருக்கிறார். அதனால் அந்த வாய்ப்பு இப்போது கீர்த்தி சுரேஷுக்கு சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழில் சிவகார்த்திகேயனுடன் "ரஜினி முருகன்" உட்பட 5 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்து வருகிறார் கீர்த்தி சுரேஷ்.

❖ தமிழில் முழுக்க முழுக்க ஆங்கிலத் தலைப்புடன் வெளிவரும் படம் "எப் பி ஸ்டேட்டஸ் போடு ராட் பண்ணு" தற்போது அதிகமாகப் பகிரப்பட்டு வரும் ஃபேஸ்புக் இக்கதையின் முக்கிய கதாபாத்திரம். ஃபேஸ்புக்கில் இடம் பெற்றிருக்கும் ஹீரோ தனது ஸ்டேட்டஸை வெளிப்படுத்ததால் ஏற்படும் பாதிப்புகளும், அவ்வப்போது அவர் போடும் ஸ்டேட்டஸ்களால் அவருக்கு என்ன நிகழ்கிறது என்பதுதான் கதையாம்.

❖ சமீபத்தில் பள்ளிப் படிப்பை முடித்துள்ள லட்சுமிமேனன், தற்போது பி.ஏ.ஆங்கிலம் படித்து வருகிறார். கூடவே படங்களிலும் நடித்து வருகிறார். இதே பாணியில் இன்னொருவர் நிவேதா தாமஸ். "பாபநாசம்" படத்தில் கமலின் மூத்த மகளாக நடித்தவர். தமிழில் ஒரு படமும், தெலுங்கில் ஒரு படமும் நடித்து வரும் இவரும், தன் கல்லூரிப் படிப்பை விடாமல் தொடர்கிறார்.


❖ நான் கடவுள் படத்தில் நடித்த ராஜேந்திரன் காமெடி மார்க்கெட், தற்போது உச்சத்தில் இருக்கிறது. இவருக்கு தணிலை கண்டம் படத்திற்கு பின், பல படங்களில் சோலோ காமெடியனாக ஒப்பந்தமாகியிருக்கிறார்.

❖ சினிமாவில் கதாநாயகியாவதற்கு முன், ஐந்து ஆண்டுகளாக, தெலுங்கு, "டிவி" தொடர்களில் நடித்து வந்துள்ளார் ஸ்ரீதிவ்யா.

❖ அட்லியின் உதவியாளர் இயக்கும் புதிய படத்தில், முதன் முறையாக, மூன்று வேடங்களில் நடிக்கிறார் சிவகார்த்திகேயன்.

❖ புதிய படத்தில் தன்னுடன் ஜோடியாக நடிக்க, ஒரு பொலிவுட் நடிகையை இறக்குமதி செய்துள்ளார் சந்தானம்.





**மேடம்**
உங்களைப் புகழ்ந்து உதவி பெற வருவோரில் எச்சரிக் கையாக இருங்கள்

**ரிஷபம்**
பணி இடங்களில் தடை தாம தம் இடையூறு ஒத்துழையா மையை எதிர் பார்த்தல்

**மிதுனம்**
தேக நலனில் சுூழயளவு அக் கறை எடுப்பது அவசியமாகும்

**கடகம்**
தெய்வத்திருப்பணிக்கு பணம் கொடுத்து உதவ முன் வருதல்

**சிம்மம்**
ஈகோவைப்புறந்தள்ளி விட்டு சுமுகமாக பழக முற்படுங்கள்

**மீனம்**
நண்பர்களுடன் கருத்து வேறு பாட்டினை எதிர்பாருங்கள்

## முரசின் இன்றைய பலன்

09.08.2015 ஞாயிற்றுக்கிழமை

மன்மத வருஷம் ஆடி மாதம் 24 ஆம் திகதி.
தசமி திதி / சித்த யோகம்
ரோகினி நட்சத்திரம் முன் இரவு - 10.23 வரை பின் மிருகசீரிடம்



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**கன்னி**
பொறுப்பின்றி கொடுத்த கடனைப பெற பொலிஸ் செல்ல முற்படல்

**கும்பம்**
பொறுமையைக் கடைப்பித் ததினால் சச்சரவு நீங்கி விடல

**மகரம்**
பாலியல் விவகாரம் கௌரவத் தைப் பாதித்து விடலாம்

**தனுசு**
புதிய கற்கை நெறிகள் பயில ஆர்வம் பிறக்கும்

**விருச்சிகம்**
பெண்கள் தனித்திருப்பதையும் பிறருடன்பழகுவதையும்தவிர்த்து விடல்

**துலாம்**
எதிர்கால வளர்ச்சிக்கு குடும்ப சகிதம் திட்டமிடல்

# தேர்தலில் வெற்றி பெற்று மக்கள் தேவைகளை நிறைவேற்றுவோம்

## அரியாலை சந்திப்பில் முதன்மை வேட்பாளர் டக்ளஸ் தெரிவிப்பு

(அரியாலை)

அரியாலை தென்.கிழக்கு உதயபுரம் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட ஈழ் மக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாள ருமான டக்ளஸ் தேவானந்தா அப்பகுதி மக்களை சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தேவைப் பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். உதய புரம் பகுதிக்கு ஈ.பி.டி.பி.யின் செய லாளர் நாயகம் கடந்த வியாழக் கிழமை விஜயம் மேற்கொண் டார். இதன்போது மக்களின் அடிப் படைத் தேவைகளான காணி உரிமம், வீட்மைப்பு, குடிநீர், கல்வி,சுகாதாரம், பாதை புன ரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரை யாடியுள்ளார்.



குறித்த தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்ட டக்ளஸ் தேவானந்தா நாடாளு மன்றத்தேர்தலில் நாம் வெற்றி பெற்று மக்களுக்கான தேவை கள் அனைத்தையும் பெற்றுக் கொடுப்போம் என்றும் தெரி வித்தார். இதனிடையே நாவல டிப் பகுதியில் இடம்பெற்ற வரும் சட்டவிரோத மணல் அகழ் வால் தாம் பல்வேறுபட்ட அசெள கரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் இச்சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் வேட்பாளர்களான இரா.செல்வ வடிவேல், திருமதி யோகேஸ் வரி பற்குணராசா ஆகியோர் உடனிருந்தனர்.

# ஆய்வு கூடத்தில் அனர்த்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் பயன்படுத்தப்பட்ட நுண் அலை அடுப்பு வெடித்ததில் அங்கு பணியாற்றும் எஸ்.முரளிகிருஷ்ணா (வயது-30) என்பவரது முகத்தில் காயமேற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை வழமை போன்று ஆய்வு கூடத்தில் உள்ள நுண் அலை அடுப்பினை இயக்கிய போது அது வெடித்து கண்ணாடி பிரஸ்தாப நபரின் முகத்தில் தாக்கி உள்ளது.

அவர் யாழ்போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளார் (54)

# மோட்டார் சைக்கிளில் சிவ யாத்திரை

## யாழில் ஏற்பாடு

இளைஞர்கள் மத்தியில் ஆன்மீக விழிப்புணர்வை ஏற் படுத்துவதற்கான ஒரு முயற்சி யாக சிவ யாத்திரை நிகழ் வொன்றை சின்மயாமிஷன் மற்றும் வீணாகான குருபீட முதல வர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் மூல மான இந்த இளையோர் சிவ யாத்திரை வட்டுக்கோட்டை சித்தன்கேணி சிவாலயத்திலி ருந்து ஆரம்பமாகி சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய், மரு தனார்மடம், காங்கேசன்துறை வீதி,யாழ்பாணம் வைத்திய சாலை வீதி வழியாக நல்லூர் ஆலயத்தை சென்றடையும்.

இந்த சிவயாத்திரை நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் இளை ஞர்கள்,யுவதிகள்,அடியார்கள் அனைவரும் சைவத்தமிழர் தம் பண்பாட்டு உடையுடன் யாத்திரை யில் கலந்து கொள்ளுமாறு வீணா கான குருபீட ஸ்தாபகரும், அமைப் பாளருமான ஸ்ரீ சபா வாசு தேவ குருக்கள் விடுத்துள்ள அறிக் கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

# கம்பன் விழா - 2015

(யாழ்ப்பாணம்)

கவியரசர் கம்பனின் பெய ரால் கடந்த 35 ஆண்டுகளாக இயங்கிவரும் அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் கம்பன் விழா நேற்று ஆரம்பமாகிய நிலை யில் இன்றும் நாளையும் இடம் பெறவுள்ளது.

இன்று காலை, மாலை என் இரு அமர்வுகளாக இடம்பெறும் இந் நிகழ்வில் காலை நிகழ்வு கள் நல்லூர் கம்பன் கோட்டத் திலும், மாலை நிகழ்வுகள் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்திலும் இடம்பெறவுள் ளன.

இன்று காலை நிகழ்வுகள் வைத்திய நிபுணர் ரி. கோபி சங்கர் தம்பதியினரின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் சிறப்பு நிழ்வாக கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் தலைமையில் கவியரங்கம் நடைபெறும். ஞாயிறு மாலை நிகழ்வுகளாக வைத்திய நிபுணர் ரி. பேரானந்தராஜாவின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும். மாவட்ட அரச அதிபர் மா.வேத நாயகன் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ் செழியன் தொடக்கவுரையாற் றுவர். தொடர்ந்து பேராசிரியர் த.ராஜாராம் தலைமை யிலான வழக்காடு மன்றம் இடம பெறும். (54)


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

[தேர்தல் மாவட்டம் - வன்னி]



விஜயரட்ணம் சுரேந்தர்

(சுரேன்)




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


# பிரபஞ்ச சுருதி நூல் வெளியீடு

வடமாகாண பண்பாட்லு வல் கள் திணைக்களத்தின் நிதி அனு சரணையுடன் கரவெட்டிப் பிர தேச செயலகத்தின் வழிகாட்ட லில் உயில் கலை இலக்கிய சங் கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குப்பிழான் ஐ.சண்முகனின் பிரபஞ்ச சுருதி நூல் (கவிதைத் தொகுதி) அறிமுக நிகழ்வும் கவிதா நிகழ்வும் நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செய லர் ச.சிவஶ்ரீ தலைமையில் இடம் பெற்றது.




நிகழ்வில் சு.குணேஸ்வரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து ந.மயூரரூபன் அறிமுகவுரையை நிகழ்த்தினார். தொடர்ந்து நூல் தொடர்பான உரையை கவிஞர் சோ. பத்மநாதன் நிகழ்த்தினார். குப்பிழான் ஐ. சண்முகனின் ஏற்பு ரையைத் தொடர்ந்து கவிதா நிகழ்வு இடம்பெற்றது.

நூலாசிரியர் குப்பிழான் ஐசண் முகன் தனது மூன்று கவிதைக ளைத் தேர்ந்தெடுத்து அதன் பின்னணி பற்றிக் குறிப்பிட்டு அக்கவிதைகள் பற்றிக் குறிப் பிட்டார். தொடர்ந்து த.அஜந்த குமார், சு.குணேஸ்வரன ஆகி யோரும் கவிதைகளை வாசித் தனர். இறுதியாக சித்திராதரனின் நன்றி யுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றதும். உயில் இலக்கிய சங் கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் எழுத்தாளர் களும், இலக்கிய ஆர்வலர்களும் கரவெட்டிப் பிரதேச செயலக உத்தி யோகத்தர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

# இழுவைப் படகுகளின் வருகையால் வடமராட்சி மீனவர்கள் அசௌகரியம்

(வடமராட்சி)

தென்பகுதி மீனவர்களின் இழுவைப்படகுகளால் வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு முள்ளியான் பகுதி மீனவர்களின் வலைகள் சேதமடைந்துள்ளன.

இந்த இழுவைப் படகுகளின் வருகையால் சுமார் 75 ஆயிரம் பெறுமதியான தமது வலைகள் சேதமடைந்துள்ளதாக அப்பகுதி கடற் றொழிலாளியரன யோசப் மரியதாசன் தெரிவித்தார்.

இதற்கு முன்னைய காலங்களிலும் இவ் இழுவைப் படகுகளால் பாதிப்பை எதிர் கொண்டதாகவும் இந்தப் படகுகளின் வருகை இப்பகுதி மீனவர்களுக்கு ஒரு தீராப் பிரச்சினையாக தொடர்வதாகவும் குறிப்பிட்டார்.

இப்பிரச்சினையைத் தீர்க்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கும் வரை கடலுக்குச் செல்வதில் எவ்வித பயனுமில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

(அ,18)

# வாழ்வெழுச்சித் திணைக்களத்தால் பரிசில்கள் வழங்கி வைப்பு

(கரவெட்டி)



வாழ்வெழுச்சி திணைக்களத்தின் கரவெட்டி மேற்கு பகுதி பயனாளிகள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இக் கிராம சேவகர் பிரிவில் கீழ்வரும் பயனாளிகள் தமது சேமிப்பு வைப்பாக 25 இலட்சம் ரூபாவை வைப்புச் செய்துள்ளமையை பாராட்டியே இப்பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற இந் நிகழ்வில் வாழ்வெழுச்சி திணைக்களத்தின் கரவெட்டி பிரதேச வங்கி முகாமையாளர் இ. உதயகுமார் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பரிசில்களை வழங்கிவைத்தார்.

இத் திணைக்களத்தின் கரவெட்டி மேற்கு உத்தியோகத்தர்கள் புலேந்திரன் அப்பகுதி கிராம சேவையாளர் ராஜகோபால், திணைக்கள கட்டுப்பாட்டு சபைத் தலைவர், பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ,18)

# கடவுச்சீட்டுக்களில் கைவிரல் அடையாளம் நாளை முதல் அமுல்

கடவுச் சீட்டுகளில் விரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் நடைமுறை நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

16 வயதுக்கு மேற்பட்ட ஒருவருக்கான கடவுச் சீட்டில் விரல் அடையாளம் பதிவு செய்யப்படவுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் நிஹால் ரணசிங்க குறிப்பிட்டார்.

16 வயதுக்குக் குறைந்தவர்களுக்கான கடவுச்சீட்டில் இந்த நடைமுறை பின்பற்றப்பட மாட்டாது.

இதன்பொருட்டு, கொழும்பு பிரதான அலுவலகம் உட்பட மாத்தறை, கண்டி மற்றும் வவுனியா ஆகிய பிராந்திய அலுவலகங்களில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நாளை திங்கட்கிழமை முதல் கடவுச்சீட்டிற்காக விண்ணப்பிக்கின்றவர்கள் தமது விரல் அடையாளத்தை வழங்கவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக குடிவரவு-குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

விரல் அடையாளங்கள் கணனி மயமாக்கப்பட்டு கடவுச்சீட்டுகளில் அடையாளத்தின் பொருட்டு உள்ளடக்கப்படுவற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியின் திருநெல்வேலி கிளையானது வாடிக்கையாளர்களுக்கு மேலும சேவைகளை விரிவுபடுத்தும் பொருட்டு நாளை முதல் இல 60 ஆடியபாதம் வீதியில் உள்ள புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள புதிய வங்கித் திறப்பு விழாவிற்கு தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்களின் அழைபபின் பேரில் தேசிய சேமிப்பு வஙகியின் தலைவர் . அஷ்வின் தசில்வா முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இக் கிளையில் தானியங்கி பணம் மீளப்பெறல் உள்ளிட்ட அனைத்து சேவைகளையும் ஒருங்காகப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (26,54)

# புதிய எரி நோயால் நெற்செய்கை பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தண்ணி முறிப்புக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நெற்ச் செய்கையில் 50 ஏக்கருக்கு மேல் புதிய எரிநோய்த் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு 50 ஏக்கருக்கு மேலாக நெற்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)



சாவகச்சேரி நுணாவில் மேற்கில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் வேகத்தை கட்டுப்படுத்த முடியாதநிலையில் சென்று கொண்டிருந்த வாகனத்துடன் பின்னால் சென்ற வாகனம் மோதுண்டதில் பின்னால் சென்ற வாகனத்தில் பயணித்தவர் காயங்களுடன் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் நோக்கிச்சென்றுகொண்டிருந்த வாகனங்களே இவ்வாறு மோதுண்டமை குறிப்பிடத்தக்கது.

(11)

# பதிவிறக்கப் பெட்டகம்

"தலைவரே நம் கட்சியிலிருந்து நூறு பேர் பிரிந்து தங்களுடைய கட்சியிலே சேரப்போறதாய் அந்தக் கட்சித் தலைவர சொல்றாரே...?"

"நம் கட்சியிலே ஏதப்பா அவ்வளவு பேர்...!"

*** *** *** ***

"தலைவர் சூகுள்ல என்ன தேடுறார்?"

"22 மாவட்டங்கள்ல, எதில டிப்போசிற் திரும்பக் கிடைக்கும் என்றுதான்"

*** *** *** ***

"உன் மனைவி யாருக்கு வோட் போடுவாங்க?"

"நான் யாருக்குப் போடுவேனோ அவருக்குத்தான்"

"யார் அவர்?"

"அதை இன்னும் என் மனைவி முடிவு செய்யேல்ல"

*** *** *** ***

**முதலாவது பெண்:** ஏண்டி உன் லவ்வரை கழட்டி விட்டிட்டாய்?

**இரண்டாமவள்:** பிறகென்னடி? அவருக்கு இரண்டு தடவை ஃபோன் பண்ணினேன். இரண்டு தடவையும் "நீங்கள் தொடர்பு கொண்ட எண் வேறொருவருடன் தொடர்பில் இருப்பதால் சிறிது நேரம் கழித்து முயற்சிக்கவும்' என்று சொல்றாங்க. நல்ல வேளையடி, ஏமாறாமல் தப்பிச்சிட்டேன்.

*** *** *** ***

"இஞ்சருங்கோ... உங்கட சினேகிதர் கன நேரமாய் காத்துக்கொண்டிருக்கிறார். எழும்புங்கோ"

""தூக்கத்தில எழுப்பாதை எண்டு எத்தனை நாள் சொல்றது?"

"சரி... இப்ப எழும்புங்கோ... இனிமேல் முழிச்சுக்கொண்டு இருக்கும்போது எழுப்புறேன்"

*** *** *** ***

"நேற்று நானும் என் நண்பன் ராஜ/வும் இரவு படம் பார்த்துவிட்டு வந்துகொண்டிருந்தோம். அப்போது நடுரோட்டிலே ஒரு திருடன் யாரோ ஒருவரிடம் கத்தியைக் காட்டி எல்லாப் பணத்தையும் பறித்துக் கொண்டிருந்தான். எங்கள் கண் முன்னால் அது நடந்த பிறகு எங்களால் பேசாமல் சும்மா இருக்க முடியவில்லை"

"என்ன பண்ணினீங்கள்?"

"வரும்போது அதைப்பற்றிப் பேசிக்கொண்டே வந்தோம்"

*** *** *** ***

"கடவுளிட்ட என்ன வேண்டினாய்?"

"இந்தப் பிறவியிலே மட்டுமில்ல... எல்லாப் பிறவியிலும் நீங்களே எனக்குக் கணவரா வ்ரோணும் என்றுதான் வேண்டினனான்"

"உன்னைக் காதலிச்சுக் கைவிடாமல் கல்யாணம் பண்ணிக்கொண்டதுக்கு இதுதான் தண்டனையா?"

*** *** *** ***

கணவன்: (செல்லக்கோபத்துடன்) நீஇப்போதுதான் லூசா? அல்லது கல்யாணத்துக்கு முன்பிருந்தே லூசா?

மனைவி: கல்யாணத்துக்கு முன்னம் லேசா லூசு. உங்களைக் கட்டிக்கொண்டாப் பிறகு முழு லூசு.

*** *** *** ***

"இஞ்சருங்கோ... நான் செத்துப்போனால் இரண்டாவது கல்யாணம் செய்துகொள்வீங்களா?"

"சத்தியமா பண்ணமாட்டேன்"

"என் மேலே உங்களுக்கு அவ்வளவு பிரியமா?"

"வாழ்க்கையில, மறுபடியும் நான் கஷ்டப்பட்டு ஏமாறத் தயாராயில்லை என்று சொல்ல வந்தேன்"

*** *** *** ***

"டார்லிங், உன்னைக் காதலிச்சதுக்காக ரொம்பப் பெருமையாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறேன்"

"வேணாம், எதையும் அவசரப்பட்டுப் பேசாதேங்கோ"

"நீ என்ன சொல்ல வாறாய்?"

"கல்யாணத்துக்குப் பிறகு ஏன்டா இப்படியெல்லாம் சொன்னோம் என்று நீங்கள் ரொம்ப வருத்தப்பட வேண்டியிருக்கும்"

*** *** *** ***

"வேலை முடிஞ்சு இவ்வளவு லேற்றா வீட்டுக்குப் போறியே... வீட்டில் மனைவி திட்டமாட்டாளா?"

"எனக்குத்தான் கல்யாணமே ஆகேல்லையே?"

"பின்னை ஏன் லேற்றாப் போறாய்?"

*** *** *** ***

"காலை அஞ்சு மணிக்கு என்னை எழுப்பி விடு"

"ஏன்?"

"புரண்டு படுக்கோணும்"

# நல்லாட்சி என்ற போர்வையில் பாதாள உலக குழுவின் ஆட்சி

## சுசில் கண்டனம்

(கொழும்பு)

நல்லாட்சி என்ற போர்வையில் பாதாள உலக குழுவின் ஆட்சியே தற்போது நாட்டில் இடம்பெறுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது. கொட்டாஞ்சேனை - புளூ மெண்டல் சம்பவத்திற்குப் பொறுப் புக்கூற வேண்டியவர் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவே புளூமெண்டல் சம்பவமானது அமைதியான தேர்தலில் குறைபாட்டை ஏற்படுத்தி இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பது உண்மை என்றும் அவர் கூறியுள்ளார்.

பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் வற்புறுத்தலால் கடுவல பொலிஸ் நிலையத்தை சுற்றி விஷேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருப்பதாகக் குறிப்பிட்ட சுசில் பிரேமஜயந்த,

இவருக்கு எதிராக பிரதமர் ரணில்



விகககிரமசிங்க என்ன நடவடிக்கை மேற் கொண்டிருக்கின்றார் என்றும் கேள்வி யெழுப்பியுள்ளார்.

# கோத்தாவுடன் முரண்பாடா? முற்றாக மறுக்கிறார் பசில்



தனக்கும் தனது சகோதரரான முன்னாள் பாதுகாப்பு செயலாளருக்கும் பிரச்சினைகள் இருப்பதாகவும், அதனால் தான் விரக்தியுடன் இருப்பதாகவும் வெளியாகும் செய்திகளில் எந்த விதமான உண்மையும் இல்லை என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பசில் ராஜபக்ஷவுக்கும் அவரது சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறித்து விபரிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வேண்டுமென்று சிலர் பொய்ப பிரசாரங்களை வெளியிடுவதாகக் குறிப்பிட்ட பசில் ராஜபக்ஷ, கருத்து வேறுபாடுகள் யாருக்கும் இருக்கலாம் எனக் கூறியுள்ளார்.

சகோதரர்களுக்கிடையிலும் தந்தை மகனுக்கிடையிலும் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் எனவும் அவ்வாறு தனக்கும் தனது சகோதரருக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்காக தாங்கள் இருவரும் விரிசலுடன் இருக்கின்றோம் என்று கூறுவது தவறானது எனக் குறிப



பிட்ட அவர்,

எவ்வாறெனினும் தான் இம்முறை தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்கு அதிக காரணங்கள் இருப்பதாகவும் அவற்றை தற்போது கூறிக்கொண்டிருக்க முடியாதெனவும் அவர் கூறியுளளார்.

தன்னைப் பாதித்த ஒரு சில காரணங்களினால் தான் தேர்தலில் போட்டியிடவில்லை எனக் குறிப்பிட்ட பசில்,

தனது சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷவுடனான பிரச்சினையில் தான் ஒதுங்கியிருப்பதாக கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம் - வன்னி)



சுந்தரம் குமாரசாமி






ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# அதிகாலைத் தாக்குதல் பிரசார அலுவலகம் நாசம்

ஊடகத்துறை அமைச்சரும், காலி மாவட்ட வேட்பாளருமான கயந்த கருணாதிலகவின் பெந்தொட்டவில் அமைந்துள்ள பிரசார அலுவலகம் மீது நேற்று சனிக்கிழமை அதிகாலை தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு நேற்று அதிகாலை சென்ற இனந்தெரியாத குழுவினர் அலுவலகம் மீது தாக்குதல் நடாத்தி சேதம் ஏற்படுத்திவிட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தனது தேர்தல் பிரசார அலுவலகம் தேர்தல் சட்டத்திற்கு அமைவாகவே நடாத்தப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பெந்தொட்டவில் பதிவாகிய முதலாவது வன்முறைச் சம்பவம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

---

**தினமுரசுக்கு வந்த கடிதம்** தினமுரசு

# எதிர்வரும் 17 ஆம் திகதிய தேர்தலின் பின் வடக்கு நிர்வாகத்தில் மாற்றம் ஏற்படுமா?

## வடமாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன் மாகாணசபை பிரதிநிதிகளின் வாக்கை காப்பாற்றி உள்ளூராட்சி நிர்வாகங்களில் உடனடி மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்

யாழ்.குடாவில் கடந்த மாதம் 31 ஆம் திகதியுடன் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் முடிந்த கையுடன் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளின் நிதியாளுகையை ஆராயுமாறு கணக்காய்வு அதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இதற்கமைய உள்ளூராட்சி சபை முன்னாள் உறுப்பினர்களும் மாகாண சபைகள் உறுப்பினர்களும் இணைந்த வகையில் மோசடிகள், ஊழல், இலஞ்சம் மற்றும் வேலை மதிப்பீடுகளில் செய்யப்பட்ட ஊழல்கள், மதிப் பீடுகளை மாற்றியமைத்தல் முடிவுறும் வேலைகளுக்கு மாற்றீடுகள் என்ற அடிப்படையில் செய்யப்பட்ட ஊழல்கள் குறித்து சம்மந்தப்பட்ட கணக்காய்வு திணைக்களங்களுக்கு சமர்ப்பித்துள்ளன.

வடமாகாண சபைகளின்உறுப்பினர்கள்கடந்த மாதம்வடக்கு மாகாண உள்ளூரராட்சி சபைகளின் திறனற்ற நிர்வாகம் வினைத்திறனற்ற செயற்பாடு, உள்ளூராட்சி சபை செயலாளர்களின் இடமாற்றம், உள்ளூராட்சி சபைகளின் புதிய செயலாளரகள்நியமனம், யாழ்.குடாநாட்டு சகல தொழில்நுட்ப அலுவலர் இடமாற்றம் குறித்து வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கும் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் விலாவாரியாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

எனினும் 17 ஆம் திகதிக்கு (நாடாளுமன்றத் தேர்தல்) பின்னர் வடக்கு மாகாண குறிப்பாக யாழ்.குடாநாட்டு உள்ளூராட்சி சபைகள் உட்பட 33 உள்ளூராட்சி சபைகளின் செயல் திறன் வாய்ந்த நிர்வாகம் ஏற்படுத்தப்படும் என பிரதேச செயலாளர் சம்மந்தப்பட்ட அமைச்சு செயலாளர்களுக்கும், மாகாண மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக கடந்த நான்கு வருட காலத்தில் உள்ளூராட்சி சபைகளை நாடிவரும் பொதுமகனுக்கு உரிய காலங்களில் உரிய சேவைகளை செய்து முடிக்காத நிலை குறித்து அவதானிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வருட காலங்களில் செயலாளர்கள் உள்ளூராட்சி சபை தலைவர்களுடன் முரண்பட்டு கடமைகளை உதாசீனம் செய்வதுடன் பொது மக்களுக்கு கிடைக்கவேண்டிய சேவைகளை பின்னடிப்பு செய்யப்பட்டு காலம் தாழ்த்திய வரலாறுகளே யாழ்.குடாநாட்டில் அதிகம் உணரப்பட்டுள்ளது. அதிலும் வலிகாமம் நல்லூர்ப் பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் ஊடாக மக்கள தமது தேவைகளைப் பெற முடியாத கஷ்ரபபட்ட நிலைகளையே அவதானிக்க கூடியதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

வடக்குமாகாண உள்ளூராட்சி சபைகளில் குறிப்பாக யாழ்.குடாநாட்டு உள்ளூராட்சிகளின் செயலாளர் இடமாற்றம், புதிய செயலாளர் நியமனம், தொழில்நுட்ப அலுவலர்கள் இடமாற்றம் குறித்த நடவடிக்கை திட்டமிடலை உடன் மேற்கொள்ளப்படுமிடத்து செயற்றிறன் வாய்ந்த ஓர் செயற்பாட்டை இனி வரும் காலங்களில் மக்கள் அனுபவிக்க நேரிடும்.

இல்லாவிடில் கணக்காய்வு அதிபதிகள், கணக்காய்வாளர்கள் கணக்காய்வு செய்தும் எதுவித விமோசனமும் இல்லை.

ஏனெனில் மோசடி செய்த கும்பல்கள் அதற்கான செயலாளர்கள் தொழில்நுட்ப அலுவலர்கள் இணைந்த வகையில் சீர் செய்துள்ளனர்.

கடந்த வாரம் தென்மராட்சி நல்லூர் பிரதேச சபையில் கடந்த நான்கு வருட கால பகுதியில் வேலைத்திட்டங்களில் இடம்பெற்ற தில்லுமுல்லுகள், மோசடிகள், வேலைத்திட்ட மதிப்பீடுகள் குறித்து உள்ளூராட்சி சபை முன்னாள் உறுப்பினர்கள், மாகாணசபைகள் உறுப்பினர்கள் இணைந்த வகையில் பட்டியல் இட்டு சம்பந்தப்பட்ட கணக்காய்வு நிறுவனத்திற்கும் மற்றும் வடமாகாண உயரதிகாரிக்கும் அமர்ந்துள்ளனர்.

இதனைவிட கணக்காய்வு அதிபதிகள் ஒவ்வொரு சபைகளையும் விலாவாரியாக துருவிதுருவி ஆராய்ந்து வருகின்றனர்.

உள்ளூராட்சி சேவை மேம்படுத்தல் என்ற புறநெகும மோசடிகள் குறித்தும் 2011 ஆம் ஆண்டு முதல் இன்றை வரை ஆராய்ந்து வருகின்றனர்.

ஒரு சில சபைகளின் மோசடிகள், ஊழல்கள் அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளன.

இவ்வாறு மோசடிகள் அம்பலமான சபைகள் தொடர்பில் வடமாகாண பிரதம செயலா.ளர் விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கடந்த 35 வருட காலத்தில் தமிழ் மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

இவ்வாறான மக்களின் வாழ்வியல் மாற்றியமைக்கப்பட வேண்டும். எனவே அடி மட்டத்தில் மக்களுடன் பின்னிப்பிணைந்த சேவை நிறுவனங்களில் உள்ளூராட்சி சபைகள் (பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை) மிக முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றன.

எனவே நல்லாட்சி தத்துவங்களுக்கு ஏற்ப வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகள் முழுமையான மக்கள் பணியை வழங்கிடவும் ஊழல் அற்ற நேர்மைத் திறனான சேவை இடம்பெற வடக்கு பிரதம செயலாளர் முன்வந்து செயற்படுவாரா அல்லது கடந்த கால பிரதம செயலாளர் போன்று செயற்பட்டு வடக்கை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்வீர்களா?

எனவே மக்களே ஒரு கணம் சிந்தித்து பெரும் நிலப்பரப்பை கொண்ட வடமாகாணம் நிலைபேறு அடைய "மாற்றத்தை" உண்டு பண்ணுங்கள்

எஸ்.ஆர்.தேவமித்திரன்
நல்லூர்

10. சத்தம் வரும் திசைக்கு ஏற்ப, காதை திருப்பும் பிராணி எது?
1) பூனை 2) நாய் 3) மான் 4) யானை

11. எதிரிகளைக் கண்டவுடன் உடலை வட்ட வடிவாக சுருட்டிக் கொண்டு உயிரற்றது போல காணப்படும் பிராணி எது?
1) தேள் 2) மட்டைத்தேள் 3) மரவட்டை 4) அட்டைகள்

12. வால் அறந்து போனால் திரும்பவும் வால் முளைக்கும் பிராணி
1) ஓணான் 2) அறணை 3) முதலை 4) உடும்பு

13. ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு தலைவனைப் பின்பற்றி பறந்து செல்லும் பிராணி
1) கழுகு 2) கொக்கு 3) கடற்காகம் 4) மைனா

14. இலங்கையிலுள்ள மிக உயரமான இயற்கை நீர்வீழ்ச்சி எது?
1) துன்கிந்த 2) பம்பரகந்த 3) தியலும 4) விக்டோரியா

15. ஆறுகளால் அடித்து வரப்படும் மணல் பொங்கு முகங்களில் படிவதால் உண்டாகும் முக்கோண வடிவ மேட்டு நிலம் எவ்வாறு அழைக்கப்படும்?
1) முனை 2) களப்பு 3) கழிமுகம் 4) சேற்றுமுகம்

16. கடுகு வித்தை ஒத்திருக்கும் வித்து எது?
1) காசித்தும்பை 2) குரக்கன்
3) எள்ளு 4) இறுங்கு

17. கோழி, மாட்டிறைச்சி சமைக்கும் போது, இறைச்சியை மென்மையாக்க இறைச்சிக்கறிக்கு சேர்க்கும் காய்கறி எது?
1) எலுமிச்சை 2) தக்காளி
3) கத்தரி 4) பப்பாசி

18. அதிகளவு புரதச்சத்தைக் கொண்ட பழம் எது?
1) மாம்பழம் 2) பேரிச்சை
3) ஆனைக்கொய்யா 4) விளாம்பழம்

19. தாவரத்தண்டில் பூத்துக் காய்க்கும் மரம் எது?
1) விளிம்பி 2) வொவி
3) விளா 4) ஆசனிப்பலா

### நேற்று பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்

(01) 01. இரவு வானில் தோன்றும் காட்சி 02. ஆடு ,பார் 03. வெள்ளி , ஓடம், பளிங்கு / பால் 04. வெள்ளி 05. பந்து + அடிப்போம் 06. நீ 07. விண்மீன்கள் சூழ வெள்ளி குடம் போல பவனி வருதல்

(02) 01. நாம் விரைவாக சந்தைக்குச் சென்றிடுவோம் சத்துள்ள பழங்கள் வாங்கிடுவோம் 02. நீங்கள் வாழும் வீட்டையும் உங்கள் சூழலையும் தூய்மையாக வைத்திருங்கள்

(03) 01. please sitdown 02. I am hungry 03. mary chirstmas 04. Hands up

(04) 01. பூனையும் நாயும் ஒன்றையொன்று சந்திக்கும் போது சண்டையிடும். 02. சென்ற மாதம் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட “அன்பளிப்பு” எனும் நாடகத்திற்கு முதல்பரிசு கிடைத்தது

(05) 01. உங்களது ஊர் எது? 02. நான் போய் வருகிறேன் 02. ஆயெத் என்ன

(06) 01. தே பொன்ன

(07) 01. 4 02. 4 03. 2 04. 3 05. 3 06. 4 07. 3 08. 4 09. 3 10. 4 11. 3 12. 2 13. 3 14. 4 15. 3 16. 1 17. 2 18. 3 19. 2 20. 2 21. 1 22. 4 23. 1 24. 3 25. 1 26. 2 27. 2 28. 4 29. 3 30. 2 31. 2 32. 2 33. 3 34. 4 35. 2 36. 1 37. 1

(07) 01. 10.20 02. 3 போத்தல் 03. 75 பேர் மீதி இல்லை 04. 105.00

(08) 01 - 06 விரும்பிய வசனம்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) பின்வரும் கவிதையை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

காலைக் கதிரவன் உதிர்ப்பதைப் பார் - அவன்
கதிர்கள் பட்டு தெறிப்பதைப் பார்
தாமரை இதழ்கள் விரிவதைப் பார் - தன்
நாயகன் முகம் கண்டு மலர்வதைப் பார்

அந்திநேர ஆதவனைப் பார் - அவன்
தேய்ந்து தேய்ந்து போவதைப் பார்
செக்கச் சிவந்த வானத்தைப் பார் - அதை
சிறு முகில் வந்து மறைவதைப் பார்

காலையும் மாலையும் எமக்கு நித்தம்
வந்து வந்து போவதைப் பார்
இயற்கை தந்த நியதி இது - இப்
பாரினிலே இதுவும் ஓர் அதிசயம் பார்

01. முதல் பாடலில் விபரிக்கும் காட்சி என்ன? ..............................
02. தன் நாயகன் முகம் கண்டு மலர்வதைப் பார் என்பதன் கருத்து? ..............................
03. இப்பாடலில் உள்ள இரண்டு அடுக்கு மொழியைக் கூறுக ..............................
04. இப்பாடலில் பெயர்ச்சொல்லாகவும், வினைச்சொல்லாகவும் வருவது எது? ..............................
05. செக்கச் சிவந்த வானம் என்றால் என்ன? ..............................
06. நித்தம் என்பதன் ஒத்தகருத்து சொல் என்ன? ..............................
07. நாயகன என்பதன் எதிர்பால் சொல் என்ன? ..............................
08. விரிதல் என்பதன் ஒத்தசொல் என்ன? ..............................
09. முகில என்பதன் ஆங்கிலச் சொல் என்ன? ..............................
10. எமக்கு என்ற பன்மைச்சொல்லை ஒருமை சொல்லாக்குக ..............................

(02) பின்வரும் வாக்கியங்களிலுள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்தி எழுதுக

01. நான் நேற்று பாடசாலைக்கு போவேன்
..............................
02. நானும், தங்கையும் பாடசாலை செல்வேன்
..............................
03. பறவை தனது சிறகுகளால் நடந்து வந்தார்கள்
..............................
04. பசுக்கள் கன்றுக்கு பால் ஊட்டியது
..............................
05. இன்று நித்திய கல்யாணி பூத்துக்குலுங்கின
..............................

06. நேற்று தொடர்ந்து இடிமின்னலுடன் மழை பெய்தன

........................................................................

(03) பின்வரும் விடைகளைக் கொண்டு பொருத்தமான இடைவெளியில் இட்டு பூர்த்தி செய்க

| | | |
|---|---|---|
| சிறிய சிறிய | வண்ண வண்ண | உயர உயரப் |
| குமுறிக் குமுறி | சுற்றிச் சுற்றி | |

01. அந்த சேரிக் கிராமத்தில் ................................ வீடுகள் பல நெருக்கமாக இருந்தன

02. தனது சகோதரன் இறந்த செய்தியைக் கேட்டு ரவி ................................ அழுதான்

03. ................................ பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

04. தேன் தேடி வண்டுகள் பூந்தோட்டத்தில் ................................ பறந்து திரிந்தன

05. அந்த அழகிய பூந்தோட்டம் ................................ பூக்களால் நிறைந்திருந்தன

(04) பின்வரும் பழமொழிகளுக்கு பொருத்தமான பொருளை எழுதுக

01. விளையும் பயிரை முளையில் தெரியும்

........................................................................

02. ஆழம் அறியாமல் காலை விடாதே

........................................................................

03. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்

........................................................................

04. போதும் என்ற மனமே பொன் செய் மருந்து

........................................................................

05. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை

........................................................................

(05) பின்வரும் இடைவெளிகளில் வரவேண்டிய எழுத்தை தெரிந்து எழுதுக

01. க ........டங்கள் (ன், ண், ந்)

02. சரணா .....யம் (ள, ழ, ல)

03. தொ ...... க்காட்சி (ழை, ளை, லை)

04. ஒன்றி ...... ந்த (னை, ணை, நை)

05. நிக ..... ச்சிகள் (ழ், ல், ள்)

06. ம ..... லை (ள, ல, ழ)

(06) பின்வருவனவற்றுக்கு ஒத்தகருத்துச் சொல் எழுதுக

01. அலை : ................................

02. பண்டங்கள் : ................................

03. பசி : ................................

04. பறவை : ................................

05. காடு : ................................

06. பனுவல் : ................................

(07) பின்வருவனவற்றுக்கு விடை எழுதுக

01. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்கருத்தை தருக

1) பகல் : ................................ 2) தோன்றுதல் : ................................

02. பிரித்து எழுதுக

1) நிறைகுடம் : ................................ 2) நெற்கதிர் : ................................

(08) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக

01. நிலத்தின் கீழ் புதைக்கப்பட்டிருக்கும் பொருள்

1) புதையல் 2) செல்வம்
3) ஆபரணம் 4) பண்டங்கள்



02. கண், கை என்பவற்றால் கருத்துக் கூறுவது

1) நடனம் 2) அபிநயம் 3) பாடல் 4) சைகை

03. தன்னைப் பற்றித் தானே எழுதும் வரலாறு

1) சுயசரிதை 2) கட்டுரை 3) நாடகம் 4) சுயவிபரம்

04. பனையின் இளையது வடலி என்பது போல தென்னை

1) குட்டி 2) கன்று 3) நுங்கு 4) நாற்று

05. கை கொடுப்போம் என்பதன் கருத்து

1) பணம் கொடுத்தல் 2) உதவி செய்வோம் 3) புகழ்வோம் 4) ஏளனம் செய்தல்

(09) கீழ்வரும் ஒழுங்கின்றிக் கிடக்கும் சொல்லை ஒழுங்குபடுத்துக

01. சத்தும் / மிக்கப் / தேன் / பொருளாகும் / சுவையும்

........................................................................

02. உணவு / பார்க்க / மாமிசங்களிலும் / மிகவும் / சைவஉணவே / சிறந்தது

........................................................................

03. வண்டி / சத்தம் / வீட்டின் / கேட்கிறது / முச்சக்கர / நிற்கும் / வந்து / முன்

........................................................................

04. நோய்க்கு / இன்சுலின் / காரணம் / நீரிழிவு / குறைபாடே

........................................................................

05. புலமை / பரீட்சையில் / பரிசில் / தேசியபாடசாலைக்கு / சித்தியெய்தால் / செல்லலாம்

........................................................................

(10) மிகவும் சரியான விடையின் கீழ் கோடிடுங்கள்

01. நீங்கள் நடந்து செல்லும் பாதை ஓரத்தில் சந்தேகத்திற்கு இடமான பொருட்கள் காணப்படின் பாதுகாப்புக்காக அறிவிக்க வேண்டிய தொலைபேசி எண் எது?

1) 119 2) 1919 3) 235 4) 123

02. பின்வருவனவற்றில் எது சிறுவர்களின் உரிமையாகும்?

1) பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றல்
2) இளைய சகோதர, சகோதரிகளை பராமரித்தல்
3) குடும்ப வருமானத்தைப் பெருக்க உதவுதல்
4) களியாட்ட விழாக்களுக்குச் செல்லுதல்

03. இலங்கை மாணவர்கள் கட்டாயக் கல்வியை கற்கும் வயதெல்லை எது?

1) 5 - 10 வயது 2) 10 - 14 வயது 3) 5 - 14 வயது 4) 5 - 18 வயது

04. நிலத்தில் தங்கியிருக்க விரும்பாத வளர்ப்புப் பிராணி எது?

1) ஆடு 2) மாடு 3) நாய் 4) முயல்

05. இலங்கையின் தேசிய பறவை எது?

1) காட்டுச்சேவல் 2) காட்டுக்கோழி 3) மயில் 4) வயற்கோழி

06. கோழிகள் அடைகாத்து முட்டை பொரிக்க எத்தனை நாட்கள் தேவை?

1) 21 2) 28 3) 35 4) 42

07. தவளையின் இளம்பருவம் எவ்வாறு அழைக்கப்படும்?

1) தவளைக்குஞ்சு 2) குறவனன் 3) வாற்பேத்தை 4) தவளைப்பேத்தை

08. மிக உயரமான மரம், மலை உச்சி போன்றவற்றில் கூடுகள் அமைக்கும் பறவை எது?

1) ஆட்காட்டி 2) கழுகு 3) தூக்கணாங்குருவி 4) செண்பகம்


09. புத்தக இறாக்கை, புத்தக அலுமாரி ஆகியவற்றிலுள்ள புத்தகங்களிடையே வாழும் பிராணி எது?

1) எலி 2) கறையான்
3) இராமபாணம் 4) கரப்பான்

# தேர்தல் களம் 2015

## உருவாகும் சாதகமான சூழலை வடக்கு முஸ்லிம்கள் பயன்படுத்த வேண்டும்

### பொம்மைவெளியில் வேட்பாளர் இரா.செல்வவடிவேல்



நீண்ட காலத்துக்குப் பிறகு வட பகுதி முஸ்லிம்களும் தமிழர்களும் மீண்டும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கான சுமூகமான சூழல தோன்றியிருப்பதாக வேட்பாளர் இரா.செல்வவடிவேல் தெரிவித்துள்ளார்.

யாழ்.பொம்மைவெளியில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்த கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், பிறப்பாலும் வாழ்விடச் சூழல் காரணமாகவும் மிக நீண்ட காலமாக இங்கு வாழ்ந்த முஸ்லிம் மக்கள் மிகவும் இணக்கமான அன்னியோண்ணியமான உறவை தமிழ் மக்களுடன் பேணி வந்துள்ளனர். இடையில் உருவாக்கம் பெற்ற இனப்பூசலும் அதனையொட்டிய யுத்தச்சூழலும் தமிழ், முஸ்லிம்களிடையே கசப்பான உணர்வுகளை ஏற்படுத்திய போதும் தற்போதய நிலையான அமைதிச் சூழலில் புதிய உறவும் நம்பிக்கையும் இப்போது துளிர்விட்டுள்ளமை மிகவும் மகிழ்ச்சியான விடயமாகும்.

எமது கட்சியின் செயலாளர் நாயகம் யுத்த சூழலில் இடப்பெயர்வுக்குள்ளான முஸ்லிம்கள் எதிர்கொண்ட நெருக்கடிகளை தவிர்க்கவென தம்மால் முடிந்த உதவிகளை வழங்கியதை முஸ்லிம மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

வடக்கில் பரம்பரையாக நீண்ட காலமாக முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த நிலங்களில் மீண்டும் அவர்கள் குடியேறி தமது வாழ்க்கையை தொடர வேண்டும் என்பதில் எம்மிடம் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அவர்களின் இருப்பும், வாழ்வும் யாழில் உறுதிப்படுத் தப்படவேண்டும். சுதந்திரமாக தொழில் முயற்சிகளில் ஈடுபடவும் உரிய நடவடிக்கைகள் முஸ்லிம் மக்களுக்கு செய்து கொடுக்கப்படவேண்டும் என்பதில் எமது செயலாளர் நாயகம் உறுதியாக இருக்கிறார்.


வட பகுதி முஸ்லிம்களின் எதிர்கால நல்வாழ்விற்கான நீண்ட கால திட்மொன்று இனங காணப்பட்டு இம் மக்களுக்கான நலனோம்பு திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை நாம் இப்போது மேற்கொண்டு வருகின்றோம்.

இம் முஸ்லிம் மக்கள் மீதான எமது கட்சியின் நிலைப்பாட்டை கவனத்தில் எடுத்து தமது எதிர்கால வாழ்வை வளம்படுத்திக் கொள்ள வீணைச் சின்னத்திற்கு வாக்களித்து எமது செயலாளர் நாயகத்தின் கரங்களை பலப்படுத்த முன்வரவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குறைபாடுகளுக்கு முழுப்பொறுப்பும் நானே..!

## எதிர்காலத்திட்டங்கள் நேர்த்தியாக முன்னெடுக்கப்படும்

### வலைப்பாடு மக்கள் சந்திப்பில் டக்ளஸ் தேவானந்தா



கடந்த காலங்களில் கட்சியால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களில் ஏதாவது குறைபாடுகள் நிகழ்ந்திருப்பின் அதற்கான முழுப் பொறுப்பையும் தாம் ஏற்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் செயலாளர் நாயகமும் முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பூநகரி வலைப்பாடு கிராமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு நேற்று முன்தினம் பூநகரியின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்ட செயலாளர் நாயகம் அங்குள்ள மக்களின் வேண்டுதல்களை எதிர்பார்ப்புக்களை கவனத்திலெடுத்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

உங்களுக்காக எதிர்காலத்தில் ஆற்றவேண்டிய பணிகளை முறையாக கண்டறிந்து அவற்றை நேர்த்தியாக நிறைவேற்றி முடிப்பதே எனது பிரதான நோக்கமாகும்.

வெறுமனே தேர்தலை நோக்கமாக கொண்டு மாத்திரம் நான் இங்கு வரவில்லை. இப்பிரதேச மக்களுக்காக நிறைய அபிவிருத்திப் பணிகளை கடந்த காலங்களில் நாம் முன்னெடுத்துள்ளோம்.இதனை எதிர் காலத்திலும் நாம் நேர்த்தியாக முன்னெடுக்க வேண்டி இருக்கிறது.

எனவே அந்தந்த பகுதி மக்களின் குறிப்பான தேவைகள் பிரச்சினைகளை நேரடியாக உங்களுடன் கலந்துரையாடி அறிந்து கொள்வதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன்.

எம்மில் தவறுகள் இருந்தால் நீங்கள் தாராளமாக சுட்டிக் காட்டலாம். நான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என நான் ஒரு போதும் வாதாடப் போவதில்லை.

கட்சியின் செயலாளர் நாயகம் என்ற வகையில் கட்சியில் முன்னெடுக்கப்பட்ட சரியான திட்டங்களுக்கு உங்கள் வரவேற்பை வெளிப்படுத்தும் அதேவேளை குறைபாடுகளையும் நீங்கள் தாராளமாக சுட்டிக்காட்டலாம்.

பொதுத்தேர்தல் முடிவடைந்த கையோடு மீண்டும் பூநகரியின் பல பகுதிகளுக்கும் நான் விஜயம் செய்ய இருக்கிறேன். உங்கள் குறைபாடுகள் நிச்சயம் நிவர்த்தி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வலைப்பாடு கிராமத்துக்கான உவர் நீர் தடுப்பணை, குழாய மூலமான குடிநீர் விநியோகம், படித்த இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு, பெண்களை தலைமையகமாக கொண்ட குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் உள்ளிட்ட பல்வேறு தேவைகள், மற்றும் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் சாதக பாதக நிலமைகள் குறித்தும் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. (அ)

## இந்திய உதவி கிடைத்தால் வடக்கில் பல மடங்கு முன்னேற்றம்

### டக்ளஸ் தேவானந்தா உறுதி

இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் உதவிகள் எமது மக்களுக்கு கிடைக்கப் பெறும் பட்சத்தில் மேலும் பலமடங்கு முன்னேற்றம் காணமுடியுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவான்ந்தா தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி மக்களுடன் நேற்று இடம் பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குடாநாட்டில் குடிநீர் பிரச்சினை என்பது மக்களின் அடிப்படை பிரச்சினைகளில் முக்கியமானதொன்றாக விளங்கும் நிலையில் நிலத்தடி நீரும் மாசடைந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

இதனடிப்படையில் தான் இக்குடிநீர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக முன்னர் புலி இயக்கத்தால் ஏற்றுக் கொண்ட யாழ்.இரணைமடு குடிநீர் விநியோகத் திட்டத்தை நடைமுறைப படுத்துவதற்கு நாம் எமது ஆதரவை வழங்கி அதனை செயற்படுத்த திட்டமிட்டிருந்தோம்.

அதுமட்டுமன்றி கிளிநொச்சி மக்களதும், விவசாயிகளதும் நலன்களுக்கு பாதகம் இல்லாத வகையில் இச் செயறறிட்டத்தை முன்னெடுக்க ஆசிய அபிவிருத்தி வங்கி இத்திட்டத்திற்கு பல மில்லியன்களை செலவிடுவதற்கு சம்மதம் தெரிவித்தது.

இந்நிலையில், தமது சுய இலாபங்களுக்காக மட்டுமன்றி மக்களின் நலன்களில் அக்கறை கொள்ளாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதனை தடுத்து நிறுத்தியிருந்ததாகவும் சுட்டிக் காட்டினார்.

அதிலும் குறிப்பாக இரணைமடு குளத்தின் அணைக்கட்டுக்களை பலப்படுத்தும் அதேவேளை, இயக்குவதற்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே இத்திட்டம் தோல்வி கண்டிருந்தது.

இதுபோலத்தான் மக்களுக்கு கிடைக்கப் பெறவேண்டிய பல்வேறு செயற்றிட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திட்டமிட்டு தமது சுயலாப அரசியலுக்காக தடுத்து நிறுத்தி வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

எனவே, யுத்தம் முடிவடைந்து அமைதிச் சூழல் நிலவும் இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான சூழல பாதுகாத்து பலப்படுத்த வேண்டியது அவசியமானது.

இந்நிலையில்தான் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் உதவிகள் எமது மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்பதுடன் அதனூடாகவே எமது மக்களின் வாழ்வாதாரம் மேலும் முன்னேற்றம் காணமுடியுமென்றும் சுட்டிக் காட்டினார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் வேட்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன்(ஜீவன்) இரா.செல்வவடிவேல் ஆகியோர் உடனிருந்தனர்.

நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015
(தேர்தல் மாவட்டம் - வன்னி)



சுப்பையா சந்துரு




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

# திரும்புகிறது கவனம் கட்டணப்பட்டியலில்




தனியார் சுகாதார நிறுவனங்களில் சிகிச்சைபெறும் அனைத்து நோயாளர்களினதும் கட்டண பட்டியலில் உள்ளீடக்கப்பட வேண்டிய விபரங்கள் தொடர்பில், புதிய வர்த்தமானி அறிவிப்பொன்று வெளியிடப்பட்டுள்ளது.

நுவர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் இது வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி நோயாளருக்கு வழங்கப்பட்ட மருந்து, அதன் வகைகள், பாவிக்கப்பட்ட அலகுகள் மற்றும் முழுமையான செலவினம் என்பவை கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டும்.

அத்துடன் நோயளருக்கு சிகிச்சையளிக்க பாவிக்கப்பட்ட அனைத்து மருத்துவ கருவிகள் மற்றும் அதன் அளவு என்பவற்றுடன், குறித்த கருவிகளுக்காக ஒதுக்கப்பட்ட கட்டணம் என்பவற்றையும் குறிப்பிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

# சந்திரிக்காவின் கவனம்



(கொழும்பு)

பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே தாம் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்ததாக முன்னாள் ஜனாதிபதி சநதிரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அகலவத்தையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைக கூறியுள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மகிந்தவை ஐக்கிய மக்கள் சதந்திர கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க பெரும்பாலானவர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர்.

ஆனால் இந்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் தாம் அவருக்கு இந்த வாய்ப்பை வழங்கியதாக அவர் கூறியுள்ளார்.

# ஆட்சேபனை எதுவும் இல்லை

(கொழும்பு)

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் சடலத்தை தோண்டி எடுத்து மீண்டும் பரிசோதனைக்குட்படுத்துவது தொடர்பில் தனக்கும் தனது குடும்பத்துக்கும் எதுவித ஆட்சேபனையும் இல்லையென வசீமின் சகோதரர் முஹம்மட் அஸ்பான் தாஜுதீன் தெரிவித்துள்ளார்.

வசீம் தாஜுதீனின் மேலதிக விசாரணைக்காக பொலிஸாருக்கும், குற்றவியல் விசாரணைப் பிரிவுக்கும் தமது சகல விதமான ஒத்துழைப்புக்களையும் வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

வசீம் தாஜுதீனின் ஜனாஸா எதிர்வரும் திங்கட்கிழமை தோண்டி எடுக்கப்படவுள்ளமை குறித்து வசீமின் சகோதரனிடம் சிங்கள ஊடகமொன்று வினவியதற்கே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

# யாழில் அபிவிருத்தி தொடர்பான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டை அபிவிருத்தி செய்யப்படும் நகர் ஆக்கும் செயற்றிட்டத்தில் உள்ள சவால்கள் தொடர்பில் அடையாளப்படுத்துவதற்கான கூட்டம் நேற்று நடைபெற்றுள்ளது.

காலை 10 மணிக்கு வடமாகாண முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உலக வங்கி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மேலாண்மைத் திறன் மிக்க நகர அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்படி கூட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் கலந்து கொணடிருந்த நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் சுரேஷ் பொன்னையா கருத்துத்தெரிவிக்கையில்,

இது ஒரு பூர்வாங்கக் கூட்டம் என்றும் வடமாகாண மக்களுடன் கலந்தாலோசிக்கும் விதத்திலேயே இக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

மேலும், வடமாகாணத்து தொழில்நுட்பக் குழு ஒன்று தமமுடன் சேர்ந்தே இச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பார்கள் என்றும் முதலில் ஒரு பூர்வாங்கத் திட்ட வரைவொன்று உங்கள் மாகாண சபைக்கு தரப்பட்டு அவை ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் தான் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கூறினார்.

மேலும் பல பூர்வாங்க கூட்டங்கள் இவ்வாறு நடைபெற வேண்டி இருக்கும் என்றும் அவற்றில் யாழ் மக்களின் கருத்துக்களும் கவலைகளும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

# இலவச கல்விக் கருத்தரங்கு

இம்முறை 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்கு வவுனியாவில் நடைபெறவுள்ளது.

வவுனியா, பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயத்தில் நாளை மற்றும் நாளை மறுதினம், மாங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இக்கல்விக் கருத்தரங்கை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

செட்டிகுளம் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இக்கருத்தரங்கில் சுமார் 250 இற்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வன்னியில் பின்தங்கிய கிராமங்களில் வாழும் வறிய மாணவர்களின் நன்மை கருதி இக்கல்விக் கருத்தரங்கை தாம் முதன்முறையாக ஏற்பாடு செய்துள்ளதாக செட்டிகுளம் பிரதேச செயலக வாழ்வின் எழுச்சித் திணைக்கள உத்தியோகத்தர் ந.சுபிந்தராஜா தெரிவித்தார்.

வன்னியின் வறிய மாணவர்களின் நலன்களை கவனத்திலெடுத்து எதிர்காலத்தில் இவ்வாறான கல்விக் கருத்தரங்கை வன்னி மாவடடத்தின் பல பகுதிகளிலும் நடாத்த விருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(அ,18)


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015



அ.ஜெயராஜ்




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)


மீண்டும்...

இவை அனைத்துடனும் பாராளுமன்றத் தேர்தல்களில் தனது கட்சி பிரதான போட்டியாளராக உள்ள வடக்கு உட்பட்ட பிரதேசங்களில், கட்சி சார்பற்று தான் நடுநிலை வகிக்கப் போவதாக முதலமைச்சர் விக்னேஸ்வரனின் அறிவிப்பும் வந்துள்ளது.

கிட்டத்தட்ட மாகாணசபை தேர்தல்கள் முடிந்து இரண்டு வருடங்களாகியும் கட்சியின் முடிவு எடுக்கும் கருவியாக ஏன் முதலமைச்சர் விக்னேஸ்வரனை சேர்த்துக் கொள்ளவில்லை என்பது கேள்வியாக இருந்தது. அதேபோல ஒவ்வொருவரது ஊகமாகவும் இருப்பது நாட்டின் இனப் பிரச்சினையில் இன்னமும் ஒரு உணர்ச்சிகரமான விடயமாக கருதவேண்டிய அவரது மாகாணசபை பெரும்பான்மையை முதலமைச்சர் என்ன செய்வதற்கு திட்டமிட்டுள்ளார் என்பதுதான்.

அவர் ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த உடனேயே சர்ச்சைக்குரிய ஒரு பிரேரணையை நிறைவேற்றியுள்ளார் - அது கடும் போக்கு உணர்வுகளை பிரதிபலிக்கிறது. இப்போது அவரது தனியான ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க சுற்றுலாவுக்குப் பிறகு, அங்கு அவர் மிதவாதிகளைக் காட்டிலும் புலம் பெயர்ந்தவர்களில் உள்ள கடும் போக்காளர்களையே அதிகம் சந்தித்தார், கட்சியானது முற்றிலும் அவருடன் உள்ளதா என்பது தெரியவில்லை. மாகாண நிருவாகத்தின் அபிவிருத்தி சம்பவங்களை ஒருபக்கம் ஒதுக்கினாலும், அங்கு முதலமைச்சரும் மற்றும் அவரது நிருவாகமும் அதிகாரப் பகிர்வில் ஒரு உயர்ந்த இடத்தைக் கோரும் ஒரு பகுதியாக உள்ளது, அந்த நிலையில் அதில் வேறு பல விடயங்களும் அடங்கியுள்ளன, அங்கு மாகாணசபை கட்சித் தலைமை சுட்டிக்காட்டிய, பாராட்டிய அல்லது வாக்குறுதியளித்த ஒரு விடயத்துக்கு நேரெதிரான ஒரு கருத்தையும் மேற்கொள்ளலாம்.

அது அரசியல் தீர்வானாலும் சரி அல்லது அதிகாரப் பரவலாக்கம் அல்லது அமெரிக்காவினால் இயக்கப்படும் ஐநா மனித உரிமைகள் சபையை மையமாகக் கொண்ட உடனடி அக்கறையுள்ள பொறுப்புக்கூறல் விடயத்தை கவனிப்பதானாலும் சரி, சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்துக்கு கூட இது மிகவும் அக்கறையுள்ள ஒன்றாகும். இந்த இடத்தில்தான் போட்டியிடும் சிங்கள ஆட்சி இப்போது அதிகம் தெளிவற்ற ஒரு நிலையில் உள்ளது, ஆனால் நாட்டின் சனத்தொகையில் உள்ள ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒவ்வொரு வகையில் வழங்க வேண்டும் என கோரிக்கை எழுப்புகிறது....

ராஜபக்ஸவின் கீழுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிலைப்பாடு அறிந்த ஒன்று, ஆனால் ஜனாதிபதி சிறிசேனவின் கீழுள்ள அதன் நிலைப்பாடு இன்னும் தெளிவாகவில்லை. மாறாக நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியினைப் பொறுத்தவரை அதன் நிலைப்பாடு தெளிவாக உள்ளது. அந்த வழியில் சிங்கள ஆட்சியாளர்கள் மற்றும் அவர்களின் தேர்தல் கூட்டணிகளின் அனைத்து பிரிவினரும், குறிப்பாக முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழர் சமூகத்தவர்கள் அரசாங்கம் அமைப்பதில் கிட்டத்தட்ட உடனடியாகவே அழுத்தத்துக்கு ஆளாவார்கள்.

எல்லாவற்றையும் விட கொழும்பில் புதிய அரசாங்கம் பதவியேற்ற ஒரு சில வாரங்களுக்குப் பிறகு ஐநா மனித உரிமைகள் சபையின் அமர்வுகள் ஆரம்பமாக உள்ளன, - சர்வதேச பங்களிப்பு இல்லாவிட்டாலும் கூட ரி.என்.ஏயின் வெளி ஆதரவைச் சார்ந்த அல்லது அதனைச் சாராத ஒரு அரசாங்கத்துக்கு - உள்நாட்டிலோ மற்றும் வெளிநாட்டிலோ, நாட்டின் நண்பர்களுடன் மற்றும் அதேபோல எதிரிகளுடனும் ஒரு நிலைப்பாட்டை எடுப்பதையோ அல்லது ஒரு முடிவுக்கு வருவதையோ அதனால் இன்னும் தவிர்க்க முடியாமல் இருக்கும். திரும்பவும் வரையறை செய்யும் ஒரு தருணம், இலங்கை தேசம் அதன் நண்பர்களை திரும்பவும் அடையாளம் காணுமா, அல்லது அந்தப் பிரச்சாரம் அப்படியே முடிவடையுமா என்பதை அது நிரூபிக்கும்.

# கடற்றொழிலை நவீனப்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்துவோம்

## ஈ.பி.டி.பி.யின் முதன்மை வேட்பாளர் தெரிவிப்பு



எதிர்காலத்தில் கடற் றொழிலை நவீனமயப்படுத்தி அதனூடாக துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு செயற்திட்டங்கள் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பூநகரி கிராஞ்சி, வலைப்பாடு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடனும், பொதுமக்களுடனும் நேற்று முன்தினம் இடம் பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது குறித்த கடற்பரப்பினுள் வெளிமாவட்ட தொழிலாளர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளால் தாம் தொழில் பாதிப்பை எதிர்கொண்டு வருவதாகவும் கடற்றொழிலாளர்கள் சுட்டிக் காட்டினார். அத்துடன் தடை செய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகளால் தாம் நாளாந்தம் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவித்தனர். இதனிடையே குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் செயலாளர் நாயகம் எடுத்து விளக்கினர்.

இதில் வீதி, மின்சாரம், குடிநீர், சுயதொழில்வாய்ப்பு, போக்குவரத்து, மண்அணை அமைப்பது, தொழிற்துறை நடவடிக்கைகளுக்காக கடலை ஆழப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொர்டர்பாகவும் அவற்றின் அவசியம் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைக்களுக்கு தீர்வு காண்பதற்கு மக்கள் அரசியல் பலத்தை தருவதன் ஊடாகவே சாத்தியமாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் வேட்பாளர் இரா.செல்வவடிவேல், வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# புளூமெண்டல் சூட்டுச் சம்பவம் சந்தேகநபர் கைது


(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனை புளூமெண்டல் பகுதியில்இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த வியாழக்கிழமை குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 28 வயதுடைய உடற் பயிற்சி ஆலோசகராக கடமையாற்றக்கூடியவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை கைது செய்வதற்காகவும் இதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை கண்டுபிடிப்பதற்காகவும்



கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் முனனெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது சந்தேக நபர்கள் பயணித்த வாகனம் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் பிரசார சீட்டிழுப்பு பறிபோகும் எம்.பி.பதவி

## தேர்தல்கள் ஆணையாளர் எச்சரிக்கை

தேர்தல் பிரசாரத்தின் புதிய உத்தியாக சீட்டிழுப்புக்களை நடத்தி வாக்காளர்களுக்கு பரிசு வழங்கிவரும் வேட்பாளர்களது, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோகும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் தமது பிரசாரக் கூட்டங்களுக்கு மக்களை வரவழைப்பதற்காக புதிய உத்தியாக சீட்டிழுப்புகளை நடத்தி வருவதாக தேர்தல்கள் செயலகத்திற்கு முறைப்பாடு கிடைத்துள்ள நிலையிலேயே தேர்தல்கள் ஆணையாளர் இந்த எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.



அந்தவகையில், அம்பாந்தோட்டையில் போட்டியிடும் பிரதான கட்சியின் இரண்டு வேட்பாளர்கள் தமது பிரசாரங்களின் போது மக்களுக்கும், மாணவர்களுக்கு வினாத்தாள் ஒன்றை விநியோகித்துள்ளனர். இந்த வினாக்களுக்கான விடைகளை எதிர்வரும் 15ஆம் திகதி இரவு 12 மணிக்கு முன்னர் கிடைக்க செய்யுமாறும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

அதேவேளை பதுளையில் வேட்பாளர் ஒருவர் தனது விருப்பு வாக்கு அச்சிடப்பட்ட ஸ்டிக்கர்களை வீடுகளுக்கு விநியோகித்துள்ளார். அந்த ஸ்டிக்கர்களில் உள்ள இரகசிய எண்களை சேகரித்து நடத்தப்படும் சீட்டிழுப்பில் வீட்டுக்குத் தேவையான பெறுமதியான பொருட்கள் பரிசளிக்கப்படும் என அறிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், வாக்காளர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வேட்பாளர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது

### இரண்டரை கோடி...

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு பதுங்கியிருந்தனர். இந்நிலையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் குறித்த பகுதியில் பாழடைந்த வீடொன்றிலிருந்து 45 கிலோ கஞ்சாவை மீட்டனர். இதன்பெறுமதி இரண்டு கோடியே இருபது இலட்சம் என மதிப்பிடப்பட்டது.

அத்துடன் சந்தேகத்தின் பேரில் ஏழலையைச் சேர்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். வடமராட்சிப் பகுதியில் கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகளில் இதுவே கூடியதென தெரிவிக்கப்படுகிறது. (18)

### வடமாகாண....

இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக் கப்பெற்றதும் உள்ளக விசாரணை எவ்வாறு அமையும் என்ற தீர்மானம் அமைச்சரவையினால் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் தொடர்பான உள்ளக விசாரணைப் பொறிமுறை அமைக்கும் பேச்சுகளில் வடக்கு மாகாணசபை உள்ளடக்கபடவேண்டியது அவசியமானது என ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ - மூனின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்திருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள நீதியமைச்சர், ஸ்டீபன் டுஜாரிக் கோரிக்கை இலங்கை அரசாங்கத்திற்கு இதுவரை உத்தியோகபூர்வமாக கிடைக்கவில்லை என்று கூறியுள்ளார்.

எவ்வாறெனினும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது.

இந்த நிலையில் உள்ளக விசாரணை செயற்பாட்டில் மாகாண சபைகள் தமது பிரதிநிதித்துவத்தை செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதியின்.....

ஊடுருவப்பட்டதையடுத்து, எஸ்.எம். விக்கிரமசிங்க கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

அதையடுத்து. அவர் நீக்கப்பட்டு, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இன்னொரு பிரதி பொலிஸ்மா ஜனாதிபதி நியமித்த போதும், கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதில் சிக்கல்கள் நீடித்தன.

அதேவேளை, மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில், நாமல் ராஜபக்சவுடன் வந்திருந்த இராணுவ அதிகாரி ஒருவர், உள்ளக பாதுகாப்பு வட்டத்தைக் கடந்து துப்பாக்கியுடன் உள்நுழைந்திருந்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து, ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு மகிந்த ராஜபக்சவுக்கு விசுவாசமாக செயற்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்திருந்தது.

இதையடுத்து,இராணுவத்தில் இருந்த ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு கடந்த ஏப்ரல் 30ஆம் நாள் முற்றாக கலைக்கப்பட்டது.

இதையடுத்து, பொலிஸார் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு மற்றும் சிறப்பு அதிரடிப்படை ஆகியனவே மைத்திரிபால் சிறிசேனவுக்கு பாதுகாப்பு வழங்கி வந்தது.

இந்தநிலையில், ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு மிகமுக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு பிரிவில் இருந்து நீக்கப்பட்டு, முழுமையாக சிறப்பு அதிரடிப்படை வசம் ஒப்படைக்கப்படுகிறது.

### அலைபேசி...

மட்டக்களப்பில் உள்ள பாடசாலையொன்றில் பரீட்சை மத்தியநிலையமாக தொழிற்படும் மத்தியநிலையத்தில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் இருவரே இவ்வாறு அலைபேசியை எடுத்துச்சென்றுள்ள னர்.

அவ்விருவர் தொடர்பிலும் விசாரணைகளை நடத்தி பரீட்சைகள் சட்டத்தின் பிரகாரம் ஆகக்கூடுதலான தண்டனை வழங்கப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை மண்டபத்துக்குள் அலைபேசியை எடுத்துச்செல்வது தடையாகும். அவ்வாறு அலைபேசியை எடுத்துச் செல்கின்ற பரீட்சார்த்திகளைக் கண்டால் அவர்கள் தொடர்பில் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னரேனும் ப்ரீட்சைகள் திணைக்களத்துக்கு தகவல் தருமாறு ஏனைய பரீட்சார்த்திகளிடம் ஆணையாளர் கேட்டுக கொண்டுள்ளார்.

### மைத்திரி...

சிறிசேனவும், இவ்வாறான தலைவர்களைப் பின்பற்ற விரும்புவதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நாம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் தொடர்ச்சியாக பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதுடன், தமிழ் மக்களுக்குரிய சரியான அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்தி வருகின்றோம் என்றும் கூறினார்.


நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2015

(தேர்தல் மாவட்டம்-வன்னி)



செ.ஸ்ரீராமச்சந்திரதாஸ்



X 9

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பீ.டி.பீ.)

# தேர்தல் பிரசாரங்களில் பாதாள உலகக்குழுவினர்

## சுட்டிக்காட்டுகிறது கபே



(கொழும்பு)

பாதாளக் குழுவினர் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, அம்பாந்தோட்டை மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் அரசியல்வாதிகளுடன் பாதாளக்குழு உறுப்பினர்களும் பிரசாரங்களில் ஈடுபட்டு வருவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டார்.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்களிலேயே பாதாளக்குழு உறுப்பினர்களின் நடமாட்டம் அதிகளவில் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த சூழ்நிலையில், எதிர்வரும் பத்து நாட்களுக்குள் பாதாளக் குழுவினர் ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளும் நிலைமையைத் தடுப்பதன் ஊடாக மாத்திரமே சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கான சூழலை ஏற்படுத்த முடியும் எனவும் கீர்த்தி தென்னக்கோன் கூறினார்.

இதேவேளை, தேர்தல் நடவடிக்கைகளில் பாதாளக்குழு உறுப்பினர்கள் தொடர்புபட்டுள்ளமை குறித்து தமது அமைப்பிற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் ரசாங்க ஹரிஸ்சந்திர தெரிவித்தார்.

பொதுத்தேர்தலுடன் தொடர்புடைய பெரும்பாலான சம்பவங்களுடன் குறிப்பாக மேல் மாகாணத்தில், பாதாளக்குழு உறுப்பினர்கள் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பாதாளக்குழு நடவடிக்கைகளை ஒழிப்பதற்காக உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையம் பொலிஸ் மா அதிபர் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# இலங்கையில் தேர்தல் அமெரிக்கா எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அங்கு தேர்தலை ஒட்டி வன்முறைகள் இடம்பெறலாம் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்குச் செல்லும், இலங்கையில் வதியும் தமது நாட்டுக் குடிமக்கள் இத்தகைய தேர்தல் வன்முறைகள் குறித்து அவதானமாக இருக்குமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உள்ளூர் ஊடகங்களை அமெரிக்க குடிமக்கள் தொடர்ச்சியாக கண்காணித்து வர வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

அமைதியான முறையில் நடக்கின்ற பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் வன்முறையாக திரும்பலாம் என்பதால், இத்தகைய பேரணிகள், போராட்டங்களில் பங்கேற்பதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் தேர்தல் வன்முறைகள் இடம்பெறலாம் என்று ஏற்கனவே, அவுஸ்ரேலியா உள்ளிட்ட நாடுகள் எச்சரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஊடகங்களுக்கு பூரண சுதந்திரம்

ஊடகங்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எந்த விடயத்தையும் பற்றி எழுதுவதற்கு ஊடகங்களுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்களை ஊடகங்கள் தற்போது அம்பலப்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வெள்ளை வான்களினால் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல்கள் எதுவும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# தனக்குத்தானே சேறு பூசும் நடவடிக்கையில் சந்திரிக்கா

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தனக்குத்தானே சேறு பூசிக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலான அறிக்கை ஒன்றை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதி ஏற்பட்ட மாற்றத்தை பாதுகாக்க வாக்களிக்குமாறும், புதிய தேசம் ஒன்றை கட்டியெழுப்புவதற்காக கிடைத்த வெற்றியினை இல்லாதொழிப்பதற்கு போட்டியிடுகின்ற பிரதிநிதிகள், மக்களால் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து ஊடகவியலாளர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவிடம் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த அவர்,

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய பின்னர் கட்சிக்குள் செயற்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டதனால் ஏற்பட்ட வைராக்கியம் அவரிடம் குறையவில்லை.

அவரால் விடுக்கப்பட்டுவரும் அறிவிப்புகள் காரணமாக அவருக்கே பாதிப்பு ஏற்படுகிறது என நான் நினைக்கின்றேன்.

அவருக்கு மதிப்பளிப்பவர் என்ற வகையில் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொள்ளும் நிந்தை என்ன என்பதையும், யாருக்கு பாதிப்பு என்பதையும் அவர் நன்கு உணர்கின்றார்.

அவரது தந்தை, தாய் உருவாக்கிய கட்சிக்கே அவர் பங்கம் ஏற்படுத்துகின்றார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும், அவரது



கணவருக்கும் நக்சலைட்டுடன் தொடர்புள்ளதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அத்துடன் தனது புதல்வரை கொழும்பு ரோயல் கல்லூரியில் சேர்ப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்த நிலையில் அதனை அன்று கல்வியமைச்சராக இருந்த தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தடுத்தார் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா ஊடகமொன்றுக்கு தெரிவித்திருந்தார்.

தனிப்பட்ட நபருக்கு அவர் தாக்குதல் நடத்தவில்லை. அவரது தந்தை ஏற்படுத்திய கட்சிக்கே அவர் பாதிப்பை ஏற்படுத்துகின்றார் என்றார்.

# பெண்களுக்கான வழக்குகளை விசாரிப்பதற்கு தனி நீதிமன்று

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

பெண்களுக்கு எதிரான தொந்தரவுகள் மற்றும் துன்புறுத்தல்களை விசாரிக்க நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விசேட நீதிமன்றம் அமைப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மொரவக்க பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இதனை கூறியுள்ளார்.

பெண்களுக்கான விசேட நீதிமன்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொண்டு வரும் செயல்முறை துரிதப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தால், தேசிய பெண்கள் அதிகார சபையை ஏற்படுத்துவதற்கான மகளிர் உரிமைகள் தொடர்பான சட்டமூலம் கொண்டு வரப்படும் எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

TONER HOUSE

உங்கள் வீடுகள், நிறுவனங்கள், மற்றும் வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட கண்காணிப்புக் கமெராக்களை இன்றே பொருத்திடுங்கள் ...



ClearVid CMOS sensor

4 Ch Packege — 29900/=
4 Ch DVR 1
800 TVL CMOS Camera 4
500GB HDD 1
BNC 8
DC Jack 4
Power pack 12V5A 1
Camera Stand 2
3C 2V Cable 50M
Power Cable 50M

8 Ch Packege — 46900/=
8 Ch DVR 1
800 TVL CMOS Camera 8
01TB HDD 1
BNC 16
DC Jack 8
Power pack 12V10A 1
Camera Stand 4
3C 2V Cable 100M
Power Cable 100M

free mobile view
free internet view

Effio

4 Ch Packege — 46900/=
4 Ch HD DVR 1
750 TVL SONY Camera 4
500GB HDD 1
BNC 8
DC Jack 4
Power pack 12V5A 1
Camera Stand 4
3C 2V Cable 50M
Power Cable 50M

8 Ch Packege — 79900/=
8 Ch HD DVR 1
750 TVL SONY Camera 8
01TB HDD 1
BNC 16
DC Jack 8
Power pack 12V10A 1
Camera Stand 8
3C 2V Cable 100M
Power Cable 100M

free mobile view
free internet view

AHD Analog High Definition

4 Ch Packege — 49900/=
4 Ch AHD DVR 1
1.3MP 960P AHD Camera 4
500GB HDD 1
BNC 8
DC Jack 4
Power pack 12V5A 1
Camera Stand 2
3C 2V Cable 50M
Power Cable 50M

8 Ch Packege — 89900/=
8 Ch DVR 1
1.3MP 960P AHD Camera 8
01TB HDD 1
BNC 16
DC Jack 8
Power pack 12V10A 1
Camera Stand 4
3C 2V Cable 100M
Power Cable 100M

free mobile view
free internet view

DVR , HDDVR, AHDDVR
Sony Effio Cameras, Cmos Camers
AHD (1.0MP, 1.3MP) Cameras
IP (1.0MP, 2.0MP) Cameras
PTZ Cameras, PTZ Stands
Power pack (12V 1A - 30A)
BNC Connector DC Jack
DVR Rack, DVR Cabinet .
போன்றவற்றை உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(C/3886)

அதிநவீன cctv camera, alarm system போன்றவற்றை வட பிராந்தியத்தில் மிக குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் எம்மால் நிறுவிக் கொடுக்கப்படும்.

குறிப்பு:- உங்கள் கணனிகளிலும் கைத்தொலைபேசிகளிலும் பார்வையிடும் வசதியும், ஒரு வருடத்திற்கான பராமரிப்பு சேவையும் இலவசமாக வழங்கப்படும்.

No. 195/2, Parameswara Junction, Palaly Road. T.P: 021 300 3399 Mob: 0775 427 426

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஆகஸ்ட் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை ரூ. 2.00

# மாலை முரசு

தேர்தல் கால மாலைப் பதிப்பு

09.08.2015 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள் - 4

அழிவா! - ஆக்கமா!!
மக்கள் தீர்ப்புக்கு
இன்னமும்
7
நாட்கள் மட்டுமே!

# விருப்புவாக்கு மோதலுக்கு ஆயுதக்குழுக்களே காரணம்

## - சாடுகிறார் சுமந்திரன் -

தமிழ் தேசியக்கூட்டமைப்பில் உள்ள கட்சிகளில் சில முன்னாள் ஆயுதம் தாங்கி போராடிய அமைப்பினை சேர்ந்தவை. முன்னைய காலங்களில் அவை சகோதரப்படுகொலைகளில் ஈடுபட்டவை. அதன் தொடர்ச்சியே கூட்டமைப்பினுள் அண்மை நாட்களில்தேர்தல்பிரச்சாரநடவடிக்கைகளில்ஏற்பட்டுள்ளகுழப்பங்களெனதெரிவித்துள்ளார்எம்.ஏ.சுமந்திரன்.

அவர் வெளியிட்ட இந்த கருத்து தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஈபிஆஉஎல்எப் ரெலோ புளட்ட ஆகிய அமைப்புகளை பெரும் சீற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

கிளிநொச்சியில் சிறீதரனின் ஆட்கள் சுரேஸ் பிறேமச்சந்திரன் மற்றும் சரவணபவனின் ஆட்களை தாக்கியுள்ளனர். அதேபோலஉடுப்பிட்டியில்தனது ஆதரவாளரொருவர் சுரேஸ் பிறேமச்சந்திரன் கோஸ்டியால் தாக்கப்பட்டுள்ளார எனவும் தெரிவித்த சுமந்திரன் சகோதர கொலைகளில் ஈடுபட்ட தரப்புகளே தற்போதைய

சம்பவங்களின் பின்னணியில் உள்ளதாக தெரிவித்தார்.

தமிழ் மக்களது ஒற்றுமை பற்றி பேசும் நீங்கள்

(02 ம் பக்கம் பார்க்க)



## பிறந்தநாள் கொண்டாட்த் தடை

70 வயதுக்கு உட்பட்டவர்கள் பிறந்தநாள் விருந்தளிக்க கூடாது என்று சீனாவின் டோங்ஜியாங் மாவட்ட நிர்வாகம்அதிரடியாகஉத்தரவுபிறப்பித்துள்ளது.

70 வயதுக்கு மேற்பட்டவர்கள்

(02 ம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பின் மீது அதிர்ப்தியில் ஆயர்

## தெரிவிக்கிறார் மன்னார் குருமுதல்வர்



மன்னார் ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகை அவர்கள் சரியாக பேச முடியாத நிலையிலும், பக்கவாதத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையிலிம் இருக்கிறார். இந்த நிலையில் அவர் சார்பில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் என்ற சாரப்படவெளியானதாககூறப்படும்அறிக்கையை மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்திரு. ஏ.விக்ரர் சோசை அவர்கள் மறுத்துள்ளார்.

மிகவும் கவலைக்கிடமான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளார் எமது ஆயர்.

நீண்ட காலமாக ஆயர் நோயுற்றிருந்த போதும் அவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவரும் சென்று பார்வையிடவோ, நலன் விசாரித்து ஆயருக்கு ஆறுதல் கூறவோ இல்லை. என்ற அதிருப்தியில் ஆயரும்அவர் சார்ந்த தரப்பினரும் உள்ளனர். இந்த நிலையில் தமிழ்த். தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்று கூறுவதை யாரும் விரும்பவில்லை என்றும்குருமுதல்வஉ தெரிவித்தார்

மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை கடந்த 3 மாதங்களாக கடுமையான நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.அவர் உடல்நலம் பெறவும் அவர் ஆற்றிய பணிகளை தொடர்வதற்கும், அளிக்கப்பட்ட சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில், சிங்கப்பூரில் 6 வாரங்கள் சிகிச்சை அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில நாட்களில் ஆயரை சிங்கப்பூர் கொண்டு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அதற்கான செலவாக கிட்டத்தட்ட ஒருகோடி ரூபா தேவைப்படுகிறது என்றும் தெரிவித்த அவர் தேர்தல் விளம்பரங்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட்டுவரும் கூட்டமைப்பினர், ஆயருக்கு உதவ முன்வரவில்லை என்பதால் ஆபர் அவர்கள் கடுமையான அதிர்த்தியில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கறுவாக்காட்டானுக்கு கிளிநொச்சியில் என்ன வேலை தபால்மூல வாக்களிப்பில் சுமந்திரனை மிரட்டிய சிறிதரன்

எதிர்வரும் 17ம் திகதி இடமபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்புக்கள் நேற்றுடன் முடிவடைந்தன.


கடந்த சில தினங்களாக இடம்பெற்ற தபால்மூல வாக்களிப்பின் இறுதிநாளான நேற்று கூடுதலாக அரசாங்க ஆசிரியர்களே வாக்களித்திருந்தனர்.

இந்த ஆசிரியர்களுக்கான வாக்களிப்பின்போது கிளிநொச்சிப் பகுதி ஆசிரியர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டார் சிறிதரன்.

விருப்பு வாக்கினை தனது இலக்கத்திற்கு அளிக்க வேண்டுமென அவர் ஆசிரியர்களை நிற்பந்தித்தாகத் தெரிய வருகிறது. இதனை அங்கிருந்த ஆசிரியர் ஒருவர் மற்றொரு வேட்பாளரான சுமந்திரனுக்கு தெரியப்படுத்த அவர் சிறிதரனை தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்த அடாவடித்தனத்தை உடன் நிறுத்துமாறு கூறியதாகவும் அறியமுடிகிறது.

இதன்போது இருவருக்குமிடையில் பெரும் வாய்தர்க்கம் இடம்பெற்றுள்ளதாகவும்,கறுவாக்காட்டானுக்குகிளிநொச்சியில் என்ன வேலையென சிறிதரன் தெரிவித்தாகவும் அங்கிருந்த

(02 ம் பக்கம் பார்க்க)



# தூக்கிவீசப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் 17 இன் தீர்ப்பை பதிவுசெய்யும் காட்சி



# தேசியக் கட்சிகள் வேண்டாம் என்கிறார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உபதலைவர்



இலங்கையின் தேசியக் கட்சிகளுக்கு வாக்களித்து உங்களது வாக்குகளை வீணாக்க வேண்டாமென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உபதலைவரும் அக்கட்சியின் ஊடாக தேசியப் பட்டியல் எம்பியாகி பிரதியமைச்சராக இருந்தவருமான புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதியான கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

> **இலங்கையின் முக்கிய தேசியக் கட்சிகளின் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவரான கருணா அம்மான் அந்தப் பதவியிலிருந்து விடுவித்துக் கொள்ளாமலேயே இந்தக் கருத்தை வெளியிட்டதானது அவரின் அரசியல் கோமாளித் தனத்தையும், சந்தர்ப்பவாத சிந்தனையையும், அறியாமையுமே வெளிப்படுத்துகின்றன.**

நேற்று முன்தினம் அவர்விடுத்துள்ள அறிக்கையின் ஊடாக இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. மக்களாகிய நாம் விளிப்புடன் இருக்க வேண்டும் நடைபெறப்போகும் தேர்தல் தமிழ் மக்களுக்கு முக்கியமான தேர்தலாகும்.

எமது உரிமைகளை நிலை நிறுத்த மீண்டும் ஒருமுறை கிடைத்துள்ள இந்த வாய்ப்பை சுயநலம் பாராது நாம் பயன்படுத்த வேண்டும். தமிழ் மக்கள் பிரிந்து நின்று வாக்களிக்காது ஒற்றுமையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தமது வாக்குகளை அளிக்க வேண்டுமென அவர் தெரிவித்தார்.

இலங்கையின் முக்கிய தேசியக் கட்சிகளின் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவ ரான கருணா அம்மான் அந்தப் பதவியிலிருந்து விடுவித்துக் கொள்ளாமலேயே இந்தக் கருத்தை வெளியிட்டதானது அவரின் அரசியல் கோமாளித் தனத்தையும், சந்தர்ப்பவாத சிந்தனையையும், அறியாமையுமே வெளிப்படுத்துகின்றன.

புலிகள் அமைப்புக்குஎதிரான மஹிந்த அரசின் போர் முன்னெடுப்புக்கு உறுதுணையாக இருந்து புலிகளின் அழிவுக்கும் முள்ளிவாய்க்கால் மக்கள் அழிவுக்கும் காரணமாயிருந்தவர்களில் முக்கியமானவர்கருணா அம்மான் என்பது குறிப்பிடத்தக்கது.

**பிறந்தநாள்...**

கூட 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் தங்கள் பிறந்த நாள் கொண் டாடட்டத்தில் ஈடுபட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சீனாவில் பிறந்தநாளின்போது உறவினர்களுக்கும், நண்பர் களுக்கும் விருந்தளிக்க வேண்டும் என்பதும் அதற்கு பதிலாக அவர்கள் பரிசுப் பொருட்களை அளிக்க வேண்டும் என்பதும் கட்டாயம் என்பது போன்ற கலாச்சாரம் பரவியுள்ளது. இது மக்களுக்கு தேவையற்ற செலவுகளை ஏற்படுத்துகிறது. பணக்காரர்களுக்கு இது பெரிய பிரச்சினை இல்லை என்றாலும், நடுத்தர மக்கள் பலர் இதற்காக கடன் வாங்கும் சூழ்நிலைக்கு தள்ளப் படுகின்றனர்.

மேலும் பிறந்த நாள் கொண்டாட்டம் என்பதை பலர் தங்கள் செல்வாக்கை காட்டும் வகையில் ஆடம்பர நிகழ்ச்சியாக நடத்தி வருகின்றனர். மது விருந்து, அதிரடி இசை நிகழ்ச்சி போன்றவற்றால் நிம்மதி கெட்டு சமூகத்தில் பிரச்சினை ஏற்படு கிறது. எனவே பிறந்தநாள் விருந்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ள தாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த உத்தரவுக்கு எதிர்ப்பும், வரவேற்பும் ஒரு சேர கிடைத்துள்ளது. பிறந்த நாளின் போது ஒருவரை வாழ்த்தி பரிசளிப்பதும், அதற்கு ப்தி லாக அவர் விருந்தளிப்பதும் பல ஆண்டு காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனவே இதற்கு தடை விதிப்ப்து தவறானது என்று எதிர்ப்பாளர்கள் கூறியுள்ளனர்.

**விருப்புவாக்கு...**

விருப்பு வாக்குகளிற்காக தானே இவ்வாறு மோதுப்பட்டு வன்முறைகளில் ஈடுபடுகின்றீர்களென ஊடகவியாலஉகளினால் எழுப்பபப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் இனத்தின் பொது நன்மை குறித்து தேர்தல்முறைமைகள்தொடர்பிலானஅரசியலமைப்பு மாற்றத்தில் விருப்புவாக்கு நடைமுறையினை நீக்குவது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என மழுபலான பதிலை அழித்தார்.

**கறுவாக்காட்டானுக்கு...**

ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினுள் விருப்பு வாக்கிற்கான போட்டிகளும் தம்மை மட்டும் முன்னிலைப்படுத்தும் பிரச்சாரங்களும் அதிகரித்து வரும் நிலையில் இந்த சம்பவமானது அவர்களிடையேயான பதவிப் போட்டியை மேலும் வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றது.

## தமிழர் உரிமைக் கோஷங்கள், தடல்புடலான விளம்பரங்கள், வீராப்பாய் சமர்கள் விருப்பு வாக்குப் போட்டிகள்

# சிந்திப்பாயா..? தமிழா



**யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை 17 ஆம் திகதி காலைப் பொழுதில் நீங்கள் எடுப்பதாக இருந்தாலும் உங்கள் வாக்கை யாருக்கு அளிக்கிறீர்களோ அவர்(கள்) உங்கள் மனச்சாட்சிக்கு ஏற்புடையவராக உள்ளாரா...? என்பதை மட்டும் முன்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.**

முன்பெல்லாம் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது எப்படி சுகம் என்ற கேள்வியோடுதான் உரையாடலைத் தொடங்குவர்.

ஆனால் இது தேர்தல் காலம் என்பதால் சுகம் பற்றி யாரும் வினவுவது இல்லை.

தேர்தல் காலத்தில் மனநிலை பாதிப்பு எல்லோருக்கும் இருப்பதால், எவரும் சுகமாக இருக்க மாட்டார்கள் என்ற அடிப்படையில் எப்படிச் சுகம் என்ற கேள்வி தற்காலிகமாக ஓய்வெடுத்துள்ளதாகக் கருதிக்கொள்ளலாம்.

எனினும் எப்படிச் சுகம் என்ற இடத்தை தேர்தல் என்ன மாதிரி என்ற கேள்வி பிடித்துக் கொண்டது.

தேர்தல் என்ன மாதிரி என்ற கேள்வியோடு தேர்தலில் எந்தெந்தக் கட்சிகள் வெற்றிபெறும். யார்யார் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவர் என்ற விடயங்கள் ஆராயப்படும். இந்த ஆராய்ச்சியில் தமக்குச் சார்பானவர்களை பாராளுமன்ற உறுப்பினர்களாக்கி வாதிடுவதும் நடந்தேறும்.

தேர்தல் காலம் என்றால், விமர்சனங்கள், வாதப் பிரதிவாதங்கள், வாக்குவாதங்கள் இடம்பெறுவது வழக்கம்.

இருந்தும் வட புலத்தில் தேர்தலுடன் தொடர்புபட்ட வாக்குவாதங்கள் தமிழ் மக்கள் மத்தியில் அறவே ஏற்படவில்லை என்பது அதிசயமான உண்மை.தேர்தல் குறித்த வாக்குவாதங்கள் மக்கள் மத்தியில் இடம்பெறாமை நல்லதுதானே என்று கூறினாலும் அதன் மறுபக்கம் தேர்தல் பற்றி ஆராய்கின்ற அளவில் மக்களுக்கு தேர்தலில் அக்கறை இல்லை என்ற பொருள்படுத்தலும் உள்ளது.

ஒருகாலத்தில் பொதுத் தேர்தல் என்றால் ஊர் முழுவதும் தேர்தல் மயமாக இருக்கும். கட்சி ஆதரவாளர்கள் தங்கள் கட்சிக்காக அரும் பாடுபடுவர். பொது மக்கள் களத்தில் இறங்கி தத்தம் சார்புக் கட்சிகளுக்காக வேலை செய்வார். இப்போதெல்லாம் அந்த நிலைமை மலை ஏறிவிட்டது.

தேர்தலில் மக்களுக்கு வெறுப்பு. கடந்த காலங்களில் நடந்த தேர்தல்களும் அதில் நாம் அளித்த வாக்குகளும் அந்நேரத்தில் வேட்பாளர்கள் தந்த வாக்குறுதிகளும் அர்த்தமற்றுப் போனதால், தேர்தல் என்ன மாதிரி என்ற கேள்விக்கு பதினேழாம் திகதி யோசிப்பம் என்பது பலரது பதிலாகவுள்ளது.

இறைவா! தமிழர் உரிமை பற்றிய கோக்ஷங்கள், தடல்புடலான தேர்தல் விளம்பரங்கள், இணையத்தளங்களிலும் முகநூல்களிலும் நடந்தேறும் கருத்துச் சமர்கள் இப்படியெல்லாம் நடந்து கொண்டிருக்கும் போது, யாருக்கு வாக்களிப்பது என்பது பற்றி ஆகஸ்ட் 17 ஆம் திகதி முடிவெடுக்காலம் என்று மரியாதைக்குரிய பொதுமக்கள் கூறுகின்றனர் எனில், எங்கள் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களிடம் எந்தளவு தூரம் அரசியல் கட்டுமானத்தை அமைத்துள்ளனர் என்பது தெரியவருகின்றது. எது எப்படியாயினும் எதிர்வரும் 17ஆம் திகதி பொதுத் தேர்தலும் அதற்கான வாக்களிப்பும் 18 ஆம் திகதி தேர்தல் முடிவும் வெளிவருவது உறுதி.

ஆகையால் அன்புக்குரிய தமிழ் மக்களே! யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை 17 ஆம் திகதி காலைப் பொழுதில் நீங்கள் எடுப்பதாக இருந்தாலும் உங்கள் வாக்கை யாருக்கு அளிக்கிறீர்களோ அவர்(கள்) உங்கள் மனச்சாட்சிக்கு ஏற்புடையவராக உள்ளாரா...? என்பதை மட்டும் முன்கூட்டியே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஏனெனில் உங்கள் வாக்குகள் தான் முன்னரும் எங்களுக்கான பாராளுமன்ற உறுப்பினர்களைத் தந்தது. இனியும் தரப்போகிறது. ஆகையால் சோதரர்களே! எழுமின்! விழிமின்! சிந்தனை செய்மின்! புள்ளடி இடுமின்!

– வலம்புரி

## மொக்கனின் முனகல் - 7



# காணாமல் போனது வித்தியா கொலை அம்பலமாகியது தேர்தல் அரசியல்

மாகாண சபையில நாங்கள் வெண்டுட்டம் இனித் தமிழனை தமிழனே ஆளுவான். இனி அந்த மாதிரி ஆட்சி நடக்கப்போகுது எண்டு எல்லாரும் சொல்லிச்சினம். கூட்டமைப்பாரும் புழுகிச்சினம். நாங்களும் நம்பினம். ஆனால் நடந்தது என்ன என்ன? தண்ணிப் பிரச்சினை, சட்ட ஒழுங்குப் பிரச்சினை எண்டு எல்லாப் பிரச்சினையும் பெருத்துக் கொண்டுவருகுது.

புங்குடுதீவில நடந்த விசயம் எங்கட ஊர் உலகத்தில இனி எவருக்கும் நடக்கக்கூடாது எண்டு மொக்கன் சொல்லுறான். சங்கதியைக் கேட்ட நாள் தொடங்கி மொக்கி ஒரே ஒப்பாரி. சமையல் சாப்பாட்டிலும் அக்கறை இல்லை. மொக்கனுக்கும் 3 நாளா வயிறு காஞ்சுது. போனமுறைதான் மொக்கன் கதிர்காமத்துச் சிங்களச் சகோதரி பிரேமாவதியை பற்றிச் சொல்லியிருந்தன். அதோட எங்கட முதல் பெண் போராளி தியாகி சோபாவைப் பற்றியும் சொல்லியிருந்தன்.

இண்டைக்கு வித்தியாவின்ர துயரமான சாவு நடந்து முடிஞ்சு விட்டுது. இனித்தான் ஒரு முடியாத கதை ஒண்டு தொடங்கப் போகுது. அது தொடங்கிவிட்டுது. மொக்கன் ஒரு அளவான பருவமா இருக்கேக்க கச்சேரி சத்தியாக்கிரகத்துக்கு சனம் எழுச்சி கொண்டு பங்குபற்றிச்சுதுகள். அப்ப மொக்கனும் போனவன்தான். இண்டைக்கு 55 வருசத்துக்குப் பிறகு அப்படிப்பட்ட ஒரு மக்கள் எழுச்சியை மொக்கன் பார்த்தான்.

மொக்கனுக்கு இப்ப வயசு போட்டுது. முந்தி எண்டால் இந்த அநியாயத்தை அறிஞ்ச உடன மொக்கன் வெட்டுக்கத்தியோட வெளிக்கிட்டிருப்பான். அந்த நாயளைப் பிடிச்சு மடக்கி பால் முத்திக் கொடூரம் செய்த தண்டுகளை எல்லாம் துண்டு துண்டா வெட்டிச் சீவி றோட்டில போட்டிருப்பான். மொக்கனுக்கு ஒரு அளவான வயசில



வடமராட்சி கரவெட்டி சுடலை ஒண்டில ஊர்க்காமுகன் ஒருவன்ர ஆண் உடம்புத்தண்டு வெட்டப்பட்டுத் தனியாக் கிடந்தது. மொக்கனுக்கும் அந்த யோசினைதான் வந்தது. ஆனால் யோசனை வந்துதான் என்ன? யாரும் தள்ளி விழுத்தினால் பிடிச்சு எழுப்பிறதுக்கு 2 பேர் தேவைப்படுகுது. மனசுக்குள்ள புழுங்கிக்கொண்டு பொருமிக்கொண்டு இருக்கவேண்டியதுதான். மொக்கியும் இவங்கள் புழுத்திச்சாவானுகள், பாழ்பட்டுப் போவானுகள் எண்டு இராப்பகலா திட்டிக்கொண்டே இருக்கிறாள். இதுக்குள்ள மொக்கனுக்கு மனசுக்குள்ள ஒரேயொரு ஆறுதல். ஆம்பிள, பொம்பிள, கிழடுகள், சிறுசுகள் எண்டு பேதம் இல்லாமல் சனம் எழுச்சிகண்டு நிண்டதுகள் எண்டதுதான்.

1972ஆம் ஆண்டு எங்கட கல்வியைக் கொடுக்கிறதுக்கெண்டு சிறிமா அரசாங்கம் தரப்படுத்தலை கொண்டு வரேக்க ஒரு மாணவர் எழுச்சி ஏற்பட்டது. அந்த எழுச்சிதான் போராளிப் பொடியங்களை உருவாக்கிச்சுது. அந்தப் பொடியங்கள்ள இருந்துதான் இயக்கத் தலைவர்மார் எல்லாம் வந்தவை. இண்டைக்கும் அந்த தலைவர்மார் சிலர் இருக்கினம்.

இப்ப இருக்கிற தலைமைகள் நல்லாப் பயன்படுத்தி உருப்படுத்தி எடுக்கவேணும். இதைத்தான் மொக்கன் இண்டைக்குக் கேட்கிறான். டக்ளஸ் தம்பிக்கும் இதில ஒரு பெரிய பங்கு இருக்கு. வித்தியாவின்ர விசயத்தில கனபேற்ற வேசம் வெளிச்சுப் போச்சு. வரப்போற எலெக்சன்ல முக்கியமான ஒரு வேட்பாளர் என்று கதை அடிபட்ட சட்டத்தரணி தமிழ்மாறன் எப்படிப்பட்டவர் எண்டதை ஊர் உலகம் அறிஞ்சிருக்குது. கடைகெட்ட காமுகன்களை எல்லாம் காப்பாத்த வெளிக்கிட்ட வெள்ளை வேட்டி கள்ளரையெல்லாம் சனம் நல்லாக் கண்டு கொண்டுதுகள். தமிழ்நாட்டில ஆச்சிரமத்தில வந்து சேர்ந்த அவலைப் பிள்ளைகளை கதறக் கதற கற்பழிச்சுச் சீரழிச்ச கள்ளச்சாமி பிரேமானந்தாவை குருவாகக் கொண்ட வெள்ளைவேட்டி குங்குமப்பொட்டு விக்கி ஐயா போன்ற எல்லாரும் எப்படிப்பட்டவை எண்டதை சனம் இப்பத்தான் நல்லா விளங்கிக் கொண்டுதுகள். பாதகனுக்கு அடிவிழக் கூடாது எண்டு கையை நீட்டித் தடுத்த விஜயகலா அம்மையாரைப் பற்றியும் எங்கட பொம்பிளையள் எல்லாருக்கும் விளங்கியது. தேஉதல் வரட்டும் எண்டு சனம் காத்துக்கொண்டு இருக்குதுகள்.

இவனுகள்தான் எங்களுக்குத் தலைவர்மாரா என்று மொக்கனும் கேட்கிறான். மொக்கியும் கேட்கிறாள். கொடூரமாய் செத்துப் போனாள் வித்தியா. ஆனால் முள்ளிவாய்க்காலில் முடிஞ்சுபோச்சு எண்டு இருந்த எங்கட வாழ்க்கையில ஒரு எழுச்சியைத் தந்திட்டுப்போன வரலாற்றுத் தியாகியாய் என்றும் வித்தியா இருப்பாள். அவள் இண்டைக்கு செத்துப் போனாள்.

உண்மைதான். ஆனால் எங்கட தமிழ்ச்சாதி சனம் இருக்கும்வரை அவள் வாழத்தான் போகிறாள். அப்பிடி இல்லையா? என்று மொக்கன் கேட்கிறான். "கற்பூரக் காட்டினிலே கனல் வந்து வீழ்ந்ததம்மா..."

# தேர்தல் ஆயுதமாகும் தமிழ்ழ வரைபடமும் பிரிவினையை ஆதரிக்காத விஜயகலாவும்

தான் ஒருபோதும் தமிழ்ஈழக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை யென்றும், எதிர்காலத்திலும் அதனை ஆதரிக்கப் போவதில்லையென்றும் பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.தமிழ் ஈழம் வரைபடத்தைக் கொண்டதான எனது தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஏற்றிக் கொண்டு பயணித்த 65-9815 என்ற இலக்கத்தகடு உடைய வாகனத்தை பயன்படுத்தியதாக தனக்கு எதிராக தேர்தல்கள் செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களை முற்றாக மறுப்பதாகவும் விஜயகலா மகேஸ்வரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பில் அவர் கட்சியின் செயலாளருக்கு விளக்கக் கடிதமொன்றையும் அனுப்பி வைத்திருந்தார். மிதக்கும் வாக்குகள் எனது பக்கம் அதிகரித்துவரும் நிலையில் அதனை சகித்துக்கொள்ளாத சில சக்திகள் எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலான பிரசாரங்களை முன்னெடுத் துள்ளன.

தமிழர்களின் தாயகப் பகுதியை வேறுபடுத்திக்காட்டும் வரைபடத்துடன் தமது தரப்பு வேட்பாளர்களின் படங்களையும் உள்ளடக்கிய போலியான பிரசாரங்களை மக்கள் மத்தியில் சிலர் முன்னெடுத்திருப்பதாகவும், தென்னிலங்கையில் இனவாதத்தை தூண்டும் நோக்கில் இவ்வாறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான பிரசாரங்களுக்கும் எனக்கும் எதுவித தொடர்பும் இல்லை. இதனை நான் முற்றாக மறுக்கின்றேன். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இலங்கையில் சிங்கள மக்களைப் போன்ற சகல இன மக்களும்



சமமான அந்தஸ்துடன் வாழவேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும என அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# தேசியத் தலைவர் பிரபாகரனா? மைத்திரியா?

## தெரிவிப்பாரா? அங்கஜன்





ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்மாவட்ட முதன்மை வேட்பாளராக வெற்றிலைச்சின்னத்தில் போட்டியிடுகிற வடமாகாணசபை உறுப்பினர் அங்கஜன் அவர்களும் தேர்தல் பிரச்சார நடவடிக்கை களில் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வருகிறார்.


கடந்தவாரம் வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் இடமபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றிய அங்கஜன் தேசியத் தலைவர் பிரபாகரன் வழியிலேயே தான் செயல்படுவதாக தெரிவித்தது அங்கிருந்த மக்களை வியப்பில் ஆழ்த்தியது.

ஸ்ரீலங்கா சுதந்தரக்கட்சியின் வேட்பாளரான அங்கஜன் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை தனது தலைவரெனவும், தான் வெற்றி பெற்றால் அவரால் அமைக்கப்படும் அமைச்சரவையில் தான் ஒரு அமைச்சராக வருவேன் எனவும் சூழுரைத்து வருவது மக்கள் அறிந்ததே.

இந்த நிலையில் தென்னிலங் கையில் ஆளும் அரசாங்ககங்களும் அதன் படையணிகளுமே, தனது பரம எதிரிகள் என செயற்பட்ட பிரபாகரனை தேசியத் தலைவரென விழிப்பது ஒரு தேர்தல்கால கபட நாடகமென புலிகள் அமைப்பின் முன்னால் போராளி ஒருவர் தெரிவித்தார்.

இதுபோன்ற, புலிகள் அமைப்பின் தியாகங்களை தமது சுயநல அரசியலுக்காக மக்கள் மத்தியில் பயன்படுத்தும் அனைவரும் மக்களால் தூக்கியெறியப்படுவார்களெனவும் அந்தப் போராளி ஆதங்கம் வெளியிட்டார்.

# சிறிதரனை சாடுகிறார்சிவசக்தி ஆனந்தன் சூடு சுறணை அற்றவர்கள் இவர்கள்



நல்லூர் செட்டித்தெருவில் நடைபெற்ற தமிழரசு கட்சியின் பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசிய வேட்பாளர் சிறீதரன் அவர்கள் 1987ம் ஆண்டு இந்திய இராணுவத்தினர் தன்னை கைது செய்து தாக்கியதை விட அப்போதிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் வினர் தன்னைத்தாக்கியது தனக்கு இன்னும் வலித் துக்கொண்டிருப்பதாக ஓர் புதிய கதையை அவிழ்த்து விட்டு அனுதாபம்தேட முற்பட்டுள் ளார். இது பத்திரிகையிலும் ஓர் செய்தியாக வெளிவந்திருக்கிறது. இதன் காரணமாக இதற்குப் பதில் சொல்லவேண்டிய அவசிய மும் செய்திக்கு மறுப்பு தெரிவிக்க வேண் டிய தேவையும் எமது கட்சிக்கு ஏற்பட்டிருக் கிறது.

2010ம் ஆண்டு தேர்தலின்போது இந்த வலியைப்பற்றி பொதுமக்களுக்கு சொல்ல ;வேண்டிய அவசியம் ஏன் அவருக்கு ஏற்படவில்லை? அத்தேர்தலில் போட்டியிடு வதற்கு முன்பாக சுரேஸ் பிரேமச்சந்திர னுடைய பாராளுமன்ற வாசஸ்தலத்துற்குச் சென்று தேர்தலில் போட்டியிட தனக்கு ஓர் ஆசனம் வேண்டுமென்று கேட்டபோதும் ஏன் வலிக்கவில்லை?

தான் செய்தவற்றையும் செய்ய இருப் பதைப் பற்றியும் தனது கொள்கையையும் விபரித்து வாக்குகேட்க முடியாமல், விருப்பு வாக்கில் பின்தள்ளப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் கூட்ட மைப்புக்குள்ளேயே சேறடிக்கும் முயற் சியை ஆரம்பித்துள்ளார்.

வட்டக்கச்சியில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்க முற்பட்ட சுரேஸ்பிரேமச்சந் திரனின் ஆதரவாளர்கள் சிறீதரனின் ஆட் களினால் அச்சுறுத்தப்பட்டு தாக்க முனைந்த ;போது பொலிசார் தலையிட்டு தடுத்துநிறுத்தினர்.கூட்டமைப்பின்வேட்பா ளர் சரவணபவனின் ஆதரவாளர்களுக் கும் இதேநிலை ஏற்பட்டிருந்தது. இவ் வாறான நடவடிக்கைகள் கூட்டமைப்பை சீர்குலைப்பதை நோக்கமாககொண்டதா? என்ற கேள்வியும் எழுகின்றது.

குப்பி கடிக்காதவர்கள் போராளிகள் அல்ல என வவுனியாவில் அவர் பேசிய பேச்சொன்றை தான் அவ்வாறு பேச வில்லை அவ்வாறு பேசி இருந்தால் அதனை நிரூபிக்கும்படியும் சவால்விட் டிருந்தார். ஆனால் அவர் அப்படித்தான் பேசினார். இதனை அக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் உடனயாகவே பத்திரிகைகளுக்கு அறிவித்திருந்தனர்.

இப்பொழுது சிறீதரனிடம் ஒரு கேள்வியை கேட்க விரும்புகின்றோம். 28 வருடங்களுக்கு முன்பு அதாவது 1987ம் ஆண்டு எங்கே எப்பொழுது யார் ஏன் அவருக்கு அடித்தார்கள் என் பதை அவரால் நிருபிக்கமுடியுமா? அல்லது இவ்வாறு ஓர் புனைகதையை கூறினால் மக்கள் நம்பிவிடுவார்கள் அதன்மூலம்தனதுதவறுகளைமறைத்து அனுதாப வாக்குகளைப் பெறலாம் என்ற நரித்தனமா?

தேர்தலில் வாக்குச் சேகரிக்க இத்தகைய கீழ்த்தரமான வேலைகளில் கூட இவர் ஈடுபடுவார் என்பதை நினைக் கும்போது அவரது நேர்மையின் மீது சந்தேகம் வருகிறது. கூட்டமைப்பின் ஓர் அங்கமான தமிழரசுக்கட்சி வேட்பா ளர்கள் அவதானமாகப்பேசுவதுநல்லது என்பதை அக்கட்சியின் தலைவர்கள் புரிந்துகொண்டு வேட்பாளர்களுக்கு தகந்த ஆலோசனைகளை வழங்குவார் கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

ந.சிவசக்தி ஆனந்தன் பொதுச் செய லாளர், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

தமிழ் த் தேசியக் கூட்டமைப்பின் ஏக சொந்தக்காரரான தமிழரசுக் கட்சி என்ன கூறினாலும் வெட்கம் மானம் சூடு சுரணை ஏதும் இல்லாமல் தமிழரசுக் கட்சியுடன் தொடர்ந்தும் ஒட்டிய வண்ணமே இருப்பர் சுரேசும் சிவசக்தி ஆனந்தன் குழுவினரும் பதவிக்காக.

வடிவேலு பாணியில் சொல்வ தெண்டால்.நாம்வெளியேறமாட்டோம் ஏன் எண்டால் அவர்கள் எங்களுக்கு பதவி தாறது என்று சொல்லிடாங் களடா? (ஏன் அண்ணை ஏன் வலிக் கலை அவன் என்னை ரொம்ப நல்லவேண்டு என்று சொல்லீட்டாங் கள்டா..). சுரேஷ் குழுவினருக்கு தமிழசுக் கட்சி கொடுத்த சூடு இது முதற தடவை அல்ல கடந்த காலங்களிலும் பல தடவை நடைபெற்றறே இருகின கின்றது. இது அவர்களுக்கு பழகிவிட் டது. என்கிறான் பாமரன்.

# முஸ்லீம்களை புறக்கணித்த தமிழ்க் கட்சிகள

எதிர்வரும் 17ம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிற யாழ்மாவட்டத் தமிழ்க் கட்சிகள் எதுவும் ஒரு முஸ்லிம் பிரதிநிதியையாவது தமது வேட் பாளர் பட்டியலில் இணைத்துக் கொள்ள வில்லை.

வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பூச்சி சின்னத் தில் போட்டியிடும் ஜனநாயகப் போராளி கள் அமைப்பு, சைக்கிள் சின்னத்தில் போட்டி யிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, வீணைச்சின்னத்தல் போட்டியிடும் ஈழமக் கள் ஜனநாயகக் கட்சி ஆகிய எந்தத் தமிழ்க் கட்சிகளும் முஸ்லீம் பிரதிநிதி ஒரு வரை தமது வேட்பாளராக சேர்த்துக் கொள் ளாதது. முஸ்லீம் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 1990ம் ஆண்டு யாழ்ப்பா ணத்தை தமது கட்டுப்பாட்டில் வைத் திருந்த புலிகள் அமைப்பினரால் வட பகுதியில் இருந்த முஸ்லீம் மக்கள் இர வோடு இரவாக உடுத்த உடையுடனே அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டது வரலாறு.

இதன் போது யாழ்மாவட்டத்திலி ருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக் கள் புத்தள மாவட்டத்தில் மீள்குடியேறி மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து வந்த னர். 2009ம் ஆண்டு நாட்டில் ஏற் படுத்தப்பட்ட அமைதிச் சூழலுக்கு பின் னர் வெளியேற்றப்பட்ட முஸ்லீம் குடும் பத்தினர் படிப்பபடியாக தமது சொந்த இடங்களில் குடியேறி வருகின்றார்கள்.

யாழ் மாவட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட பல நூற்றுக் கணக்கான முஸ்லீம் குடும்பங்கள் மீள்குடியேறிவருகின்றனர். இவர்களது மீள் குடியேற்றத்தின் பின்னர் இவர் களில் சிலர் சமூக அரசியல் நடவடிக் கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக கடந்த யாழ்மாநகர சபைத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாய கக் கட்சி இவர்களில் நால்வரை தமது வேட்பாளர்களாக நிறுத்தி அவர்கள் வெற்றி பெற்றிருந்தார்கள்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யைத் தவிர வேறு எந்தத் தமிழ்க் கட்சி களும் தம்முடன் தொடர்பில் இருக்க வில்லையென முஸ்லீம் பிரதிநிதிகள் நீண்டகாலமாக வருத்தம் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் யாழ் மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகள் எதுவும் முஸ்லீம்பிரதிநிதிகள் எவரையும்,தமது வேடபாளராக நிறுத்தாமையானது அந்த மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இல. 372, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அற்புதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. A Special Edition of "Thinamurasu"